28714

உ

கணபதி துணை.

# வீரவனப் புராணம்.

திரிசிரபுரம் மஹாவித்துவான்

ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்

வடமொழி முதல்நூலிலிருந்து மொழிபெயர்த்தியற்றியது.

இது,

ஸ்ரீ உமாம்பிகாஸமேத ஸ்ரீவீரசேகரநாத

பக்தஜனஸபையாருடைய பொருளுதவியைக்கொண்டு,

இந்நூலாசிரியர் மாணாக்கரும்

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

சென்னபட்டணம்:

வைஜயந்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சோபகிருது௵ வைகாசிமீ

1903

*Copyright Registered.*

# இப்புத்தகத்திலடங்கியவை.


| | | பக்கம். |
|---|---|---|
| ௧. | முகவுரை. | 1. |
| ௨. | இப்புத்தகத்தைப்பதிப்பிக்க முயன்றவர்கள் இன்னார் இன்னாரென்பது. | 3. |
| ௩. | படல அகராதி. | 4. |
| ௪. | வீரவனப்புராணம். | ௧. |
| ௫. | அரும்பதவுரை. | ௬௰௩. |
| ௬. | பிழையும் திருத்தமும். | ௧௱௭. |
| ௭. | இந்நூலிலுள்ள முக்கியமான பாகங்கள். | ௧௱௫. |

கணபதிதுணை.

# முகவுரை.

வீரவனமென்பது, திருப்பெருந்துறைக்கு மேற்றிசையில் காதவழித்தூரத்தில் உள்ளதொரு சிவஸ்தலம்; வில்வாரணியம், வீராரணியம், வீரை, வீரையூர், அலகை, சாக்கைக்கோட்டை, சாக்கநூர், சாக்கையென்றும் வழங்கும்.

விநாயகர்திருநாமங்கள்: சுந்தரவிநாயகர், அழகுவிநாயகர் என்பன.

ஸ்வாமியின்திருநாமங்கள்: வீரசேகரநாதர், திருமுடிக்கநாதர் என்பன.

அம்பிகையின்திருநாமங்கள்: உமை, உமையாம்பிகை, உமாம்பிகை, உமையாண்டாளென்பன.

தீர்த்தத்தின் திருநாமங்கள்: சிவகங்கை, சோமதீர்த்தம், சத்திய தீர்த்தமென்பன.

ஸ்தலவிருக்ஷம்: வீரவிருக்ஷம். இக்காரணத்தின்பெயர் தென்மொழியில் வீரையென வழங்கும். இது முன்னொருகாலத்திற் சுகுணபாண்டியனென்னும் அரசனுக்குண்டாகிய ஐயத்தை நீக்கும்பொருட்டு ஸ்ரீவீரசேகரநாதருடைய திருவருளால் பலாமரமாகிப் பின்பு தன்னுருவம்பெற்ற பெருமையையுடையது.

வழிபட்டுப்பேறுபெற்றோர்கள்: வீரனென்னும் வேடர்பெருமான், அவன்மனைவியாகிய சுமதி, காவிரிப்பூம்பட்டினத்தரசனாகிய கண்டனென்னுஞ் சோழன், அவன்தேவியாகிய சுசீலை, அவன்புதல்வனாகிய வீரசேகரச்சோழன், சுகுணபாண்டியன், குபேரன், அந்தணனொருவன், ஆயனொருவன், திருமால், இராமன், திருப்பெருந்துறை அந்தணர்களாகிய மூந்நூற்றுவர் முதலியோர்கள்.

மேற்கூறிய விசேடங்களையுடையதும், மிகப்பழமையானதும், புகழ்பெற்றதுமாகிய இந்தவீரவனத்தின் புராணத்தை வடமொழி முதல்நூலிலிருந்து பெயர்த்து இனிய செய்யுள்நடையாக இயற்றியவர், கவிஞர்பெருமானும் மஹாவித்துவானும் என்னுடைய தமிழாசிரியருமாகிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள்.

இப்புராணம், முதலில் அழகுவிநாயகக்கடவுளின் துதிமுதலிய பலதுதிகளடங்கிய கடவுள்வாழ்த்தும், அவையடக்கமும், சிறப்புப்பாயிரமும் முறையே அமையப்பெற்றுப் பின்னர், திருநாட்டுப்படலமுதலிய பதினான்கு படலவுறுப்புக்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது. இதன் செய்யுள்தொகை, ௲௱௪.

இப்புராணத்தின் இனிய செய்யுள்நடையும், பொருளமைதியும், நூலாசிரியர் சரித்திரங்களைச் சொல்லிக்கொண்டுபோகுமழகும், இடையிடையே பலவகையாகப் புலப்படுத்தியிருக்கும் சிவோத்கருஷங்களும், சிவஸ்துதிகளும், ” ண்மைநாயன்மார்களுடைய சரித்திரங்களை அங்கங்கே உபமானங்களாக எடுத்துக்காட்டியிருக்கும் பகுதிகளும், இடையிடையே அமைத்திருக்கும் பத்திச்சுவையும், வினாவிடைகளும், வேறு ஸ்தலபுராணகதைகளுள் அரியனவற்றை எடுத்துக் கூறியிருக்கும் பாகங்களும், பிறவும் மிகப்பாராட்டற்பாலன.

இங்ஙனம் பெருமைவாய்ந்த வீரவனப்புராணத்தை அரும்பதவுரையுடன் பதிப்பித்தலில் எனக்குப் பொருட்கவலை இல்லாமலிருக்கும்படிசெய்த, ஸ்ரீ உமாம்பிகாஸமேத ஸ்ரீ வீரசேகரநாத பக்தஜன ஸபையாருடைய பெருந்தகைமை மிக மதிக்கற்பாலது.

இங்ஙனம் தூண்டி ஆதரிப்போர் சிலரேனுமிருப்பின் மஹோபகாரிகளாகிய இந்நூலாசிரியரியற்றிய அரியபெரிய இனியநூல்கள் பலவற்றுள் இதுவரையில் அச்சிடப்படாமலிருப்பனவைகளைப் பதிப்பித்து யாவரும் எளிதிற்பெற்றுப் படித்துப் பயனடையும்படி செய்தற்கு அனுகூலமாக இருக்கும். திருவருள் துணைசெய்யவேண்டும்.

இவ்வரியநூலைப் பதிப்பிக்கும்படிசெய்த நல்வினையின்பால் மிக்க நன்றியறிவுடையேன்.

[வெண்பா.]

துன்றுபலத் தோளான் சுகுணவழு திக்குமரம்
ஒன்றுபல வாம்வினை யூர்முறையோன் - நின்றுபல
ஆயதிறும் பூதோ வளகைப் பரன்கருணை
ஏயதெனின் முற்றுத தென்.

இங்ஙனம் :

வே. சாமிநாதையன்.

உ

சிவமயம்.

## இப்புராணத்தைப் பதிப்பிக்கமுயன்றவர்கள்
## இன்னா ரின்னாரென்பது.

---

## இடையாற்றுமங்கலம் ம-ள-ள-ஸ்ரீ,
## வை. அநந்தராமையரியற்றியசெய்யுட்கள்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பூமேவு மன்னமுகை யன்னமுங்கா ணாதமுடிப் புராண ரென்றுந்
தாமேவு முடித்தழும்பர் வீரசே கரரெனும்பேர் தன்மைத் தாங்கி
மாமேவு முறைமையொடுவீற் றிருந்தருளும் வீரவன மான்மி யத்தைத்
தூமேவு நைமிசத்திற் சவுனகா தியர்க்குரைத்தான் சூத மேலோன்.

அன்னவன்முன் வடமொழியி லுரைத்தபுரா ணத்தையெளி தருந்த மிழ்க்கட், சொன்னயமும் பொருணயமுந் தொடைநயமு நடைநயமுந் துலங்கச் செய்தான், பன்னவனா ரென்றிடிற்சி ராமலை யிற் றமிழ்செய்தவப் பயனாத் தோன்று, மன்னவனாற் குணக்கடலா மீனாட்சி சுந்தரநா வலவ ரேறே. (உ)

சாலநயஞ் சார்ந்திடுமிப் புராணகாப் பியமான தமிழ்நூ றன்னைக், கோலமுறு திருத்தளியின் னைந்தெரித்தல் போற்பெயர்கொள் கோபி லாரின், பாலமருஞ் சிதம்பரநற் றூரவனிடை ஞான நூல் பயின்றெரு ழுக்கான், ஞாலமிசை யிசைமேவிப் புதுவயல்வா ழழகப்ப நாமத் தோனார். (௩)

கூறுபுது வயல்வாழ்வோன் வினைதீர்த்த வேள்புதல்வன் குறைவி லாச்சீ, ரேறுநய சுகுணமிகு மியல்புடையான் வீரப்ப னெனு ம்பே ரோனும், வீறுபெறு முயன்றெழுதா வெழுத்தினியை வித் துற்ப வித்த தற்குப், பேறுபுக ழெனப்பெற்றா ரிவர்களுடை முய ற்சியெம்மாற் பேசற் பாற்றே. (௪)

---

# பாடல் அகராதி.

பக்கம்.


| | |
|---|---|
| அவையடக்கம் ... ... ... ... | ௪ |
| உமையாண்டாள் மகிமைப்பாடல் ... ... ... | ௮௨ |
| கடவுள் வாழ்த்து ... ... ... ... | ௧ |
| குபேரன் பூசைப்பாடல் .. ... ... ... | ௫௯ |
| சத்தியபுட்கரிணிப்பாடல் ... ... ... | ௬௬ |
| சிறப்புப்பாயிரம் ... ... ... ... ... | ௫ |
| சோழன் திருப்பணிப்பாடல் ... ... ... | ௩௫ |
| சோழன் பகர்பெற்று முத்தியடைந்தபாடல் ... ... | ௪௮ |
| தலமுதலிய விசேடப்பாடல் ... ... ... | ௮௯ |
| திருநகரப்பாடல் ... ... ... ... | ௧௪ |
| திருநாட்டுப்பாடல் ... ... ... ... | ௫ |
| திருமால் பூசித்தபாடல் ... ... ... ... | ௭௧ |
| நைமிசவனப்பாடல் ... ... ... ... | ௨௫ |
| பெருமான் பொதிசோறு நிவேதனஞ்செய்தபாடல் ... | ௭௭ |
| வீரசேகரர் திருமுடித்தழும்புற்றபாடல் ... ... | ௩௰ |
| வீரராகவப்பாடல் ... ... ... ... | ௭௪ |
| வீணை பலாவாகியபாடல் ... ... ... | ௫௪ |

V. B. SUBRAHMANIYASARMA,
TAMIL PANDIT.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# வீரவனப் புராணம்.

## கடவுள் வாழ்த்து.

### அழகுவிநாயகக்கடவுள்.

சீர்பூத்த பொதுவடியர் சிறப்படியர் பாற்பொதுவுஞ் சிறப்பு நாளுங்
கூர்பூத்த வவருயிரா மெய்ப்புணர்வு மாய்ப்பொலிதல் குறிப்பிற் றோன்ற
நார்பூத்த பொதுச்சிறப்புப் புணரெழுத்தா லாமழகு நாமம் பூண்டு
கார்பூத்த வீரவனத் தமர்கடாக் களிற்றினடி கருதி வாழ்வாம். (க)

### வீரசேகரநாதர்.

பூமேவு காதரனுஞ் சீதரனு மோதரனும் புகழ்ந்து போற்றத்
தேமேவு பொற்பகத்தார் கற்பகத்தார் புனைகுவவுத் திண்டோள் வேந்தும்
பாமேவு விண்ணவரு நண்ணவருங் குறைத்தென்னும் பயனே நல்கி
மாமேவு வீரவனத் தமர்வீர சேகரர்தாள் வணக்கஞ் செய்வாம். (உ)

பரசுகழுக் கடைசூலம் பினாகமலை சுவற்றுகணைப் பகழி யாதி
விரசுபல தொழிற்படா விதமெதிர்த்த பகைமுருக்கி வீரந் தோற்றி
யரசுமுதல் வானோரு மேனோரும் போற்றெடுக்க வமர்தற் கேற்ப
வரசுகுண வீரவனத் தமர்வீர சேகரர்தாள் வணங்கி வாழ்வாம். (ங)

### உமையம்மை.

எமையம்மை யடையாம லிம்மையினெவ் வகைநலமு மெய்தி யான்ற
கமையம்மை வரும்பணியக் கண்டனமென் பார்குழுவுட் கலப்பித் தாள்வா
ளமையம்மை புயங்குழலாக் கொடுவீர சேகரர்பா லருளின் மேய
வுமையம்மை திருவடியா மிருபோது முப்போது முன்னி வாழ்வாம். (ச)

பாயமலர்க் கருங்குழலுஞ் செவ்வாயும் வெண்ணகையும் பசிய தோளு
மேயவருள் பொழிவிழியுந் திருமுகமு மங்கலப்பொன் மிடறுந் தேசி
னாயபர ஞானநிறை கொங்கையுஞ்செங் கையுமருங்கி னவிர்செம்பட்டுந்
தூயமறை முடிபுணரா வுமையம்மை திருவடியுந் துதித்து வாழ்வாம். (ரு)

சபாநாயகர்.

படிமுதனு லிரண்டாய தூலமே னியுமனுமுற் பகரா ருய
மடிவரிய சூக்குமமே னியுமதிசூக் குமமேனி மயமே யாகக்
கடிதலிலா வவ்வதிசூக் குமமேனி நோக்கியுளங் களிப்ப வேத
முடிபுரையு மணிமன்று ணடநவிலும் பெருவாழ்வை முன்னி வாழ்வாம். (சு)

சிவகாமியம்மை.

எச்சமெனல் சிலதவிரச் செயவெனும்வாய் பாட்டுவினை யெச்ச மும்பார்
மெச்சவினை முதலினொடு பிறவுமேற் றிடுமெனுஞ்சொல் வீணே யாகக்
கச்சமிலின் புயிரடைய நடங்காண்பா ளென்றறிஞர் கருதி யேத்த
விச்சமது கண்டுவப்பித் தருள்பரிபூ ரணிபதமுண் ணிறுத்திவாழ்வாம். (எ)

தக்ஷிணாமூர்த்தி.

விதியமையப் படைத்தலரி புரத்தல்வேண் டாவுருக்கொள் விதத்திற் கேற்ப
மதியமையப் படித்தல்குரு மொழிகேட்டல் சாதனநன் மாண்பி னிற்றல்
பதியமையத் திருவடிபிடே கங்கோடல் வேண்டாத பண்பிற் றுனே
பொதியமையப் பொலிகல்லா லடியமரா சிரியனடி புகழ்ந்து வாழ்வாம். (அ)

வயிரவக்கடவுள். வேறு.

ஈங்கோபா மாறங் கோநின் னிகலெறி குவமென் றெண்மு
ணுங்கோபா தரவா யஞ்சொ லணங்குறை நாவி னூனும்
வேங்கோபா நலக்கூ ராழி விண்டுவெந் துணுக்குற் றஞ்சச்
சாங்கோபாங் கங்கைப் பெற்ற சதுரனுந் தம்பி ரானே. (கூ)

அழகுவிநாயகக்கடவுள். வேறு.

பொழிகரட மதகயவ தனமுமதி லொருகோடும் புழைக்கை வீச்சுங்
குழிவிழியு நால்வாயும் படுபுகரும் பெருவயிறுங் குறிய தாளு
மொழிவில்கரு மூடிகமும் படைத்தழகு விநாயகனென் றொருபேர் பூண்டு
பழிதபவாழ் வித்தகனை வினைந்துதுதி புரிந்துபதம் பணிந்து வாழ்வாம். (கo)

முருகக்கடவுள்.

பொருவருமொண் பசுமுகிலே மயிலதன்மே லிளங்கதிரே பொலங்கூர் மேனி
வெருவருமக் கதிருமிழ்ந்த மதிக்கலையே புண்டரமா விளங்கு நீறு
மருவருமக் கலைவளைந்த வுடுக்கணமே மார்பின்முத்த வடமென் றுய்ந்தோ
ரொருவருமன் பொடுதுதிக்க மகிழ்முருக னிருசரண முளங்கொள் வாமே.

திருநந்திதேவர். வேறு.

ஐந்தொழின் முதல்வ னுயை வைந்துமா முகத்தோன் றேற்ற
வைந்தெழுத் துண்மை தேறி யைந்தெனுந் தடையு நீத்திட்

டைந்திண்மே லருட்க லப்புற் றைந்தெனு நிலையி னின்ற
வைந்தரு வுடையான் பாத மைந்துறப் பாலுந் தாழ்வாம். (கஉ)

அகத்தியமுனிவர்.

நள்ளுபு வருந்தும் வானோர் பநிந்துயர் நாசஞ் செய்வா
னுள்ளுபு கடனீர் முற்று மோருழுந் தளவைத் தாக
வள்ளுபு பருகிக் கங்கை யாற்றினை யடக்கி வண்சீ
ரெள்ளுபு பொலியுஞ் சீர்பெற் றிருப்பவன் றுணைத்தாள் போற்றி. ()

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

தருகலி யாண மென்று தகுமுத னிலையி லாது
வருதொழிற் பெயர்க்கு முத்தி மாண்பொரு ளென்ப ராய்ந்தோர்
பெருமண நல்லூ ரந்தப் பேச்சுர வுறப்பு துக்கி
யொருவற வுலகுய் வித்த வொருவனுக் கன்பு செய்வாம். (கச)

திருநாவுக்கரசு நாயனார்.

சொல்லரும் படைக ளெல்லாந் தொழிற்பட வண்ணம் வைத்தே
வெல்லரும் பகையு றுப்பால் வெல்லும்வித் தகனே போன்று
புல்லருஞ் சூலம் பெற்றும் பொருதொழின் மாற்றித் தெவ்வை
யல்லரும் வாக்கால் வென்ற வண்ணலை யெண்ணு வாமே. (கரு)

சுந்தரமூர்த்தி நாயனார்.

நெருப்புமே னோக்கி நிற்கு நில்லாது நீரவ் வாறென்
றருப்புநீர் ஞாலங் கூறு மம்மொழி பழுதே யாக
விருப்புமே வையா றேக விழையொராற் றுறுநீர் வெள்ளிப்
பொருப்புநேர் நிற்கப் பாடும் புலவனுக் கடிமை செய்வாம். (கசு)

மாணிக்கவாசக சுவாமிகள்.

உயிர்முழு தடிமை மற்றைப் பொருண்முழு துடைமை யென்னுஞ்
செயிரினன் மொழியுட் கொண்டு சிவபிரா னுக்கே தன்னை
யயர்வரு மடிமை யாக்கிப் பொருளுமற் றவற்கே யாக்கி
மயர்வரு மின்பம் பெற்ற வாதவூர் முதலை யுள்வாம். (கள)

சண்டேசுர நாயனார்.

பண்ணருஞ் சிறப்பிற் பூசை பரமனைப் பெரிது செய்து
மெண்ணருந் தனைச்சற் றூர்வத் தினியபூ சனைசெய் யாரேற்
கண்ணரும் பயன்கா ணாராய்க் கழிந்துமா ழாந்து சோர
நண்ணரும் பெருமை பெற்ற நம்பனைப் புகழ்ந்து வாழ்வாம். (கஅ)

### அறுபத்துமூவர். வேறு.

அளவி றிமை யமைந்தவென் னுள்ளமு
மளவி னன்மை யமைந்தகண் ணுகச்செய்
தளவில் சீர்த்தி யறுபத்து மூவரு
மளவி லாவரு ளாலமர் வாரரோ. (௧௯)

### பஞ்சாக்கரதேசிகர். வேறு.

இனியொரு பிறப்பு மெய்தோ மெடுத்தபல் பிறப்புஞ் செய்த
கனிதவப் பயத்தி னூலே காசினிப் பயனு யுள்ள
பனிமலர்ப் பொழில்சூழ் தென்னு வடுதுறைப் பதியின் மேய
புனிதநன் னமச்சி வாய குரவனைப் போற்று வோமே. (௨௦)

### அம்பலவாணதேசிகர். வேறு.

பரவுமறைப் பயனெனுமைந் தெழுத்தினைத் துந்தெரியப் பகர்ந்து நீராக்
கரவுதவிர்த் தொளிர்பதமுந் தலைச்சூட்டி யெனையாண்டு கருணை கூர்ந்து
விரவுபொழிற் றுறைசையிற்சுப் பிரமணிய தேவனெனும் விளங்கி யோவாக்
குரவுபுனை பரசிவனம் பலவாணற் கியற்றலொன்றுங் குறித்தி லேனே. (௨௧)

### மற்றைச்சிவநேசர்கள். வேறு.

வையகம் பரவும் வீர வனச்சிவ பெருமான் கோயின்
மெய்யகம் படித்தொண் டாற்றும் விருப்பினர் நீற்றுச் சார்பு
பொய்யகந் தவிர்த்துக் கொண்ட புண்ணிய ராய யார்க்கு
மையகம் படியச் செய்வா மரும்பெற லிலாப மோர்ந்தே. (௨௨)

---

## அவையடக்கம்.

தண்ணிய நீறு பூசித் தவாதகண் மணியுந் தாங்கி
யெண்ணிய வெழுத்தோ ரைந்து மிதயத்துப் பதித்து வாழும்
புண்ணிய வணிகர் கேட்ப வீரையூர்ப் புராணஞ் சூதர்
பண்ணிய மொழிபெ யர்த்துப் பாடுத லுற்றேன் மன்னே. (௧)

ஒருவன சரனை யாள்வா னுட்டுளே யிரும்பு தாக்கத்
திருமுடித் தழும்பொன் றேற்றான் சிறியனேன் றனையு மாள்வான்
பொருவருஞ் செவிவெ துப்பும் புன்சொலு மேற்பா னென்றே
திருவன ரவன் புராணந் தமிழினாற் செப்ப லுற்றேன். (௨)

மன்னவர் குலத்தோர் கண்டன் றனையருள் வழங்கிக் கொண்ட
முன்னவ னிழிகு லத்தோர் புளினனு முத்தி யெய்தத்

தன்னருட் கொள்ளு நீராற் சான்றவர் செய்யுட் கோளோ
டென்னிழி கவியுங் கொள்கை யெற்றைக்கும் வழக்கான் மன்னோ.(ரு)

வேறொன்று செய்கை வல்ல வித்தக னெனல் விளக்கப்
பாறொன்று சூலத் தண்ணல் வினையைப் பலவாச் செய்தான்
மாறொன்று சிறியேன் செய்யும் வழுக்கவி யனைத்து மான்றோர்
பேறொன்று கவிக ளாகப் பண்ணுதல் பெரிய தன்றே. (௬)

## சிறப்புப்பாயிரம்.

ஏற்றஞ்சால் பெருமான் வினை யிருந்தமிழ்ப் புராணஞ் செய்தா
னூற்றஞ்சால் கலைக ளெல்லா முண்மையே விளங்கத் தேர்ந்து
தேற்றஞ்சா லறிஞர் போற்றத் திரிசிரா மலையில் வாழுந்
தோற்றஞ்சால் புகழ்மீ னாட்சி சுந்தர நாவ லோனே.

ஆகத்திருவிருத்தம் உஎ.

## திருநாட்டுப்படலம்.

பரவு பேரருட் டிருவுரு வுமையொரு பாக
ரரவு சூடிய வீரசே கரரினி தமரு
முரவு சேர்தல முதற்பல கொண்டினி தோங்கிப்
புரவு மேவிய பாண்டிநாட் டணிசில புகல்வாம். (க)

அகனி லத்துயிர் முதற்பல வுயிர்களு மளித்தாங்
குகன்ம றுத்தரு ளொருத்தியை மகளெனப் பெற்று
மகனெ னப்படாப் பரமனு மருமக னாக
நகன்ம கிழ்ச்சியிற் பெற்றது பாண்டிநன் னாடு. (உ)

குன்று நேர்முலைத் தடாதகைக் கோமளக் கொழுந்தி
னன்று நீர்மணங் கண்டுவப் புற்றது மன்றி
யொன்று பேரெழிற் றெய்வதப் பிடியுயர் மணமு
நன்று கண்டுவப் புற்றது பாண்டிநன் னாடு. (ங)

சொல்ல நீடிய பெரும்புகழ்ச் சடைமுடி துணிந்து
வெல்ல வேறுவெண் ணீறுருத் திராக்கமிம் மூன்றும்

புல்ல வாதரித் தொருவர்பே ரருளொடு புரக்க
நல்ல மாதவம் புரிந்தது பாண்டிநன் னாடு. (௪)

மதிவி ராவிய சைவமே பொருளலால் வழுத்துந்
துதிவி ராவிய சமயம்வே றின்றெனத் துவன்று
பதிவி ராவிய நாடெலாந் தெளிதரப் பண்ணு
நதிவி ராவிய திறத்தது பாண்டிநன் னாடு. (௫)

மிக்க செல்வருங் கலைஞரும் விடுபடார் மேவத்
தக்க பொன்மணி யாகர மளவறத் தாங்கித்
திக்க வாவுறு விளையுண்முற் பல்லவுஞ் சிறந்து
நக்க மேன்மையிற் பொலிவது பாண்டிநன் னாடு. (௬)

மழைவளம்.

வெளியெ னப்படுஞ் சிவபிரான் மேனியில் வெண்ணீ
றொளிபெ றப்புனைந் தாங்குவெண் முகின்மிசை யுற்று
நளிக டற்புனல் குடித்துநால் வாயதள் போர்த்தாங்
களியு றக்கறுத் தொய்யென மீண்டும்விண் ணடைந்து. (௭)

பொங்கு வீரைநீர் வாய்வைத்துக் குடித்திடும் போழ்தத்
தெங்கு மொண்டுகிர்க் கொடிதடை யியற்றுத லெண்ணி
யங்கு நின்றெடுத் தவனியெண் கருபமு மறியத்
தங்கு மாற்றலி னிறைத்தெனத் தடித்துற வீசி. (௮)

பற்று வையக முய்யயாம் பொழிந்ததண் பாணி
வற்று மாகவர்ந் துடற்றிடு வேனிலின் வன்மை
யெற்று மாநில முணர்தர வதன்வலி யின்றே
முற்று மாபுரிந் திடுதுமென் றிடித்துற முழங்கி. (௯)

தங்கு தண்மைகூர் தமிழ்வரை முதற்பல சைல
மெங்கு மாதவத் தியைந்தவெப் பிரிதரப் பொதிந்து
கொங்கு வார்குழ லுமைமண வன்குறிப் பவர்பாற்
பொங்கு பேரருள் பொழிந்தெனப் பெருமழை பொழிந்த. (௧௦)

நீட்டு வான்புக ழிந்திர னாதியர் செறிந்து
கோட்டு மால்வரை களைச்சிவக் குறியெனக் குறித்துப்
பாட்டு மாமறை பகர்தரு சகத்திர தாரை
யாட்டு மாறெனப் பொழிந்ததா னகண்முகி லனைத்தும். (௧௧)

வரைநி றைந்தது மரம்பல செறிபெருங் கானத்
தரைநி றைந்தது தண்பணை யோடைசூழ் மருத
நிரைநி றைந்தது நெய்தலங் கைதைசூழ் கானற்
றிரைநி றைந்தது சிவவியா பகமென வெள்ளம். (கஉ)

வழுதி தன்பொரு ளாயினுங் கொடைத்தொழின் மாண்பாற்
பழுதில் வாதவூர்ப் பிரானையே பாரெலாம் புகழு
முழுதும் வாரிநீ ராயினு முகிலையே யன்றி
யெழுது ஞாலமவ் வாரியைப் புகழுவ திலையே. (கங)

மேய மாமழை மிகப்பெய்து முகிலெலாம் விளர்த்த
சேய வேரிகால் கலங்கனீர் நிறைதலிற் சிவந்த
காய வேமுயல் வேனில்செய் வெப்பெலாங் கரிந்த
பாய பாரிட மங்குரித் திடுபுலாற் பசந்த. (கச)

வேண்டு நீர்பொழி யாவிடிற் காற்பெரு விலங்கு
பூண்டு வாடுதெ லயர்த்திடா தியல்கரும் புயல்க
ளாண்டு நீர்பொழி வளஞ்சொல்வா ரெவர்திணை யைந்து
ளீண்டு வண்பெருங் குறிஞ்சியின் வளஞ்சிறி திசைப்பாம். (கரு)

குறிஞ்சிவளம்.

சந்த ஞசல முதலிய வரையெலாந் தழுவி
யெந்த நாளுநங் குமரவேள் காணிகொண் டிருந்து
வந்த நான்முக ஞதியோர்க் காரருள் வழங்கிப்
பந்த நாசமுஞ் செய்கின்றுற் சொல்வரைப் பண்பு. (கசு)

வள்ளி நாயகி நலமிகு காதலின் மருவி
வெள்ளி மால்வரைப் பிரான்மகன் வீற்றிருப் பதனை
யுள்ளி வானவர்க் கிறையினும் பேருவப் புற்றுத்
துள்ளி வாழ்குவர் பொருப்பரா வயின்வளந் தொகுத்தே. (கஎ)

தெய்வ யானையை வேட்டமு தமும்பல திருவு
மெய்து வானவ கிருக்கையை விருப்புறு வெம்மான்
கொய்ம லர்க்குழல் வள்ளியோ டேனன்மாக் கொண்டு
மெய்வ ளந்தழீஇ வரையமர் தரினெனத் திகுமே. (கஅ)

முருக வேளினி தமர்தலி ஞரண முடியோ
தருக வாழ்வென வருளுமை யாண்மடித் தலமோ

பெருக வாதரம் புரிபெருந் தொண்டர்த மனமோ
குருக வாவுகைக் கொடிச்சியர் குலாயவக் குறிஞ்சி. (௧௯)

நம்மை யாடரு வெள்ளிலை வேற்படை நம்பி
கொம்மை வெம்முலைக் கோற்றொடிக் கொடிச்சியோ டமருஞ்
செம்மை சேரிடஞ் சிவணுறி னுறும்பல சிறப்பென்
றம்மை மாரிகண் டாடுதோ கைகளவ ணமரும். (௨0)

அருளு ருக்கொடு பல்லுயிர் களும்புரந் தளிக்கும்
வெருளு ருச்சுடர் வேற்படைத் தம்பிரா னந்த
மருளு ருக்கொடு நமக்குமாட் சிமைவயக் கினனென்
றிருளு ருத்தபு மணிவரைத் திமில்பல விணர்க்கும். (௨௧)

கால காலர்தம் புயத்தினு முடியினுங் கமழும்
பால வாகிய மழவிளஞ் சேய்மலர்ப் பதத்தின்
மேல வாந்தவ முணர்ந்துவெவ் வராப்படம் பைத்தாற்
போல வாவயின் மலர்வன பொலிதருந் தோன்றி. (௨௨)

குளவன் மாமுடி யாட்டுதே லேனலிற் கொண்ட
வளநன் மாவொடுங் கலந்தினி தாட்டுதன் மதித்துப்
பிளவி லாவலாச் சாரலெங் கணுமிகப் பிறங்கி
யுளநி லாமிளங் கதிர்நிகர்த் தொளிர்செந்தேத் தடையே. (௨௩)

முழுது நம்முரு வேரம்பன் கொள்ளுமா முயன்றே
யெழுது சீர்மிக நமக்கியை வித்தசீ ரிளவல்
பழுது தீர்தர வமரிட மென்றுறப் பயில்வ
கொழுது பல்வரி வண்டுணைக் கடாம்பொழி குன்றம். (௨௪)

தோகை மாமயில் வாகனப் பிரானடி தொழுவா
ஞோகை கூரவெத் திணையினுள் ளவருமாங் குறுகை
யாகை யாலொரு திணையெனற் கடாப்பெருங் குறிஞ்சி
வாகை யென்சொலு முல்லையின் வளஞ்சிறி திசைப்பாம். (௨௫)

முல்லைவளம். வேறு.

வாய்ந்தபல விடங்களுளும் வைகுந்தஞ் சிறந்ததென
வேய்ந்தபரி சனஞ்சூழ வினிதமருந் திருநெடுமா
லாய்ந்தகட வுளுமாறு னம்மகவு மாய்வளர்ந்தான்
றேய்ந்தவன வளநோக்கி யென்னிலினிச் சொல்லுவதென். (௨௬)

திரையெறிபாற் கடற்றுயிலுஞ் செங்கண்மால் பாறயிர்நெய்
வரையறைதீர் தரக்கவரும் வாஞ்சையா னெனக்கருதி
யுரைசிறந்த முல்லைநிலத் தொழியாது பயிலுவன
தரைநனையப் பொழிதீம்பாற் றடஞ்செருத்தற் குடம்பலவும்.(உஎ)

தங்களினத் தொருபிணையைப் புணர்ந்தொருதை யலையின்று
திங்கண்முடிப் பரனிளஞ்சேய் தெவ்விமகிழ் தரக்கொடுத்து
நங்கள்குலக் கொருபெருமை நாட்டினு னெனக்குரங்க
மங்களவின் மாலையினு லமருமா வயினகலா. (உஅ)

தனியமரு மாலாய வையன்முலை தழுவுதற்குப்
பனியமரு மதியமுடி யந்திவா னிறப்பகவ
னனியமருங் காதலொடு நண்ணுபுநிற் றலைமானு
மினியமரும் பிறைதோய மிகப்பூத்த நிலைக்கொன்றை. (உகூ)

மணமகன்றன் முலைபுணர வந்தொருபா னிற்பதுணர்ந்
தணவுமொரு விளையாட்டா லம்புயக்கை வளையாழி
புணரவமை மான்மகளும் பல்லுருவம் பொருந்தியமர்
குணமெனவெங் கணுமமர்வ கொழுமலர்செற் றியகாயா. (௩0)

உருவுபல கொள்ளினுமியா னுனைத்தழா தொழிகுவலோ
மருவுதிற முணரென்று வடிவுதா னும்பலகொண்
டொருவுதலி லாப்பெருமா னுவந்தணையுந் திறயானும்
பொருவுதவிர் பன்மதலை கிளைகளிற்பூ வையைத்தழுவல். (௩க)

மாயவனை யெம்பெருமான் மகிழ்ந்துதழு வும்பொழுது
தூயவவன் மேனியிடைத் துவன்றியெழும் வேரொன்னப்
பாயமத லைக்கிளைகள் பல்பூவை மெய்வருட
வாயவழி யிழிந்தோடு மப்பூவை மலர்பொழிதேன். (௩உ)

மணங்குலவு பசுந்துளவ மல்கியவப் பெருவனத்தின்
குணங்குலவத் தெரிந்தொருமால் குடிகொள்ளா விடினளவா
வணங்குதிரை நிலமகளு மலர்மகளு மற்றையரு
மிணங்குதிறம் பலசெயினு மெய்தியமா லிரிப்பர்களோ. (௩௩)

மருவவொரு கால்விளர்த்து மற்றையொரு காற்கறுத்தும்
வெருவமகிழ் தரப்பயிலும் வியன்கொண்மூ வெப்பொழுது
மொருவரிய கருமைதரு மொருசரிய மாலென்றுந்
திருவமிகு பெருவனத்துச் செறிந்துவப்புச் செயுமழையால். (௩௪)

தொல்லைவர கெண்சாமை சொன்னல்பல பயறுமலிந்
தெல்லையிலா வளம்பொலிய வெண்ணில்பசுக் களுமலியக்
கல்லையொரு குடையாக்கொள் காருத்த னினிதளிக்கு
முல்லைவள மென்பகர்ந்தா மருதவளஞ் சிலமொழிவாம். (௫௬)

மருதவளம்.

தருநிதிய மணிசுரபி தண்ணமுதம் பரிகரியே
ருருவவயி ராணியரம் பையராதி யுவக்கும்வள
மருவியொளிர் விண்புரக்கும் வானவனே தெய்வதமாய்ப்
பொருவறக்காத் தளிக்குமெனிற் புகலவெளி தோபணைச்சீர். ()

தாம்பெருகற் கேதுவாய்த் தனையுமுகி லூரிறைவ
னோம்புநிலங் களிகூர வொண்பொருளை வளைவயை
பாம்புநதி மதுநதியென் றிவைமுதலாம் பற்பலவுந்
தேம்புதலி லாதுமிகப் பெருகிவருஞ் செய்கையவே. (௫௭)

செறுவொருமூ வகைப்படுவ சிலைத்துவரு நதிதாமே
யுறுபுனறந் திடக்கோட லுயர்ந்தகுலை யேரிகளாற்
பெறுவகையுந் திடக்கோடல் பெய்ம்முகிலா னிரம்பேரி
மறுவறநல் கிடக்கோட லெனவழுதி நன்னாட்டில். (௫௮)

ஓவுடைய முட்டிமத கூடுராய்ப் புகுந்தெழுந்து
பாவுடைய கால்வழிபோய்ப் பண்ணைதொறும் புனல்பரக்க
மேவுடைய களமரெலாம் விரைந்துமகிழ்ந் தெழுந்தார்த்துத்
தாவுடைய பகடுபிய ருங்கநெடு நுகங்கிடத்தி. (௫௯)

அந்தநுக நடுநாஞ்சி லமைந்தவேர்க் கால்பொருத்திச்
சந்தமுற மேழியிடக் கரந்தழீஇச் சிறுமுட்கோன்
முந்தவலக் கரம்பற்றி மூண்டமுயற் சியிற்செறிபுற்
பந்தமுழு தறவுழுதன் மேற்கொண்டார் பகடூரப்பி. (௬0)

உழுவாரு முழுதவள றட்குழையப் புனல்பாய்ச்சி
யெழுவாருந் தழையழுக விடுவாருங் கங்கரிந்து
வழுவாரு மவன்மேடு மாற்றிமக பதிபாதந்
தொழுவாரு மஞ்சொன்முளை தூயநாள் விதைப்பாரும். (௬௧)

வித்தியசொன் முளைபதிந்த வேலையுழு நீர்கழியத்
தத்தியநீர்க் கிழக்குமடை தனைச்சீத்துப் பின்சிறைத்து
மெத்தியமேக் குள்ளமடை தனைச்சீத்து வேண்டுபுனல்
பொத்தியகா தலிற்பாய்ச்சிப் பொருவறவோம் பிடுவாரும். (௬௨)

பருவமிது வெனநாறு பறித்தொருகைக் குணின்மோதி
மருவவுறு புனன்மண்ணி முடிசெய்து வாரிப்போய்த்
திருவமிகு பண்ணைதொறுஞ் சினந்தகலி யோட்டெடுத்து
வெருவநனி நடுவோரு மாயினர் விறற்களமர். (சங)

நட்டமுதல் சிவநேச நல்லவரங் கையிற்கொடுத்து
விட்டபொருள் சிறிதெனினு மிகப்பணைக்கும் பயனென்னப்
பட்டவய ருறும்பணைக்கப் பகர்கல்விக் கிடையூறாய்க்
கட்டமுறத் திடும்வறுமை போலடர்ந்த களைபலவும். (சச)

களைகளையும் பருவமிது வெனக்காட்டக் களமரெலா
மளையலவன் புகுந்தொளிக்க வந்தூம்பின் வராலொளிக்கக்
கிளையொடுஞ்செய் வளநோக்கக் கேகயம்வந் தடைந்தவெனத்
தளைகடொறு மாற்றுக்கா லாட்டியர்க டாம்புகுந்தார். (சரு)

கோகநக மலர்பறிப்பா ரதினிறைந்த மதுக்குடிப்பார்
மோகமிகக் குழற்கணிவார் முதிர்ந்தமயக் காலடுத்தா
ராகமெழு முலையிரண்டு மரும்பெனக்கை தொட்டிழுப்பார்
வேகமொடு முகநிழனீர்த் தடவுவரவ் வீயெனவே. (சசு)

ஆம்பன்மலர் பறித்திடுவா ரையகலை மதியொடுசேர்த்
தோம்பல்புரி யென்பார்போ லொள்ளியதம் முகத்தணைப்பார்
கூம்பலுறு நறுங்கரிய குவளைமலர் பறித்தலர்த்தித்
தேம்பலிடை யுமையாள்போற் செங்கைமலர்த் தாங்கிடுவார். (சஎ)

களைமுழுது மிவ்வாறு களைந்துகடை சியரகலத்
தளைமுழுது மிடரொழிந்த தவம்போலப் பயிர்பணைத்துக்
கிளைமுழுதுங் கருக்கொண்டு கிளர்வயிர வீட்டியென
விளைமுழுதுங் கொளக்கதிர்க ளீன்றுவிளைந் தனமாதோ. (சஅ)

கொழுத்தவலிப் புயமள்ளர் பலர்குழுமிக் குயமேந்திப்
பழுத்தகதி ரறத்தடிந்து வரிந்துதலைக் கொடுபடரை
விழுத்தகளம் புகுத்திநெடும் போர்வேய்ந்து மீளவுமம்
முழுத்தவளப் போர்சரித்துக் கடாப்பிணைத்து முடுக்கிடுவார். (சகூ)

மேருவலங் கொளுமுகில்போற் கடாவிடுத்து விடுத்ததற்பி
ஞரும்வியப் புறப்பலா லங்களைந்து நவைபோக்கிச்
சேரும்வள வெண்சாலி செஞ்சாலி வேறுகுவித்
தோருமள விட்டிடுவா ரோகைநனி தலைசிறப்ப. (ருo)

இறைகடன்மு னீவனவீந் தெஞ்சியதை மனைப்புகுத்தி
மறைநெறியிற் பிறழாது வகுத்தருபேடன் புலத்தார்முற்
குறையறுத்து மிகவாழுங் குடிகண்மிக மல்கியவே
நறைமலர்க்கற் பகநாட்டு நாயகனும் பிடுதினையுள். (௫௧)

கரும்புதடி பவரொருபாற் காமரரி சனமிஞ்சி
விரும்புவள மிகக்கொண்டு விடாதுகுவிப் பவரொருபாற்
சுரும்புமலர்ப் பொழில்வளங்க வென்றிடக்கொள் பவரொருபா
லரும்புகத லித்துடவை யணிவளங்கொள் பவரொருபால். (௫௨)

புதியபுன லாடுநரும் பூவையரு டலையுணர்த்திப்
பதியவனு பவிப்பவரும் பரத்தையரை முயங்குநருஞ்
சதியமைய வவர்நடங்கண் டுவப்பவரு மாய்த்தழையு
நிதியவயல் வளமெளிதோ நெய்தல்வளஞ் சிலபுகல்வாம். (௫௩)

நெய்தல்வளம்.

உகைக்குமடு திறற்சுறக்கோ டுறுபுணரிக் கோட்டுநிறீஇ
நகைக்குநறும் புன்னைக் கோட்டுமலர் நன்கணிந்து
தகைக்கும்வலி வலைஞர்தொழத் தகவருணன் வெளிப்பட்டு
முகைக்கும்வள மளித்தோம்பப் பெற்றுளது முதுநெய்தல். (௫௪)

தாலமது வுண்டுவெறி தலைக்கொண்ட பரதர்வளைக்
கோலமணி யெனப்புன்னை யரும்பள்ளிக் கொண்டிடுவார்
சாலவுமவ் வரும்பென்னத் தரளம்வா ரினரெறிவா
ரேலமயக் கறிவுடையி னிதுசெய்த விறும்பூதோ. (௫௫)

வலைவீசு கலவர்பல மயிலைகவர்ந் தமர்தோணித்
தலைவீசு புலால்கமழத் தாங்குவிப்பா ரதுகாலை
யலைவீசு மயிலைகளு மதில்வீழ்வ வாகூழிற்
புலைவீசு வறுமையறப் பொருள்பலவாற் றினும்படுமே (௫௬)

துறைமுழுகி யெழுபவர்கள் வறிதெழார் சுடர்முத்து
நிறைதுகிரும் வலம்புரியு நிலாமணியுங் கவர்ந்தெழுவா
ரறைசுவர்க்க போகமுநன் கடைகுவார் பேரிடத்தைக்
குறைவறவுற் றவர்க்குமொரு குறையுளதோ கூறுங்கால். (௫௭)

அப்புமீன் கலர்குவிக்க வனைத்தினையு நடுப்போழ்த
லுப்புநேர் செலுத்திடுத லுணக்கிடுதல் புள்ளோப்பல்
பப்புகாஞ் சனங்குவியும் படிவிற்ற லிவையனைத்துஞ்
செப்புநேர் முலைமடவார் செய்துவப்பர் நாடோறும். (௫௮)

கலமிழியு மதகரியுங் கருதுபுனல் பருகியெழு
பலமுகிலும் வேற்றுமைதோற் றுவண்ணம் பயின்றிடுவ
புலவுகமழ் வேலரசர் போர்புரியுந் திறமுணர்ந்து
சுலவுகருங் கொடியகலா பரத்தியர்தாந் துரப்பவுமே. (௫௯)

உரவுசெறி புவிமுழுது முய்யும்வகை முகில்பொழியக்
கரவுதவிர் புனலுதவிக் கதிரிரண்டு மெழத்தோற்றி
விரவுபல பொருளமைந்து மேன்மேலும் பொலிவெய்தற்
பரவுவள மென்னுனைத்தாம் பாலைவளஞ் சிறிதுரைப்பாம். (௬௦)

பாலைவளம்.

குரவுபா டலமுதற்றன் கோகநக மலர்ப்பாதம்
விரவுமா றேற்றுதல்செய் வெம்மறவர் வரைப்புயத்துப்
பரவுதார் நறுவாகை பரிந்தேற்றி யொருகன்னி
யுரவுசேர் தரக்காக்க வுள்ளதாற் பரன்முரம்பு. (௬௧)

பழுத்துநிறை பேரீந்தும் படுசுவையா மலகமுமண்
வழுத்துநறும் பாடலமு மருவாவேன் மைந்தர்தொட
ரெழுத்துமுலை மடவாருக் கிரும்பசியு நீர்நசையும்
விழுத்துமலர் குழற்கணியும் வித்தகமு முண்டாங்கொல். (௬௨)

பஞ்சின்மிதிக் கினும்பதைக்கும் பங்கயமென் மலர்ப்பாதத்
தஞ்சின்மலர்க் குழன்மடவா ருருங்கற்பு நிறைகாத்த
னெஞ்சின்மதித் தாடவரோ டெனினைந்து வருந்தாம
னஞ்சினழற் பாலுணவா நடவையிற்பல் புறவருந்தும். (௬௩)

பொருவருநா னிலத்தினுமேற் றொருதிணையாய்ப் பொலிதருநாம்
வெருவருமா முடிவேந்தன் விறல்வழுதி மகிழ்கூர
வொருவருமா லிகைமேன்மே லுறுத்துவமென் றுணர்ந்ததுபோற்
பருவருமா றொழிபாலை பற்பலவேம் புறவோம்பும். (௬௪)

கொழுநனுடன் றொடர்ந்துவரு கோற்றொடியார் தமைக்கண்டு
பழுதில்பொரி யிறைப்பதெனப் பன்முருங்கை பூவுதிர்க்கும்
செழுவியபா லையைப்புகழுந் திறத்தரெவர் திணைபலவும்
வழுவறவொன் றோடொன்று மயங்கியவண் ணமும்புகல்வாம். ()

திணைமயக்கம்.

வரையெழுபைங் கறிக்கொடிகள் வனப்பாடி வேலியெலாம்
புரையமையப் படர்ந்துபயன் றொறுவியர்க்குப் புரிந்துதவும்

விரைசெய்வனத் தளவெழுந்து விழுக்குறிச்சி வேலியெலா
மூரைகெழுமப் படர்ந்துபயன் கொடிச்சியருக் குதவுதவும். (சுசு)

பாயவனக் கோகிலங்கள் பண்ணேமாந் துணர்கொழுதத்
தாயபணைக் கிளிகானத் தொண்டைநறுங் கனிகவர்ந்து
மேயபரி வருத்தனைசெய் வித்தகங்காட் டிடுமிதுபோ
லாயவள னனியாங்காங் கமைந்ததுதென் றமிழ்நாடு. (சுஎ)

வயல்வயலை கருங்காஞ்சி வளைத்தெழுந்து வாம்புணரி
யயலமைபுன் னைகமுடி பற்றவலைக் கடற்பவள
மியல்கரும்புன் னைகம்வளைத் தெழுஉவயற்காஞ் சியைப்பற்றுஞ்
செயலமையு மதத்திருவர் சிகைபிடித்து நிற்பதுபோல். (சுஅ)

வரையுதவு செழுந்தேனும் வனமருவு மான்பாலுங்
கரையில்பணைக் கழைச்சாறுங் கடற்சங்கத் தகநிறைய
விரைகமுகு களநீட்டிச் சுரநின்று மிகக்கவரு
முறைசெயொரு மறைச்சிலம்பி னுறுகமுகு கவருதல்போல். (சுகூ)

இன்னபல வளநிரம்பி யியல்குடிகள் பலமல்கி
முன்னமொழி தரவினிதாய் முதுபுகழிற் பொலிந்தோங்கிப்
பன்னவொளிர் பாண்டிநாட் டணிபலவு ளொன்பகர்ந்தா
மன்னநிகழ் வீரைநகர் வளத்தினுஞ்சற் றெடுத்துரைப்பாம். (எ0)

திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், கஎ.

# திருநகரப்படலம்.

தெள்ளிய பலர்புகழ் சிறப்பு மேவலால்
வள்ளிய புகழ்மிக வயங்கு யர்ச்சியா
லுள்ளிய பரனுமை யோடி ருத்தலால்
வெள்ளியங் கிரிபொருஉம் வீரை மாநகர். (க)

ஒருமா தேவனொண் டனுவெ னப்புகழ்ந்
தியாருமேத் திடுதலா லிமைப்பி லார்தமைச்
சாருமா தரத்தொடு தாங்கு மேன்மையான்
மேருமால் வரைபொருஉம் வீரை மாநகர். (உ)

தெளிதலுற் றடைந்தவர் திருகு ரூவித
மளிவளர் கருணையி னளவி லின்பஞ்செய்
தொளிமிகப் படைத்துமிக் குயர்ந்து தோன்றலான்
மிளிர்சிவ லோகமாம் வீரை மாநகர். (௩)

ஆயபல் லறங்களு மருளி னாக்கலாற்
பாயபல் லுயிர்களும் பரிந்து காத்தலாற்
றீயவெவ் வறக்கடை தீரப் போக்கலான்
மேயமூ வரும்பொரூஉம் வீரை மாநகர். (௪)

நீரையேய் தலின்மணி நிரம்பக் கோடலிற்
சீரைநா வாய்பல செறிய மேவலி
னோரைமா தவர்வளை முழக்க மூண்மையின்
வீரையே நிகர்தரூஉம் வீரை மாநகர். (௫)

திருமக டொழத்திரு வளிக்குஞ் செப்பவண்
மருமக டொழக்கலை வழங்கும் வீரஞ்சால்
பெருமக டொழவது பிறக்கு மால்வரை
யொருமகள் பாசனா ருறையும் வீரையே. (௬)

எண்ணிய வெண்ணியாங் கெய்தி யின்புறக்
கண்ணிய புவனங்க ளெலாங்க லத்தலா
லண்ணிய வண்டமென் றறையத் தக்கதே
புண்ணிய வுமையொடு புராணர் வாழ்தலம். (௭)

சோலை.

குவலய மளகையக் குவல யத்துள
தவலறு முயர்வரை தயங்கு மாளிகை
யிவருமப் புவிவளை யிசைப்பெ ருங்கடல்
கவலரு மளிபல கனைக்குஞ் சோலையே. (௮)

அருந்தல மாகிய வளகை சூழ்தரப்
பொருந்தலர் நெருங்குபு பொலியும் பைம்பொழி
லிருந்தவர் புகழ்சிவ லோகத் தெய்திவாழ்
தருந்தரு வோரைந்துந் தாழ்ந்து போற்றவே. (௯)

தவமலி யளகைசூழ் தண்ணஞ் சோலைவா
ழுவமையில் கிளியெலா முலகம் யாவையு
மவமறப் பெற்றுநன் களிக்கு மோருமை
நவமலர்க் கைத்தல நண்ணி வாழுமே. (க0)

அளகைமா நகர்வளைந் தாய பைம்பொழில்
பளகற வானமேற் படர்ந்து போர்த்தலா
லுளம்வெரூஉங் கதிரின்வெப் புறும லத்தலந்
தளர்வற வாழும்வேர் தபுத்து நாளுமே. (கக)

பொய்கைகள்.

அலையெறி தடமெலா மணியம் போருக
முலைதலி லோதிம மொருங்கு மேவுவ
கலைபுக ழத்தலங் கண்டு போற்றுவார்
தலையணை யூர்தியாச் சார்த லெண்ணியே. (கஉ)

தையலர் குடைதரு தடத்தி னூடெலா
மையலர் குடவளை யவாவி மொய்ப்பன
வையகம் புகழுமை மணாளன் றூடொழுங்
கையலர் மிசையமர் காதல் பூண்டரோ. (கரு)

நந்தாவனங்கள்.

மணமலி நந்தன வனந்தொ றும்பல
விணர்தொறு மிமிறுக ளிரைத்து மொய்ப்பன
குணமல ரொடுமுமை குழலுற் றலயில்
புணரளி யெனப்பலர் புகழ்வ தெண்ணியே. (கச)

செறிதரு நந்தனப் போது தீங்குறு
வறியளைப் பார்த்தெமைப் பறித்து மாமதிப்
பறிநிகர் சடையிட்டுப் பயன்கொ ளாதபுல்
லறிவென வென்றுமிக் கசிப்ப போலுமால். (கரு)

வாழைகள் முதலியன.

கொழுவிய வாழையொண் குருத்து மீச்செலீஇச்
செழுமலர்க் கற்பகத் தேனி றைப்பன
பழுதகன் மதுக்குட மென்று பண்ணவர்
விழுமிய வாய்வைத்துப் பருகல் வேட்பரே. (கசு)

தலைவிரி யிலாங்கலி தடவுக் கற்பக
நிலையுல கண்ணுபு நிரம்பி வாழ்வன
கலைபுகல் விதிப்படி கடத்தின் வாயுற்று
மலைவிறே வாவது பயிலு மாட்சிபோல். (கஎ)

துன்னிய விலாங்கலி தொக்க சூழலின்
மன்னிய துணரிள மாவுஞ் சேர்வன

பன்னிய மறையவர் பரிந்து சம்பந்த
மின்னிய புணர்த்துதல் விளக்கி நின்றன. (க அ)

கந்திக ளிடந்தொறுங் காய்த்து நின்றிட
நந்திய விருப்பொடு நாக வல்லியு
முந்தியங் கதிற்படர்ந் தமைய முத்தமச்
சுந்தரத் தருத்தருஞ் சுண்ண மாகவே. (க கூ)

நிறையளை கையின்வளை நிகழ்த்தப் புக்கயா
மிறைதபு பொதுமையிற் சிலவி ளம்பின
முறைதரு நகரமோர் மூன்றுண் முந்தபு
குறைதவிர் புறநகர் வண்மை கூறுவாம். (உ ௦)

## புறநகர்வளம்.

### யானைகள்.

மிகவழ குடையகை விலங்கல் சேரிடத்
தகனமர் தரவுறி னடுத்த நாமுமே
தகவடை குவமென வுணர்ந்து சார்ந்தெனப்
புகர்படு முகவரை பொருந்தும் பற்பல. (உ க)

சினவிய கறையடி செய்ய தண்டத்துக்
கனமும்வெள் குறக்கருங் கடாம்பெய் தேகுவ
வனவதி சயச்சுவட் டளிகண் மொய்ப்பசார்
மனவொளிர் சரட்டுநீன் மணிகள் கோத்தென. (உ உ)

### குதிரைகள்.

வாசியென் பெயர்கொடு மருவு நாமறை
வாசியா னின்றபன் மாத்த லத்துளும்
வாசியா மித்தல மருவி னுண்மையே
வாசியா மெனமதித் தாங்கு வைகுமா. (உ ௩)

நந்தலை யுருவமை நன்மை யானல
நந்தலை யமைந்துமுன் னுளு மாயிற்று
நந்தலை புனலுடை நபத்தொர் நாளனு
நந்தலை யுருப்பரி மதர்ப்பு நண்ணுவ. (உ ௪)

### தேர்கள்.

வலவனென் றுளையரி மனைவி யாகில
நிலவுநம் பெயர்கொள னீதி யன்றெனு
வுலவுவை யஞ்சினந் தொப்ப வையமே
லலகரும் பிளவுதங் காலி னுக்குவ. (உ ௫)

பகையுடல் கிழித்தியல் பரிசு தேர்ந்திறை
நகைமலர் சூட்டிபு நயஞ்செய் தாலெனத்
தகைநில மகழ்ந்தெழு சகடத் தேர்த்தலை
முகைமல ருகுப்பன முகிழ்த்த கற்பகம். (உசு)

வீரர்கள்.

மானமே யுயிரினு மாண்ட தென்றுகொண்
டூனமே வாவகை வீர மோம்புவா
ரானபோர்த் தலைமுகத் தாண்மை பெண்ணிலேக்
கானமே வினுமழற் கண்ணி மைத்திடார். (உஎ)

முன்னெடுத் திட்டகான் முடிவு மேவினும்
பின்னெடுத் திடார்கைவாள் பிடித்தல் சோர்கிலார்
மின்னெடுத் தொளிரும்பூ ணிறமண் மேலிடா
ரென்னெடுத் துரைக்குது மிவருக் கொப்பரோ. (உஅ)

யானைக்கூடம் முதலியன.

கரியமா வாரிவெண் கரியைத் தாங்குவ
பரியம ரிலாயநாட் பரியைத் தாங்குந்தேர்க்
கிரியவில் பரிதிதேர்க் கிரியைத் தாங்குவ
மரியமற் றுள்ளவும் வானந் தோயுமே. (உகூ)

கரிமுத லியவைக்காங் கருவி யாக்குநர்
திரிபற வோம்புநர் சேரி மல்கிய
விரிபுற நகர்வள மியாது விண்டனம்
புரியிடை நகர்வளம் புகலு வாஞ்சில. (௩0)

இடைநகர்வளம். வேறு.

மலைக டம்மிறை வன்மக ளாகிய
கலைவி ளங்குமை காண்மலர் போற்றிடக்
குலைவில் பொன்மணி யோடுங் குழீஇயென
நிலைய மைந்தன நீடிரு மாளிகை. (௩க)

நீல மாமணி மாளிகை நீணிறக்
கோல மாயவ னேருங் குலவதன்
மேல வாவிச்செவ் வானம் விரவுத
லேலல மேற்புனை பொற்றுகி லேய்க்குமே. (௩உ)

திகழும் வெண்சுதை தீற்றிய மாடங்கள்
புகழும் வெள்ளி வரையிற் பொலிதரு
நிகழு முத்த வடங்க ணிலாவுவ
விகழு மாறி லருவியை யேய்க்குமே. (௩௩)

ஊடன் மேய மகளி ரொழித்தவாள்
கூடல் சான்று குளிர்முத்த மாலையும்
பாடல் சான்மதுத் தாரும் பரந்தெழில்
வீட லோவிய வீதியிற் குப்பையே. (௲௪)

விரிப்ப ரெவ்வுல கத்துளர் மேதகப்
பரிப்பர் போற்றும் பவள மாகதந்
தெரிப்பர் மேற்கொளுஞ் செம்மணி யாதிய
வரிப்பர் கையி லகப்படல் கோடியே. (௲௫)

வீதி செவ்விய தாயினு மேகநே
ரோதி மங்கைய ருடலிற் போக்கிய
சோதி மேய மணிப்பணி துன்றலாற்
சாதி யாதியங் கும்பலர் தாட்கிதம். (௲௬)

குறையொ டுங்கறை கூடிய தில்லையே
னிறைம திக்கு நிலவுமம் மாநக
ருறைம டந்தைய ரொண்முகத் திற்குநூற்
றுறைய ரும்மொரு வேற்றுமை சொல்வரோ. (௲௭)

நாறு கொண்ட நறுங்குழ லார்முனைப்
பேறு கொண்ட முழக்கமும் பெட்பமை
சாறு கொண்ட முழக்கமுந் தண்கடன்
மாறு கொண்ட முழக்கமம் மாநகர். (௲௮)

பொன்னும் வெள்ளியு மாகிப் பொலிகலை
மின்னு நுண்ணிடை யார்கொடு மேவலா
லின்னுந் தோய்வதல் லாம விருந்துறை
மன்னு மட்கலந் தோய்தலை மாற்றிற்றே. (௲௯)

வான மேவி வயங்குநர் யாருமித்
தான மேவிய வெண்ணிலித் தானம்வாழ்
மான மேவிய மாந்தர்முன் செய்தவ
மூன மேவிய தோசற் றுரைத்திடேர். (௨௦)

வேறு.

எண்ணி லாவள மல்கிய விடைநகர்ச் சிறப்பை
மண்ணி லார்முடி புரைப்பவர் யாமுமென் வகுத்தாம்
விண்ணி லாவிய நகரங்க ளனைத்திற்கு மேலாய்ப்
பண்ணி லாவிய வுண்ணகர் வளஞ்சில புகர்வாம். (௨௧)

## அகநகர்வளம்.

### அகழி.

பாழி மாநில முழுவதும் வந்தடி பரவ
வீழி வாயுமை யருள்புரி வித்தகந் தெரிந்து
வாழி தற்குறு மூவர்ப்பொழித் தருள்பெறன் மதித்தே
யாழி சூழ்ந்தது கிடந்தெனப் பொலிதரு மகழி. (சஉ)

அம்மை தன்றிரு வுளமகிழ்ந் தருள்பொழி வண்ணம்
வெம்மை தீர்மலர் பலவிழைந் துதவுதல் விழையச்
செம்மை யாம்பரு மரைநறு நீலமுற் றிகழ்பூத்
தம்மை யாதரித் தமர்தரு மத்தடங் கிடங்கு. (சங)

### மதில்.

சுரையி ரும்புதம் முடியுறச் சோரிநீர் சொரிந்து
புரைத விர்த்தொரு புளிஞனை யாண்டபுண் ணியனூர்
வரைவில் பேரரு ளேயென வுயர்ந்தமா மதிலைத்
தரைசு லாமொரு சக்கர வாளமோ தகையும். (சச)

வளிவெ றுத்திடின் மண்மிசை வீழுமிவ் வானென்
றளிவெ றுத்திடா வமரருட் கொண்டபே ரனூரை
யொளிவெ றுத்திடா விம்மதி லுயர்ந்ததை யுணர்ந்து
களிவெ றுத்திடா ராய்க்கடிந் திருந்தன ரன்றே. (சரு)

### பரத்தையர் வீதி.

ஆடு மாண்பினுற் றிவவியாழ் கொண்டினி தஊமத்துப்
பாடு மாண்பினுற் பரத்தைய ருதெல் போல
வூடு மாண்பினு லுள்ளநெக் குருகிமிக் குவப்பக்
கூடு மாண்பினன் மைந்தர்தம் பொருளெலாங் கொள்வார். (சசு)

தமைய டைந்தவர் வேறொன்றிற் செலாவகை தகைந்து
கமைய டைந்தவ ராய்த்துற வொன்றையே கருத
வமைய டைந்ததோட் பரத்தைய ரியற்றுவ ரறிவுச்
சுமைய டைந்தவர் தமக்குமத் தொழின்முழு தரிதால். (சஎ)

பொதுவி னல்வரு மிகழ்ச்சியெப் புவனத்து மில்லை
கதுவி னல்விடா வள்ளுவர் செய்யவாய் காண்ற
மதுவி னுலுவப் புறுதவ ரெவரொழில் வதனம்
விதுவி னற்செய்தா லொத்தவர் நலமுமவ் விதமே. (சஅ)

உற்ற யாவர்க்கு முறுசுவை யடிசினன் கூட்டி
மூற்ற மேவிய பசித்துயர் முருக்குவார் புகழே
செற்ற யாவர்க்குங் காமத்தால் வருதுயர் தீர்த்துப்
பொற்ற வாள்விழிப் பரத்தைய ரீட்டுறு புகழும். (௪௯)

கைத்த ணங்கழன் றிடினிறத் தனங்டொடக் காண்பா
ருய்த்த முத்தமெண் ணிலகொண்டு கொடுப்பரோர் முத்த
மெய்த்த நுண்ணிடைப் பரத்தையர் திறமிது வென்றுன்
மெய்த்த மற்றதற் குவமைவே றென்றுள தேயோ. (௫௦)

வேளாளர்வீதி.

தழுவு மூவர்கோ னிகழ்தரச் சிறுமுட்கோ ருங்கி
யுழுதொ ழிற்றலை நின்றுபல் விருந்திற்கு மூட்டி
வழுவில் சீலமு மொழுக்கமு மரீஇயறம் வளர்த்துப்
பழுதில் சீர்கொள்வே ளாளர்த மிருக்கையும் பலவால். (௫௧)

வைசியர்வீதி.

எண்ணி லாதபொன் பொலிதர முயன்றன ரீட்டி
யெண்ணி லாதபே றறங்களும் வளர்த்தெழி னீற்றி
னெண்ணி லாதவன் பியைதர வியைத்துவாழ்ந் திருக்கு
மெண்ணி லாதநல் வணிகர்வா ழிருக்கையும் பலவால். (௫௨)

அரசர்வீதி.

ஏற்ற மாற்றல ரிருங்கதிர் துளைத்துவிண் ணெய்த
வாற்ற மற்றவர்த் துளைத்தவ ராண்டமண் கவர்ந்து
சாற்ற நீடிய மனுமுதற் கலையுணர் தகையாற்
போற்ற மேவிய மன்னவ ரிருக்கையும் பொலிவ. (௫௩)

மறையவர்வீதி.

மறையு ணர்ந்தவ ரங்கமும் வல்லவர் மற்றுங்
குறைய றத்தெரிந் தவர்குழ கனைத்தழற் காண்பா
ரறையு மூவருந் தொழப்பொலி யந்தண ராஞர்
கறையில் செல்வத்து மேவிவா ழிருக்கையுங் கவினும். (௫௪)

ஆதிசைவர் மாளிகைகள்.

பூதி கண்மணி புனைந்தவர் மறையொடு பொற்ப
நீதி யாகம முணர்ந்தவர் நிலவிரு திறத்துஞ்
சோதி யர்ச்சனை செய்பவர் மும்மலத் துகடீ
ராதி சைவர்த மிருக்கையு மாவயி னலங்கும். (௫௫)

### சைவமுனிவர் மடம்.

நாடு பன்னிரு சூத்திரத் துட்பொரு ணயப்ப
நீடு காதலிற் றெளிந்துமும் மலவலி நீக்கி
யாடு சேவடி யொன்றிரண் டெனுமணங் கறுத்துக்
கூடு சைவமா முனிவர்வாழ் மடங்களுங் குலவும். (ருசு)

### கல்விச்சாலை.

கருத்து முற்புக லைந்தணு லிலக்கணங் கரைந்து
பொருத்து மற்றவும் பொருத்திமே லிலக்கிய புராண
விருத்த முற்றுமோர் விருத்தமெய் தாவகை விளம்பித்
திருத்த வல்லவா ரியர்பயில் கழகமுஞ் செறிவ. (ருஎ)

### அன்னசத்திரம்.

அருப்பு முல்லைநே ரடிசிலு மாடக வண்ணப்
பருப்புங் குய்கமழ் கருனையும் வறையலும் பாகும்
விருப்பு நீடிய பாறயிர் நெய்செறி மிதவை
கருப்பு வார்சுவை யோடமை சத்திரங் கவினும். (ருஅ)

### தண்ணீர்ப்பந்தர்.

தூய வெண்மணல் பரப்பிமேற் புதுக்கலந் தறுத்திப்
பாய யோரிலி குசப்பழச் சாறுரர் பாவ
வேய வாக்கியின் குளமளா நீரொடு மின்னுந்
தோய வாக்குநீர்ப் பந்தரு மிடந்தொறுந் துவன்றும். (ருகூ)

### செல்வச்சிறப்பு.

உண்மை வீரைமற் றளகையென் றொருபெயர் பெற்ற
வண்மை நாடுறின் மதிப்பருஞ் செல்வத்தாற் போலும்
பெண்மை யோர்புறப் பிரானுமீற் றிருப்பது பேணி
லெண்மை யாகுமோ வெம்மனோர்க் கதன்சிறப் பியம்ப. (சுo)

### திருக்கோயில்.

ஆவ ணம்பல வெழுமுழக் களகையோர் வீரை
மாவ ணங்குசே ரதனடு வெழுகதிர் மானும்
பூவ ணங்குமெய்த் திருவுமை யாளொடும் புராணக்
கோவ ணங்குல வந்திநேர் பவனொளிர் கோயில். (சுக)

### சத்தியபுட்கரிணி.

தொடர்ந்த காதலி னம்மிடைத் தோன்றிய தினைசேர்
மடந்தை யீங்குமை யெனும்பெயர் புனைந்துள்வார் மலமா
சிடந்து மேயினள் காணலா மென்றுபா லாழி
யடைந்த மர்ந்தெனப் பிரான்முன ரமருமோர் தீர்த்தம். (சுஉ)

### திருமதில்.

கொற்ற வெற்பெனப் பொலிதரும் யான்றலை குனியச்
செற்ற மிக்குநீ செய்வது தகாதென மேரு
நற்ற வத்திற முறவகங் கொண்டமை நயக்கும்
பொற்ற வேணிநா யகன்றளி சூழ்ந்தபொற் புரிசை. (௬௩)

### திருக்கோபுரங்கள்.

மேரு மாமதி லாயமை தெரிந்ததை விலகா
தாரு முண்மகிழ் சொளப்பொலி யடைகலோர் நான்கு
மூரு மால்விடை யானரு ளுறவுட னணைந்து
தேரு மாநிற்றல் போனிற்குஞ் செம்பொற்கோ புரங்கள். (௬௪)

### கொடிமரம்.

சம்பு வென்பது மருள்பெறச் சாகைக ளொடுக்கிச்
சம்பு முன்னரே நின்றெனக் கொடிமரந் தயங்கு
நம்பு நீர்மையி னயந்ததைச் சூழ்பவர் கருவ
நம்பு காவகை பெறுவரே பெரும்பல நாளும். (௬௫)

### உமையம்மை கோயில் முதலியன.

மேரு மால்வரைக் கொடுமுடி யனைத்துமம் மேருச்
சாரு மாமதி லாயதை யுணர்ந்தன தகவிற்
சேருஞ் பல்லுரு வாய்ப்பொலி திறம்பொருஉந் தேவி
யாரு நாயகர் முதலியோ ரமர்தளி விமானம். (௬௬)

உதித்தி ராக்கதி ருயர்த்தின டிருவுள முவந்தான்
மதித்து நம்மையு மகவெனப் பிறந்துயர்த் துவளோர்
கதித்த மேனியி னுமையெனக் கதிர்கள்பன் னிரண்டுந்
துதித்த வாவயிற் பொலிதல்போல் விமானங்க டிலங்கும். (௬௭)

### மண்டபங்கள்.

ஆய மேருமால் வரையமர் தேவரா லயங்கண்
மேய வவ்வா யமரிட மமர்தர விழைந்து
தோய வந்தெனப் பற்பல மண்டபந் துதைந்து
காய வாணர்க டம்பிரான் விழாக்கொளக் கதிர்க்கும். (௬௮)

### வீணாவிருக்ஷம்.

திசைய டங்கலுஞ் சாகைகள் செறிதரச் செலுத்திப்
பசைய மைந்துற மலர்ந்துபல் பவழங்கள் பழுத்து
மிசையு யர்ந்துநன் னிழல்செய்து நின்றிடும் வீணா
தசையுண் வேட்டுவற் கருள்பெருந் தம்பிரான் றனக்கே. (௬௯)

யற்ற விசேடங்கள்.

ஒங்கு தும்புரு நாரத ரிசைக்கும்யா ழொலியுந்
தேங்கு பேரிகை முதற்பல வாத்தியச் சிலேப்பும்
வாங்கு நுண்ணிடை மாதராட் டரவமு மென்றும்
பாங்கு சேருமை பரம்பரன் றிருமுனர்ப் பரவும். (எ0)

மறைமு ழக்கமு மறையெனு நால்வர்வாய் வளப்பா
நிறைமு ழக்கமு மருள்பெறு மற்றையோர் நிறைபா
வறைமு ழக்கமு முகின்முழக் கமும்பெரு காழித்
துறைமு ழக்கமு மெனப்பல காலமுந் துவன்றும். (எக)

எம்மை யாண்டவ ளெனுமுமை யாண்டவ ளெங்க
ளம்மை தன்றிரு வடியுறை யாகவா ளுதி
மும்மை யாகிய வுலகமு மொய்த்துற வைக்குஞ்
செம்மை மாமணி பொன்முத லியவைபல் சிலம்பே. (எஉ)

சூழு வார்பல ரிருமுது குரவரைத் துதித்துத்
தாழு வார்பலர் தமைப்பொரு துடற்றுவல் வினையைப்
போழு வார்பல ராவயிற் பணிபல புரிந்து
வாழு வார்பலர் வானவர் மானவ ருள்ளும். (எங)

சந்த மாமறைத் தலையினுந் தயங்குமத் தளியுட்
பந்த மாயதெவ் வுயிர்களும் பாற்றிநன் குய்யக்
கந்த மாமலர்க் குழலுமை யாளொடிங் கலந்து
நந்தம் வீரசே கரரினி தமர்வரெஞ் ஞான்றும். (எச)

உருவி ளங்கிய திருநகர் வளத்தொடு வீரைத்
தருவி ளங்கிய தம்பிரான் றிருத்தளி வளமுங்
கருவி ளங்கிய வெம்மனோர் கணையமுற் றுவவோ
திருவி ளங்கிய நைமிச வளஞ்சில தெரிப்பாம். (எரு)

திருநகரப்படல முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம், கஎஉ.

# நைமிசவனப்படலம்.

மழைவளஞ் சுரந்து மல்க மாநிலத் தறங்க ளோங்க
விழைவளர் முலையி னொரு மைந்தரு மீண்டி வாழ
வுழைவளர் வானோர்க் கெல்லா முறுபசி யொழியா நிற்குந்
தழைவளர் நைமி சப்பேர் தாங்கிய கான மாதோ. (க)

மதித்திடல் பிழித லென்னும் வன்றொழி லியற்றப் பெற்றுக்
கதித்தபாற் புணரி யும்பைங் கதிர்நிலா மதியும் வானோர்க்
குதித்தவெம் பசியை மாற்று மாயினு முவந்து கூவிப்
பதித்தபே ரன்பி னல்கு மிதுநிகர் பகா லாமோ. (உ)

வானவர் பலருந் தாழ்ந்து வந்துவந் திரக்கப் பெற்றுத்
தானநன் கமரா நிற்குந் தடம்பொழி லிதன்கண் வாழ்வா
ரானவர் தமைத்தாழ்ந் தேற்க விரக்கவு மவாவா ரென்னிற்
கானமற் றிதனுங் கந்தக் கற்பகப் பொழிலொப் பாமோ. (ங)

விண்வொ தியவா னோர்கள் வேண்டிய போக மூட்டும்
பண்செசால் பதங்க ணீத்துப் பரவிய விதன்கண் வாழ்வா
ருண்டுபோ மென்ன முன்ன மோடிவந் திவெ ரென்னின்
மண்டுசீ ரிக்காட் டிற்கவ் வைகுந்த மாதி யொப்போ. (ச)

பொத்திய மலநோய் தீரப் புந்திசெய் தவர்க ளெல்லா
மெத்திய வளம்வி ராவி விளங்குபொன் னுலக மெய்தார்
சத்திய வுலகங் கூடார் விண்டுவி னுலகஞ் சாரா
ரித்திய விதன்பாண் மேவி னின்னுநா முரைப்ப தென்னே. (ரு)

மகப்புகை விம்ம லாலே மயக்கமுற் றவ்வ னத்துப்
புகப்பெறா தயல்வ னத்துப் போய்க்குழீஇ யமரும் வண்ட
ரிகப்புறச் சுரரு ணற்கூ றியற்றவந் தையர் சாப
மிகப்பயந் தசுரர் யாரு மயலுற்று மேவ னேரும். (சு)

தானமார் நறிய கற்ப தருமலர் வண்டு றுமை
மானமார் தெய்வத் தன்மை யாலென வகுப்பர் யாரு
மோனமார் முனிவர் செய்யு மூன்றழற் புகையு மிந்தக்
கானமார் தரமே லுய்க்குங் காரணத் தென்ப தோரார். (எ)

திரையெறி நதியுஞ் சீதப் புயலுங்கீழ்ச் செறிய வாக்கி
யரையன்விண் ணகர மேலா லாக்கின னமரு முண்மை
புரைதவிர் நைமி சத்துப் பொங்கழற் கொழுந்து தாவிக்
கரையற வுருக்கு மேயென் றஞ்சிய கருத்துப் போலும். (௮)

ஒருகரும் புன்ற கத்தை யொருகொன்றை கிளையாற் போர்த்த
திருமகண் மணாளன் றன்னைச் சிவபிரான் றழுவனேரு
மருவத னரும்ப ரம்மால் வாய்க்குறு நகையிற் சீர்க்குந்
தருவதன் மலர்பெய் தேன்மெய் தன்னினின் றெழுமேவர் நேரும்.

தாதுவென் றுரைக்கு நீறு தாங்குபு வண்டொ ழுக்கென்
றோதுகண் மணிபூண் டவ்வண் டொலியெனுந் துதியி யம்பிப்
போதுகு மதுக்கண் ணீராற் புறம்பெழு மன்பு தோற்றி
மாதுபங் காளர்க் கன்பர் போலெலா மரமு நிற்கும். (௧௦)

இனையவி பினத்து நாளு மிருப்பவர் திருநீற் றன்பும்
புனையமிக் கினிய தாய வுருத்திராக் கப்பூண் பூணு
மனையமெய்த் தவமு முள்ளத் தஞ்செழுத் தழுத்து மாண்புந்
தனையறப் பெற்ற மேலோர் தவாதநல் லொழுக்கின் மிக்கார். (௧௧)

ஆயபல் கடலும் பொங்கி யணைகடந் தேற நிற்கத்
தீயவெங் காலெ ழுந்து சிலம்பெலாம் பறித்து வீச
நேயவைம் பூத முந்தந் நிலைகுலை தருகா லத்து
நாயக னுருவி லாத வுருவமுண் ணயக்கு நீரார். (௧௨)

இன்பம்வந் தியைந்த காலு மதனெதிர் மறையென் றேதுந்
துன்பம்வந் தியைந்த காலு மகிழ்தரார் துக்க மேவார்
முன்பமை யுடலூ ழென்றே மொழிந்திருப் பவரம் மானுக்
கன்பமை யுளத்தார் செம்பொ னவாவுறு வோட்டிற் காண்பார். ()

ஒளிகெழு மோலி வானோ ரும்பலூ ரிறைவன் கஞ்சத்
தளியன்மான் முதலோர் சோரத் தலைமுத லுறுப்பிற் சூட்டுந்
துளிமது மலர்வே ளிந்தத் தூயமா தவரு வக்க
வளிமல ரடியிற் சூட்டு மம்மல ரொனிலார் நேர்வார். (௧௪)

கருவளர் மலத்தி னாற்றல் கழியவா ரருளி னின்று
மருவளர் கொன்றை மாலை வள்ளலுட் கலப்பி னீங்கா
ருருவளர் புகழார் சன்ம மொழிப்பதற் குறுமு பாயந்
திருவளர் சிவபு ராண சிரவண மென்று தேர்ந்தார். (௧௫)

சுகன்பரத் துவாசன் கௌத மன்சுதீக் கணனன் சீர்க்குச்
சகனர பத்த ஞபத் தம்பன்பார்க் கவன்சா பாலி
யகமரு டணன்மா தேச னருட்டுரு வாசன் கற்கி
மிகவொளிர் சனகன் போதா யனன்பிர சண்ட மேலோன். (கசு)

கண்ணுவன் கருக்கன் காத்தி யாயனன் கனமார்க் கண்ட
னெண்ணுமத் திரிமா தேவ னிலகிதன் பிருகு சம்பு
நண்ணுநா ரதன்ற தீசி நகுமகத் தியன்பா ரோடு
விண்ணுமேத் தாணி மாண்ட வியன்சுனப் புச்சன் சங்கன். (கஎ)

பராசரன் கூசு மாண்டன் பகவன்வான் மீகி வாரித்
தபாதலம் புகழ்ச ஞதன் சரபங்கன் கலைச்சி ருங்கன்
விராவருட் டிருதன் ருலப் பியன்மிளிர் புலத்தி யன்சீ
றராவணைப் பெருமான் சென்னி யடிவைத்த வன்சி லாதன். (கஅ)

தேவலன் விந்து தத்தாத் திரேயன்பா ணினிசு மந்து
மாவல திரண தூமாக் கினிப்பெயர் வாய்ந்த வெங்க
ணுவலன் கண்டு சாதா தவனிமைப் பியனற் காணன்
மேவல ரில்லா ஞஞ்சாண் டில்லிய னசித மேலோன். (கக)

அட்டவக் கிரன்முன் ஞன வளப்பரு முனிவர் கூடி
யுட்டவா மகிழ்ச்சி பொங்க வுயிரினைப் பொழியச் செய்து
நட்டமா தரிக்கு மெங்க ணுபஞ ருவப்ப வாழி
வட்டமேத் தெடுக்குந் தெய்வ மகமொன்று புரிய லுற்ருர். (உ0)

அந்தமா மகஞ்செய் காலை யார்வத்திற் காண வேண்டி
யெந்தநா னிலத்து மேய விருந்தவ முனிவர் யாருந்
தந்தமா ணக்க ரோடுஞ் சார்தர வவர்கு ழாத்துண்
முந்தமா தவத்துச் சூத முனிவனு முவந்து வந்தான். (உக)

வெள்ளிய நீறு மேனி விளங்கிட வுருத்தி ராக்க
வள்ளிய மாலை தாழ மணமெழுத் தைந்தும் போற்ற
வுள்ளிய குணமா ணக்க ரெண்ணில ரொருங்கு சூழத்
தெள்ளிய புராண மெல்லாந் திரண்டொரு வடிவுற் றென்ன. (உஉ)

வந்தமா தவனை நோக்கி யிருந்தமா தவர்கள் யாரு
முந்தவா தரத்து நேர்சென் றிறைஞ்சுபு முகமன் கூறி
யந்தவா வுவகை விம்ம வழைத்தனர் கொண்டு வந்து
சந்தவா தனத்தி லேற்றித் தண்மல ராதி கொண்டு. (உங)

அருக்கிய மாதி நல்கி யாசனமப் படிபூ சித்து
முருக்கிய வினையே மானே மெனத்துதி மொழிந்து போற்றப்
பெருக்கிய தவத்தீர் யாரு மிருக்கெனை வனையான் பேசத்
தருக்கிய சிந்தை யில்லார் தாமகிழ்ந் திருந்து சொல்வார். (உச)

தொலைவரும் பிறவி வெந்நோய் தொலைப்பதற் குபாய மெண்ணித்
தலைமதி யணிந்தான் பாத தரிசன மென்று தேர்ந்தோ
மலைவில்பன் மறையு மின்னு மதிப்பரு மம்மா தேவ
னுலைவில்பொற் பாதங் காண்டற் குபாயம்யா தென்று சூழ்ந்து. ()

மன்னிய தானங் கொல்லோ மகங்கொலோ வாய்மை கொல்லோ
மின்னிய துறவு கொல்லோ வேறெது கொல்லோ வென்று
நன்னிய மத்தி னின்னே நயந்துளங் கருதும் போது
துன்னிய தொன்று வந்து சொல்லுது மதுவுங் கேட்டி. (உரு)

வளமலி கடல்சூழ் வைப்பின் மாதேவ னமருந் தான
மளவில வவற்று ளொன்ற னருண்மலி புராணங் கேட்டுத்
தளர்வற வதன்கட் சென்று சார்ந்துப வசித்த லாதி
யுளனமர் தியான மீறு வுஞற்றலென் றெண்ணங் கொண்டாம். ()

தக்கதே யெனினு மின்ன தலஞ்சிறந் ததென் றேரோ
மிக்கமா தவத்தாய் மூர்த்தி முதலிய விசேட மூன்றுந்
தொக்கதாய்ச் செலமுற் றுது துரிசற வெண்ணி னுலு
மக்கண நினைத்த வெல்லா மருள்வதா யிருத்தல் வேண்டும். (உஅ)

இகபர மோக்க மூன்று மெளிதினல் கிடுதல் வல்ல
தகவுடைத் தான மொன்று சாற்றிடல் வேண்டு மென்று
ரகனமர்ந் தொருமு கூர்த்த மாய்ந்துளத் தொன்று தேர்ந்து
சகமுழு துய்யு மாறு சாற்றிட லுற்றுன் சூதன். (உகூ)

மலவலி யொருங்கு தேய்த்து மன்னிய வருளி னின்று
நிலமுத னவிலா றுறுக் கதீதநின் மலன்பொற் பாதங்
கலவிய பெரியீர் நீயிர் காதலி னிசைத்த வாவ
லுலகுப கார மென்றே யுணர்ந்தன னுல தான்று. (ஙo)

ஒன்றுமி லெனக்கு மிக்க புண்ணிய முறுத்தல் வேண்டி
யென்றுநன் றுணர்ந்தே னின்னு மிந்தமா மகமி யற்ற
னன்றுநும் பொருட்டன் றேமற் றிதுநிற்க நயந்த வாறே
கன்றுத லொழிக்கு மம்மான் றலமொன்று கருத்திற் றேர்ந்தேன்.

குழியெலா மணிபொன் றெண்ணீர்க் குலையெலாம் வளையின் முத்
வழியெலாங் கரும்பங் காடு வரம்பெலாஞ் சாலி மற்றை [தம்
யுழியெலாம் பிறவ ளங்க ளூரெலா மளகை யேயாய்
விழியெலாங் கவரா நிற்கு மேதகு பாண்டி நாட்டில். (௫௨)

வழுதிநாட் டெல்லை யாகி வளாவளம் பலவ ரன்றி
யொழுகுவெள் ளாற்றின் றென்பால் யோசனை யொன்றி னன்பு
தழுவொரு வேந்த னுள்ளந் தழையப்பொன் மாரி பெய்த
முழுமுத லமர்தேத் திற்கு மொழியுமுத் தரப்பா லொன்றில். ()

அருள்வள ரான்ம நாத வண்ணல்வீற் றிருக்குந் தெய்வப்
பொருள்வளர் குருந்து மேய புலத்திற்குக் குடபா லொன்றி
லிருள்வளர் கண்டத் தெண்டோட் கொற்றவா ளீசர் சேருந்
தெருள்வளர் தலத்தின் கீழ்பால் யோசனை யரையிற் சேர்த்து. ()

மன்னுமோர் தானம் வீர வனமெனு நாமம் பூண்ட
துன்னுபே ரளகை யென்று முரைப்பரத் தலத்திற் கொப்பு
மின்னுமா ஞாலத் தன்ன தன்றிவே றில்லை யுள்ள
முன்னுவோர் புகல்வோர் யார்க்கு முத்தியின் பெளிதி னல்கும். ()

தலமுதன் மூன்று சீருந் தங்கிவாழ் தலமஃ தொன்றே
யுலகில்வே றுள்ள வேனு மத்துணை யுயர்வு பூணு
பலபல வுரைப்ப தென்னை பசும்பொனு லாய தேயத்
திலகுவா னவரும் பாரிற் சிவலோக மென்றி சைப்பார். (௫௬)

மறைமுழு துணர்ந்த தெய்வ வாதரா யணனெனுங் கோமான்
பொறைமலி தரநவின்ற புராணமீ ரொன்பா னுள்ளு
நிறைசிவ புராணம் பத்து நெடியமால் புராண நான்கு
நறைமலி கமல யோனி புராணமோ ரிரண்டு நாடின். (௫௭)

கதிரவன் புராண மொன்று கடுந்தழற் புராண மொன்று
முதிர்சுவை படைத்த விந்த மூவறு புராணத் துள்ளு
மெதிரறு சிவபுராணம் பத்துமே யேற்ற மாகு
மதிர்கட லுடுத்த வைப்பி னத்தகு பத்தி னுள்ளும். (௫௮)

காந்தமே விசேட மாமக் காந்தத்து ளிருமூன் றாகப்
போந்தசங் கிதைக ளுள்ள புகன்றமற் றவற்றி னுள்ளா
லேய்ந்தசீர்ச் சனற்கு மார சங்கிதை யியம்பா நிற்கும்
வாய்ந்தபே ரளிசால் வீர வனமகத் துவத்தை மன்னே. (௫௯)

அந்தமான் மியம்போன் மற்றெருன் ருருகுமோ வறிமி னென்று
சந்தமா ரன்பு பொங்கத் தடங்கணீ ருருவி பாய
முந்தவா ரழகு வேழ முகப்பெரு மானை மிக்குக்
கொந்தவா மலர்வி ராய குழலுமைப் பிராட்டி யாரை. (௪0)

திருவரு ளுருவ வீர சேகரப் பிரானார் தம்மை
மருவவுட் டியானஞ் செய்து மாசறு தெளிவு மேவி
யொருவரும் வினை மேயார் திருமுடித் தழும்பொன் றுற்ற
பெருவிளை யாடல் கேண்மி னென்றுபே சுதனுற் ருனல். (௪௧)

நைமிசவனப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௨௧௩.

## வீரசேகரர்

# திருமுடித்தழும்புற்றபடலம்.

குணதிசைக் குருந்த வனமுந்தென் றிசையிற் குலவுசிற் றருச்சுன வனமு
மணவுமேற் றிசையிற் பொலிசமி வனமு மவனியிற் பொலிபிற வனமுந்
தணவருஞ் சுவண கற்பக வனமுந் தன்பெயர்ப் பொருடேரீஇச் சமழ்ப்ப
மணநனி மலிந்து பொலிதரும் வீர வனமெனப் படுவதொன் றுண்டால். (௧)

அரசுசம் பீரங் கொன்றையா மலக மதவுமா கண்டின்முந் திரிகை
புரசுவெட் பாலை கோங்குகோ விதாரம் புன்னையா விண்மெந் தாரம்
விரசுபூ வரசு கூவிள நொச்சி வேம்புபச் சிலைவிளா வன்னி
பரசுபூ வத்தி சண்பக ஞாழல் பாரிசா தம்பனை பிண்டி. (௨)

ஆல்பல வழிஞ்சில் கதலிகார்ச் சூர மதிங்கமீந் தேழிலைப் பாலை
வேல்வழை யிலந்தை யருச்சுனந் திமிசு வெள்ளிலோத் தங்குருந் திருப்பை
பூல்கர வீரஞ் சந்தன நாவல் புன்குகுந் கிலியமொண் டமால
மால்வளர் வீழி வெண்ணெய்சே புளிமா மாதவி பாடலந் தேக்கு. (௩)

முன்னவா மரங்க ணெருங்குபு பலவா மொழிவிலங் கொடுபற வைகண்மிக்
கின்னறீர் முனிவர் பன்னசா லைகள்வாய்ந் திலகுபல் வளத்ததாய்த் தனையே
யன்னவிவ் வீர வனத்திடை யென்று மருட்பிழம் பாயுறைந் தருளும்
புன்னகா பரண ரருளினை வேடர் பதியடைந் தய்ந்தது பகர்வாம். (௪)

பரவுமிவ் வீர வனத்தழற் றிசையிற் பகரனா யோசனை யளவில்
விரவுறு மடவி வாழ்பவன் விறலார் வேடர்தங் கோவெனும் பூரிச்
சிரவன்மா மைந்தன் வீரனென் பெயரோன் சிறப்புறு மறக்குடி யுதித்த
குரவுறு கூந்தற் சுமதியை மணந்தோன் குஞ்சர நிகர்களிப் புடையான். (௫)

தகரிரு மருப்புஞ் சமழ்ப்புற முகத்துத் தயங்குறு திருகுரோ மத்தான், பகர்மயிர் வினைஞர் கருவியெஞ் ஞான்றும் பார்த்திடாச் சிகழிகை முடியா, னிகர்வரை யெய்தா வகனிறத் துறமுண் ணிவந்தெனச் செறிகரு மயிரான், புகர்படு முடைவாண் மருங்குற யாத்துப் புலிப்பெரும் போத்தெனப் பொலிவான். (௬)

அனையவ னொருநாண் ஞமலிபின் றொடர வங்கையிற் சுரையிரும் பறைந்த, வனையநீள் கழியுங் கொண்டெழீஇ வீர வனத்தினுட் புகுந்தன னாக, நினையரிக் கினிய வொருபெரு வீரை நிலவடி யெழுந்தவோர் புற்றிற், சினையநல் வள்ளிக் கொடியொன்று முளைத்துச் செறிந்ததத் தருக்கிளை யனைத்தும். (௭)

அன்னவன் மீகத் தகமறைந் தமரு மம்பிகா பதியெமை யுடைய
முன்னவன் வீர சேகர நாதன் முதிர்பெருங் கருணையெவ் கிராதர்
மன்னவ னுய்யச் செலுத்தின னந்த மறவனுங் கொலைகரு தாது
தென்னவன் புரக்கு நாடுசெய் தவத்தாற் றேடின்ன கிழங்குடை யிலதை. ()

கொடிபடு கிழங்கு தேடுபு வருவோன் குறித்துமுன் செய்தபுண் ணியத்தால்
வடிபடு மலர்சால் வீரையு மதன்கீழ் மருவுறு மதன்மேற்
படிபடு சிறப்பிற் றோன்றியத் தருவிற் படர்ந்தவோர் வள்ளியுங் கண்டான்
பொடிபடு மேனிப் புண்ணிய னதனுட் பொலிந்தினி தமர்திறங் காணான். (௯)

குறிதரு மூக மிருந்துமில் லானிற் கொடியள வுணர்ந்ததி சயித்து, முறிதரு மினைய கொடிநிகர் கொடியான் முன்னமிவ் வனத்திடைக் காணேன், செறிதரு கிழங்கு நனியுள தென்று சிந்தையு ணினைந்துகை யிருந்த, வெறிதரு நுனைய விரும்பினாற் பெயர்த்தீ னெழுந்தபுற் றொழிந்துபோ யதுவே. ()

உற்றபுற் றொழியக் கிழங்கினை நோக்கி யுடன்பெயர்ப் பானிரும் பூன்றக்
கற்றவர் புகழும் வீரசே கரனார் கலைநிலா முடியினவ் விரும்பு
சற்றழுந் திடலாற் குமிழிகொண் டெந்தோ தவாதெழுந் ததுபெரு நெய்த்தோர்
மற்றதை யுணர்ந்த வீரனுண் மயங்கி மண்மிசை மூர்ச்சித்து வீழ்ந்தான். (௧௧)

---

இந்தப்படலத்திலுள்ள ௪-ம் பாடலும், ௫-ம் பாடலும் பிள்ளையவர்கள் வாக்கல்ல; இந்தப் பகுதியிலிருக்கவேண்டிய அவர்களுடைய பாடல்கள் என்ன காரணத்தினாலோ கையெழுத்துப்பிரதிகளிற் காணப்படாமற்போனமையால், சில அன்பர்களுடைய விருப்பத்தின்படி வடமொழிமுதனூலின் கருத்தைத்தழுவி நூதனமாக இயற்றிச் சேர்க்கும்படிநேர்ந்தது.

ஙளு மறைந்து மண்மிசைக் கிடக்கும் வேடர்கோ மகன்றிற நோக்கி
வழிதொடர்ந் தடுத்த ஞமலிமற் றிவற்கு வந்ததோர் தீங்கெனக் குறித்தாங்
கழிதுய ருழக்கு முகத்தினை மோக்கு மலமரும் பஃறரஞ் சூழு
மொழியுமுன் காலால் வருடிக் கலறு முகம்புலர்ந் தெங்கணு நோக்கும்.(கஉ)

விள்ளருங் கவலை யுற்றநா யனையான் விழைமனை யாட்டிபா லோடித்
தள்ளரு மனையா ளடிமிசை வீழ்ந்து தவலரு மனுர்த்திறங் காட்டி
யுள்ளரு நடுக்கங் கொண்டல றுதலு மூவனுநா யகன்வர வின்றி
யெள்ளருந் திறத்துச் சுணங்கனிங் கேகற் கேதுவென் னோவெனக் கலங்கி.()

அதுவழி காட்டி முன்னமோ டுதலா லதன்பினர் விடாதுறத் தொடர்ந்தாள்
கதுமென வீர வனத்தினுட் புகுந்து கற்பக தருவினுஞ் சிறப்ப
மதுமலர் சுமந்து கனிபல பழுத்து வளம்படு வீரையின் பாங்கர்
முதுபசுங் கொடியின் மண்மிசைக் கொழுநன் முகம்படக் கிடப்பது கண்டாள்.

கண்டுளம் பதைத்து வயிறலைத் தேங்கிக் கண்பொழி தாரைநீர் பெருக்கி
யுண்டுகொல் லுயிர்மற் றில்லைகொல் விதனை யுற்றறி வோமெனத் துணிந்து
மண்டுபல் வளைக்கை விரலவ னுசி வைத்தன ளுயிர்ப்பெழ லுணர்ந்தாள்
விண்டெயி றொழிந்தா னலனிலங் கிடக்கும் விதந்தெரி வாமென முயல்வாள்.

திருகுதீ ரவனு முன்னைநாட் புரிந்த திருத்தவ முடையளா தலினு
லருகுநோக் குற்ற னுடைந்தபுற் றடியோ ரகன்கிழங் கிருப்பது கண்டாள்
கருகுறு வளைய கிழங்கய லெழுந்து கதித்தநெய்த் தோரையுங் கண்டாள்
பெருகுமோ ரிறும்பூ திவணுள தென்று பெயர்த்தனள் கிழங்கினை மாதோ. ()

தன்பெருங் கொழுந னுடைந்தனக் காய தவாமலக் கிழங்ககழ் வாள்போ
னன்பெருங் கிழங்கை யகழ்தலுங் கண்டா ணக்கபொன் னுலகமர் வாரு
மின்பெருங் குலிசத் தண்ணன்மா மலர்மேல் விரிஞ்சனு மொருபெரு வரையை
வன்பெருங் குடையாக் கொண்டமா யோனு மதித்தினுங் காணுறு முதலை.

காண்டலும் வெருவி யரக்குநீர் தோன்றுங் காரணம் யாதெனத் தேர்ந்தா, டேண்டருங் கிழங்கு பெயர்ப்பதற் காகச் செறிநுனைக் கருவியூன் றிடுங்கா, லாண்டகை முடிமேற் பட்டதென் றுணர்ந்தா ளையகோ வென்செய்கே னென்று, பூண்டரு முலையாள் பொருக்கென வீழ்ந்தாள் புலம்பினாள் புழுங்கினாள் சோர்ந்தாள். (கஅ)

அடுத்தவர் தமைக்காத் தாரருள் கொழிக்கு மம்மையப் பருக்கிது தகுமோ
கடுத்தநஞ் சருந்திக் கடவுளர்ப் புரந்த கருணையா ளருக்கிது தகுமோ
வெடுத்தவெஞ் சீற்றக் கூற்றுதைத் தொருசே யிவர்ந்தளித் தவர்க்கிது தகுமோ
வுடுத்தநீர் ஞால மொருங்குவந் தேத்து முமாபதி யார்க்கிது தகுமோ. (க௯)

தாயினு மினிய பேரருள் புரியுந் தம்பிரா னார்க்கிது தகுமோ
வாயினு மயன்மாற் கினுமனுத் துணையு மகப்படா தார்க்கிது தகுமோ
காயினு மருளே யார்தரப் பொலியுங் காலகா லருக்கிது தகுமோ
வேயினும் பொலிதோ ளுமையொரு பாக விமலநா யகர்க்கிது தகுமோ. (௨௦)

எம்மைவாழ் விக்கும் பொருட்டிவண் முளைத்த விறையவ னார்க்கிது தகுமோ
செம்மையா தரிக்கு மன்பருக் கெளிய சிவபிரா னார்க்கிது தகுமோ
மும்மையா ருலகாய் வேறுமா யுடனு முழுமுத லார்க்கிது தகுமோ
கொம்மைசேர் முலையா ளுமையொரு பாகக் கொற்றவ னார்க்கிது தகுமோ. ()

என்றுரைந் துருகிப் புலம்புவ ளழுவ ளிருகரங் கொடுமுகத் தறைவள்
கன்றுமுட் கனிவிற் றிருமுடி தடைப்பள் காறனின் றிலதெனக் கவல்வ
ளொன்றுமிக் கசிவு நிலாதெழி னின்னே யுயிர்துறப் பேனெனத் துணிந்தா
ளன்றுமிக் கழுதா ளழுதநீர் கறைமுற் றகற்றுந் ராயதப் போது. (௨௨)

மற்றவ ளன்புக் கிரங்கியெம் பெருமான் மதிமுடி யெழுகறை மாற்ற, வுற்றவப் பொழுது மகிழ்ச்சிமிக் குற்று ளூறுகுறை யின்னுமொன் றுளதென், றற்றவர்க் கருளுந் தம்பிரான் முன்னின் றடிகளோ விடமெடுத் தருந்தி, முற்றலின் முலைப்பொன் முதலியோர் களத்து முகிழ்த்தபொன் காத்துளீர் சரணம். (௨௩)

கொடியிடை யிரதி வேண்டலு மவட்குக் கொழுநனை யளித்துளீர் சரணம்
படியிடை யறியா தென்றவன் புரிந்த படுபிழை யுட்கொளா தொழித்து
முடியிடை மதிய முடித்துளீ ரனையான் மூர்ச்சைதீர்ந் தெழும்படி செய்யி
னடியிடை யென்றும் பணிந்துகுற் றேவ லாற்றுவோம் யானுமென் றவனும்.

என்றவ ளிரங்க வவளொன்றும் வேண்டா திருக்குமுன் னேபெரு கன்புங், கன்றலி லுண்மை ஞானமு மளித்த கடவுளார் வேண்டிய காலை, யொன்றது நல்கா திருப்பரோ நிலஞ்சேர்ந் துற்றவன் மேலருள் செலுத்த, வன்றவன் மூர்ச்சை தெளிந்துகண் டெரிந்தாங் காயதென் னேயென வெழுந்தான்.

நாயக னெழலும் பெருமகிழ் கூர்ந்து நங்கைமற் றவன்முக நோக்கி
யாயவிக் கிழங்கு கவருவா னிங்ங னடுத்தநீ யென்செய்தா யளவாத்
தூயநம் பெருமான் முடிமிசை நின்கைச் சுவைபடு மிரும்புதாக் குதலான்
மேயது செந்நீ ரென்றனள் பெருமான் மேயின னேயிவ னென்றான். (௨௬)

கண்ணினேக் கெனலுங் கண்டனன் மாலுங் காணுறு தானையுள் ளஞ்சிப்
பண்ணினேர் மொழியாள் பங்கரிங் கமரும் பண்பியா னறிந்தில னந்தோ
வண்ணினின் னமுதா மறவனு ரிங்ங னமர்ந்ததை யறிந்தில னந்தோ
வெண்ணி லின் பருளு மிறைவனு ரிங்ங னிருப்பதை யறிந்தில னந்தோ. ()

என்னையா டரவிக் கானகத் திருந்தா ரிருந்ததை யறிந்தில னந்தோ
பொன்னைநேர் சடிலத் திறைவனு ரிங்குப் பொருந்திய தறிந்தில னந்தோ
வன்னையே பொருவு மறவனு ரிங்ங னமர்ந்ததை யறிந்தில னந்தோ [பான்.
முன்னையூழ் கொல்லோ பலருமுள் ளிரங்க முடித்தனன் முடிந்திலே னென்

புண்ணியர் சாதிக் கடுத்ததோர் குணமே புரிந்தன னென்றசித் திடுவா
ரண்ணிய விஃதியான் செயவுநோன் றிருந்தா ரருட்டிரு வுருவரா தலினு
னண்ணிய விந்தப் பிழைதவிர்ந் துயலு நமக்குள தோவென நவில்வான்
றிண்ணிய வன்பு மறிவுநம் பெருமான் றிருவரு ளாற்பெற்ற வீரன். (௨௯)

எனப்பல புகன்று கரைந்துநெக் குருகு மிருஞ்சிலை வேட்டுவன் முன்னர்க், கனத்தினுங் கரிய கண்டனு ருமையாள் கணவனு மொருமறை யவர்போன், மனத்தினுங் கடுகத் தோன்றிமுன் னின்று வரிசிலை வேடனை நோக்கி, யனத்தினும் பொலியு நடையினு ளொடுயா மறைவது கேட்டியென் றறைவார். (௩0)

உரைப்பது கேட்டி நின்னைநின் மனையை யுவந்தினி தாளுதற் பொருட்டு
விரைப்பது மத்தோ னுதிவா னவர்கண் மேவுதற் கரியயா மருளாற்
றரைத்தலை வெளிப்பட் டிருந்தனங் கருவி தாக்கலிற் றிருமுடி நின்றும்
விரைத்தசெந் நீருந் தோற்றிநின் மனையாள் வேண்டலின் மாற்றின மன்னே.

திருமுடித் தழும்பு பூண்டகா ரணத்தாற் றிருமுடித் தழும்பனொன் றொருபேர்
மருவினம் வீரத் தருவடி நாளும் வயங்கியே சிலாக்கிய மாகி
யொருவற வுறலின் வீரசே கரப்பே ருற்றன மிவ்விரு பெயருங்
கருவனு மொழிக்கும் புத்தியு மளிக்குங் காலையிற் புகன்றிடு பவர்க்கே. (௩௨)

பரம்பரன் முடியிற் றழும்புறச் செய்தேம் பாவியே மென்றுநீ கவலல்
பிரம்படித் தழும்பும் வில்லடித் தழும்பும் பெயர்த்தெறி கல்லடித் தழும்பும்
வரம்பறு சிறப்பிற் செருப்படித் தழும்பும் வயங்கிய வாள்வெட்டுத் தழும்பு
நிரம்பிய வியலிற் பரிக்குரத் தழும்பு நிகழுறு பூசைவாய்த் தழும்பும். (௩௩)

குடம்புரை செருத்தற் றேனுவோ டடுத்த குழக்கன்றின் குளப்படிச் சுவடுந்
தடம்புயத் தொருவன் கதையடிச் சுவடுந் தாங்கிய நமக்கிதோர் பொருளோ
விடம்பட வுணரி னின்னமும் பலவா லிசைப்பது நமக்குமுற் றுது
திடம்படு மிவைபோற் பலவுநந் தமக்குத் திருவிளை யாட்டெனத் தேர்தி. ()

இத்தலத் தெனமயு மெமக்கொரு வடகீ ழெல்லையி னமருமை தனையு
நித்தலும் வழிபட் டேத்துபு வருதி நின்மனை யாளொடும் பின்ன
ருத்தமக் கதிநல் குதுமென வுரைத்தவ் வொளிதரு மிலிங்கத்துண் மறைந்தார்
சித்தமிக் குவந்து மனையொடு கிராதன் சேவடி பன்முறை பணிந்து. (௩௫)

வடகிழக் கெல்லை யடைந்தன னங்கு மதிமுடிக் கொழுநனுக் கேற்பத்
தடமுலை யுமையா டிருவுருக் கதிர்ப்பத் தான்வெளிப் பட்டினி தமர்ந்தா
ளடர்பெரும் புலியி னிதுவலா யுணரா வதிசய மிதுவெனத் தெரிந்து [தான்.
மடனறப் பணிந்து போற்றுபு மனையின் மனையொடுஞ் சென்றுவாழ்ந் திருந்
புண்ணியப் பெருமான் றிருமுடித் தழும்பு பூண்டதை யெடுத்துரை செய்தாங்
கண்ணிய கிராதன் மனையொடு மாங்குக் காலையு மாலையும் புகுந்து
நண்ணிய சிறப்பிற் போற்றுபு வருநா ணடுசோ ணாடினி தளிக்குந்
தண்ணிய வளவ னடைந்துபூ சித்த சரித்திர மினியெடுத் துரைப்பாம். (௩௭)

வீரசேகரர் திருமுடித்தழும்புற்றபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், உ௫௦.

# சோழன் திருப்பணிப்படலம்.

தடநெடு விசும்பு போழுஞ் சையமால் வரையி னின்று
மிடலிய புடவி கீளா வியங்குகா விரிநீர் பாய
வடர்பல வளங்கண் மல்கிச் சிவாலய மனந்தஞ் சீர்த்துப்
படர்தமித் தடைந்தார்க் கின்பப் பயன்றருஞ் சோழ நாடு. (௧)

போடெலா மஞ்சு துஞ்சும் பொழிலெலா மயில்க ளாடு
நீரெலாந்தீர்த்த மாகு நிதியெலா மெங்கும் போர்க்குந்
தாரெலாஞ் சுரும்பு மொய்க்குந் தடமெலாங் கழுநீர் மல்குஞ்
சீரெலாந் திருந்தக் கொண்ட செம்பியர் புரக்கு நாடு. (உ)

மறைபல முழங்கு மார்ப்பு மணவினை யார்ப்பு மாத
ரறைமுழ வாதி மல்க வாடரங் காடு மார்ப்பு
நிறைபெருஞ் சாற்றி னார்ப்பு நிரம்பியே முழங்கும் போர்க்கு
முறைதிறம் பாது சோழர் முறைபுரி பொன்னி நாடு. (௩)

இத்திரு நாடு தன்னி லிரும்புனற் பொன்னி யாறு
நித்திலம் வரன்றி வீசு நெடுந்திரைப் புணரி கூடி
மெத்திய புனிதஞ் செய்யு மேன்மைபெற் றுடைய மூதூர்
பித்திகை நெடுவான் றோயும் பெரும்புகார் நகர மாமால். (௪)

கொடிநிரை விண்டு ழாவுங் கோணைவெங் களிற்றுத் தொண்டை
கடிகெழு மண்டு ழாவுங் கருமுகி லுறங்கு மாடத்
தொடிதலில் வனப்பு முற்று முற்றவர் கண்டு ழாவு
மடியவ ரெண்டு ழாவு மறம்பொலி பூம்பு காரூர். (௫)

திருவளா ராரூர் தெய்வச் சேய்ஞலூர் கருவூர் செம்பொற்
குருவளா ருறையூர் பொன்னி கூடும்பூம் புகாரோ டைந்து
மருவள ரலங்கன் மோலி வளவர்சூ டிடமா மேனு
முருவளர் புகாரைந் துள்ளு முதற்றென வுரைப்ப ரான்றோர். (௬)

அன்னநன் னகரின் வாழ்வா னாதித்தன் குலத்து தித்தான்
பன்னருங் கலையுந் தேர்ந்தான் பாருயிர்க் கொருதாய் போல்வான்
மின்னவி ரலங்கன் மாலை மேவலர்க் கசனி யன்னான்
கன்னவில் குவவுத் தோளான் கண்டனென் றிசைக்கும் பேரான். (௭)

மயிலியற் கருங்கட் செவ்வாய் வெண்ணகை மடந்தை நல்லார்க்
கெயிலழற் கொழுந்தின் மூழ்க வெய்தவெம் பெருமா னெற்றிப்
பயில்விழிக் கெதிரு ருத பசுஞ்சிலைக் காம னன்னான்
கயிலுடைக் கழற்பூ ணீங்காக் காலுடைக் காவ லோனே. (௮)

களங்கமின் மதியம் போலுங் காமர்வெண் குடைசெய் நீழ
லுளங்கவ லின்றி யெல்லா வுயிர்களு முவந்து வைக
விளங்குவைந் நுதிவாட் கொன்னார் வியனிறந் தடாறு செய்து
வளங்குல வார்த்தார் மன்னன் மாநிலம் புரப்பா னானான். (௯)

மருவலர் திறைசு மந்து வாங்குநா ளெந்நா ளென்று
பொருவரும் வாயில் காக்கப் புரோகித ரமைச்சர் சூழ
வொருவரும் புணரி சூழ்வைப் பன்றியு முறுத்தீ பத்தும்
வெருவரு மாணை செல்ல மேதினி புரக்கு நாளில். (௧௦)

முற்றுவெந் துயரத் தாழ்த்து முன்னையூழ் வலியென் சொல்வா
மெற்றுதெண் டிரைநீர் ஞால மெடுத்திசை கண்டன் மாமை
சற்றுமோர் பயனி லாதாய்ச் சாம்புற நுதலின் மாட்டுப்
பொற்றதோர் பொட்டிட் டென்ன வெண்குட்டம் பொருந்திற் றன்றே.

இட்டவெண் பொட்டி னெற்றி யியைந்தவெண் குட்டம் பின்ன
ரிட்டவெண் ணீறு மான வெழுந்தது சிறிது நாளின்
வட்டவெண் மதியே யந்த மன்னவன் வதன மென்ன
வட்டநீர் ஞாலஞ் சாம்ப முகத்தினும் விளைந்த தன்றே. (௧௨)

முகமுழு தளாவ லோடு முருக்குவெந் துயரத் தாழ்ந்து
தகவுடை மன்னர் மன்னன் சாம்பினா னன்ன காலை
யகனுளைந் தெண்ணி லாத மருத்துவ ரடைந்து நோயி
னிகறெறு மணிமுன் மூன்று மியல்புறக் கொடுமு யன்றார். (௧௩)

தரணிகள் பலருங் கூடித் தவமுயன் றிடுத லோடு
முரணிய தாகி மேன்மேன் மூண்டெழுந் ததுவெண் குட்ட
மிரணியமாதி வீசி யிருமறை யெடுத்துக் கூறு
மரணிய கழுவா யெல்லா மாற்றவுந் தீரா தாய்த்தே. (கச)

முகத்தள விருந்த குட்டங் கண்டமொய்ம் புடம்பு முற்று
மகத்தளர் வுலக மெய்த வளைந்தெழுந் தளாய சாலை
மிகத்தளர் வுற்று வேந்தன் மெலிந்து மூர்ச் சித்து வீழ்ந்தான்
சகத்தள வொழியு மோவித் தவாதமா சென்று ணைந்தே. (கரு)

சோர்ந்துவீழ்ந் துயிர்ப்பு மின்றித் துண்ணெனக் கிடந்தான் மாட்டுச்
சேர்ந்துமந் திரிகண் மூன்றுந் திறத்தின நஞ்சி யுள்ளத்
தோர்ந்துதம் பெருமான் காதிற் சுக்குலைத் தூத வாதி
யார்ந்தபல் வினையுஞ் செய்தா ரயர்வுதீர்ந் தெழுந்தா னன்றே. (கசு)

எழுந்தமன் னவனை நோக்கி யெண்ணிலா வமைச்ச ரேனைச்
செழுந்தவ மறையோர் முன்னோர் செப்புவார் கவலேன் மன்னோ
கொழுந்துகொள் வேணிக் கூத்தர் தலமெலாங் குறுகிப் போற்றி
னழுந்துவெந் துயர்செ யிந்தக் குட்டநோ யகலு மென்றார். (கஎ)

அறிவினிற் சிறந்தீர் நீவி ரன்புகூர்ந் துரைத்த வாறே
பறிநிகர் வேணிக் கூத்தர் பதியெலாஞ் சென்று சென்று
செறிதரக் கும்பிட் டேத்தி மீள்குவன் றீரா தாகிற்
பிறிதிலை யுயிரை யிந்தப் பிணியொடுந் தீர்ப்ப னென்றான். (கஅ)

என்றர சுரைத்த லோடு மிரங்கியங் கிருந்தா ரியாரு
நன்றுரை செய்தா ரைய நானிலத் துள்ள வாய
வென்றநம் புராணர் தானம் விழைவொடு தொழன்மேற் கொள்ளிற்
கன்றலிப் பிணியோ சன்மப் பிணியும்போய்க் கழலு மென்றார். (ககூ)

ஆயவவ் வுரையை யாத்த னறைந்தமெய் யுரையாக் கொண்டு
தூயநற் புகழ்சால் கண்டன் றுனைந்துபல் சுற்றத் தோடு
மேயபல் படைக ளோடும் வெறுத்தபல் பொருள்க ளோடு
நாயனார் தலங்கண் டேத்தற் கெழுந்தன னன்னா ளன்றே. (உ0)

வேறு.

கங்கைநதி படிந்தெழுந்தா னந்தவன மெனுநாமக் காசி யேத்தி
மங்கையிடத் தாரமரிந் திரநீல பருப்பதமு மகிழ்ந்து தாழ்ந்து
கொங்கையக லாப்பொழிற்கே தாரமுமொண் பருப்பதமுங் குழைந்து கும்பிட்
டங்கைவடி வேலுடையா னனேகதங்கா வதமுமற்று மடைந்து போற்றி. (உக)

தொண்டைநா டணைந்துதிரு வேகம்பந் தொழுதுபல சுரும்பு பாடு
மிண்டைவார் சடைமுடியா ரோணகாந் தன்றளிநன் கிறைஞ்சி மேன்மை
கொண்டையா ரனேகதங்கா வதந்திருமேற் றளிவிருப்பிற் கும்பிட் டுற்றூர்
கண்டையா வெனவினிக்கு மொருகச்சி நெறிக்காரைக் காடு போற்றி. (உஉ)

வல்லமாற் பேறுகுரங் கணின்முட்ட மாகறலுண் மகிழ்விற் போற்றி
நல்லவோத் தூர்வன்பார்த் தான்பனங்காட் டூரூற னயந்து தாழ்ந்து
சொல்லநீ டிலம்பையங்கோட் டூர்வணங்கி விற்கோலந் தொழுதா லங்கா
டல்லன்முழு தறும்பாசூர் வெண்பாக்கங் கள்ளிவிவை யனைத்துங் கண்டு. ()

ஆயதிருக் காளத்தி யொற்றியூர் வலிதாய மவாவிப் போற்றிப்
பாயவட முல்லைவா யிலைத்தொழுது வேற்காடு பரிந்து தாழ்ந்து
நேயமிகு திருமயிலை கச்சூரா லக்கோயி னிரம்ப வாழ்த்தி
மேயவிடைச் சுரம்வான்மி யூர்கழுக்குன் றமும்பரவி வேந்தர் வேந்தன். (உச)

மன்னியவச் சிறுபாக்க மரசிலிவங் கரையிரும்பை மாகா ளஞ்சீர்
துன்னியமற் றிவைமுதலா கியபலவும் பெருவியப்பிற் றொழுது போற்றி
யன்னியமி னடுநாட்டி லரத்துறைகூ டலையாற்றூ ரடைந்து தாழ்ந்து
நன்னியமத் தூங்கானை மாடமுது குன்றுதினை நகரமேத்தி. (உரு)

புகழதிகை வீரட்டஞ் சோபுரநல் லெருக்கத்தம் புலியூர் மற்றுந்
திகழ்திருநெல் வெண்ணெய்திரு நாவலூர் கோவலூர் சேவித் தேத்தி
யிகழ்தவிரு மறையணிநல் லூர்வெண்ணெய் நல்லூர்நல் லிடையா றெந்தோ
மகழ்துறையூர் மாணிகுழி வடுகூர்முண் டீச்சரமிவை யணைந்து போற்றி. (உசு)

விண்ணுரு மதிற்றிருப்பா திரிப்புலியூ ராமாத்தூர் விரவிப் போற்றிக்
கண்ணுரு மெழிற்புறவார் பனங்காட்டூர் தொழுதிருவர் காணு தோங்கி
யெண்ணுருந் திருவண்ணு மலையிறைஞ்சி வளத்துளுவந் தியைய வெய்திப்
பண்ணுரு மொழிபாகர் மருவுதிருக் கோகன்னம் பரிந்து போற்றி. (உஎ)

மலைநாடு புகுந்தஞ்சைக் களம்பணிந்து பொலிகொங்கு வளநா டுற்றுக்
கலைநாடு மவிநாசி திருமுருகன் பூண்டிநணு கருவூர் போற்றி
நிலைநாடு கொடிமாடச் செங்குன்றூர் கொடுமுடியுண் ணிரம்பத் தாழ்ந்து
தலைநாடு வெஞ்சமாக் கூடலொடு பிறதலமுந் தாழ்ந்து வாழ்த்தி. (உஅ)

தாயிலளி சுரக்குநறும் புனற்பொன்னி வளமலியுந் தன்னு டுற்றுக்
கோயிறிரு வேட்களநெல் வாயில்கழிப் பாலையருள் குலவு முல்லை
வாயில்பெரு மணமயேந் திரப்பள்ளி கலிக்காமூர் வளர்சாய்க் காடு
ஞாயில்வளை பல்லவனீச் சரங்காட்டுப் பள்ளியெலா நயந்து போற்றி. (உகூ)

வெண்காடு குருகாவூர் கோலக்கா புள்ளிருக்கு வேளூர் காழி
யெண்காமர் மிகுகண்ணார் கோயில்கடை முடிநின்றி யூரும் போற்றி
யெண்காதங் கமழ்பொழிற்புன் கூர்நீடூ ரன்னியூ ரிறைஞ்சி யோங்கற்
பெண்காதல் கொளுமிடத்தா ரமர்வேள்விக் குடிபணிந்து பிறங்கற் றோளான்.

பகொதிர்கொள் பாடிமணஞ் சேரிதிருக் குறுக்கைகருப் பறிய லூரோ
நிகரரிய குரக்குக்கா வாளொளிபுற் றூர்பரவி நினைந்தார் தன்பந்
தகரமிளிர் திருமண்ணிப் படிக்கரையோ மாம்புலியூர் சார்ந்து போற்றி
யகரமுத லமர்தெய்வக் கானாட்டு முள்ளூரை யடுத்து வாழ்த்தி. (௫௧)

திருநாரை யூர்கடம்பூர் பந்தணைநல் லூர்வளமே திகழ்கோ டிக்கா
குருவார்மங் கலக்குடியொண் கஞ்சனூர் திருப்பனந்தாள் குணவாய்ப் பாடி
மருவாருஞ் சேய்ஞலூர் திருந்துதே வன்குடிநல் வளத்தா லொன்றும்
பொருவாத திருவியலூர் கொட்டையூர் முதற்பலவும் போற்றி வாழ்த்தி. ()

மன்னுபுறம் பயம்விசய மங்கையொளிர் வைகாவூர் வளரின் னம்பர்
பன்னுவட குரங்காடு துறைபழன மையாறு பகர்நெய்த் தான
மின்னுபெரும் புலியூர்கா னூர்பழுவூர் மழபாடி விண்ணோ ரேத்தத்
துன்னுவள வன்பிலா லந்துறைமாந் துறையொடுபாற் றுறையும் போற்றி. ()

திகழ்தருநல் லானைக்கா பைஞ்ஞீலி பாச்சிலாச் சிராம மீங்கோய்ப்
புகழ்தருநன் மலைபோற்றிக் காவிரித்தென் பாலமர்வாட் போக்கி பாவ
மகழ்தருசீர் பெறுகடம்பந் துறைபராய்த் துறைமுனிவ ரணைந்து போற்ற
விகழ்தருத லில்லாவன் புதவுங்கற் குடியொடுமூக் கீசம் போற்றி. (௫௪)

கலைமலிந்த திரிசிராப் பள்ளிநெடுங் களமேலைக் காட்டுப் பள்ளி
யிலைமலிந்த பொழிலாலம் பொழினிகழும் பூந்துருத்தி யெறும்பியூரே
தலைமலிந்த கண்டியூர் திருச்சோற்றுத் துறையெவருஞ் சார்ந்து போற்று
நிலைமலிந்த வேதிகுடி தென்குடித்திட் டையும்போற்றி நிகரில் வேந்தன். ()

புள்ளமங்கை யணிகிளர்சக் கரப்பள்ளி கருகாவூர் போந்து போற்றி
யுள்ளவினி தாகியபா லைத்துறைநல் லூராவூ ருவந்து தாழ்ந்து
தள்ளவொண்ணாச் சத்திமுற்றம் பட்டீச மாறைவட தளியு மேத்திக்
கொள்ளவினி தாயவலஞ் சுழிகுடமூக் கதனிற்கீழ்க் கோட்டங் கண்டு. (௫௬)

நிறைகுடந்தைக் காரோணந் திருநாகேச் சரம்போற்றி நினைந்தா ருள்ளக்
குறையறுக்கு மிடைமருது குரங்காடு துறைநலக் குடியு மேத்தி
யறைதருநல் வைகன்மா டக்கோயி னல்லங்கோ ழம்ப மான்றே
ருறைதிருவா வடுதுறைதண் டுருத்திதிரு வழுந்தூர்மா யூரந் தாழ்ந்து. (௫௭)

பறியலூர் விளநகர நனிபள்ளி திருச்செம்பொன் பள்ளி தாழ்ந்து
குறிகொள்வலம் புரந்தலைச்சங் காடுகட வூராக்கூர் குறித்துப் போற்றி
நெறிகொள்கட வூர்மயா னமும்வேட்டக் குடியுமுளை நிரம்பக் கண்டு
மறிவில்வளத் தெளிச்சேரி தருமபுர நள்ளாறு வணங்கி யப்பால். (௩அ)

அம்பர்திரு மாகாளங் கோட்டாறு மீயச்சூ ரணைந்து போற்றி
நம்பரம ருந்திலதைப் பதிதிருப்பாம் புரம்பணிந்து நாளும் வஞ்சிக்
கொம்பரிடை யார்நடஞ்செய் திருவீழி மிழலைசிறு குடியுந் தாழ்ந்தே
யும்பர்புகழ் பேணுபெருந் துறையெவருந் தொழும்வன்னி யூரு மேத்தி. ()

கருவிலியே நறையூர்ச்சித் தீச்சரமே புகழரிசிற் கரைப்புத் தூரே
பொருவிலிசேர் சிவபுரமே திருக்கலய நல்லூரே புகழ்ந்து சார்ந்தோன்
வெருவிலியாங் கருக்குடியே வாஞ்சியமே யுளத்தாலும் விருப்பு றுதான்
றிருவிலியா நன்னிலத்துப் பெருங்கோயி லேயிவையுஞ் சென்று போற்றி. ()

பொருவருங்கொண் டீச்சரமொண் பனையூர்விற் குடிவளத்தென் புகலூ ரங்க
ணொருவருநல் வர்த்தமா னீச்சரமி ராமனதீச் சரமே லோங்கு
தருவருந்தக் கொடியலைக்கு மதிற்செங்காட் டங்குடிதண் பயற்றூ ரின்னு
மிருவருந்தே டற்கரியார் மாமருகல் சாத்தமங்கை யெய்திப் போற்றி. (௪க)

நன்னாகைக் காரோணந் திருச்சிக்கல் கீழ்வேளூர் நலஞ்சார் தேவூ
ரன்னூரு மணுகரிய பள்ளியின்முக் கூடறிரு வாரூ ராங்கு
மின்னுரு மரநெறிமூ லட்டானம் பரவையுண்மண் டளிமே லோரும்
பன்னாளும் வீழ்ந்திறைஞ்சும் விளமர்திருக் கரவீரம் பரவிப் போற்றி. (௪உ)

பெருவேளூர் தலையாலங் காடுகுட வாயிலென்றும் பிறங்கு சேறை
கருவேர்தீர்த் தருணூர் மயானமொளி வளர்கவொய்க் கரைப்புத் தூர்வான்
பொருவேர்கொ ளிரும்பூளை திருவரதைப் பெரும்பாழி போற்றி யாரு
முருவேர்கொ ளவளிவணல் லூர்பரிதி நியமமிவை யுவந்து போற்றி. (௪௩)

வெண்ணிதிருப் பூவனூர் பாதாளீச் சரங்களருள் விரும்பு வார்தோ
மண்ணியருள் சிற்றேம முசாத்தானந் திருவிடும்பா வனமால் போற்றக்
கண்ணியெழு கடிக்குளநற் றண்டலைநீ ணெறிகோட்டூர் கருதுந் தேங்கூ
றெண்ணியவெண் டுறைகொள்ளிக் காடுகொள்ளம் பூதூர்பே ரெயிலும் போற்றி.

காறாயில் கன்றாப்பூர் நாட்டியத்தான் குடிநெல்லிக் காவுற் றோர்தம்
பேறாய வலிவலங்கைச் சினம்வாய்மூர் கோளிலிவண் பெருமறைக்கா
டோரா வகத்தியான் பள்ளிகோ டிக்குழக ருவந்து போற்றி
யேறாய வலிவளவர் பெருமான்றன் பூம்புகா ரெய்தி னானே. (௪௫)

பன்னியவிப் பலதலங்க டரிசித்து நோயொழிந்த பாடு காணுன்
மன்னியமெய்ப் புகழ்வளவன் மாழாந்து கவன்றுநெடு மறையோர் தம்மை
யுன்னியால் லமைச்சனாக்கூ யுரைத்தபடி தலச்சேவை யொருங்கு செய்துந்
துன்னியவிப் பிணியகன்ற தில்லையினிச் செயல்யாது சொன்மி னென்றான்.

என்றவனை யடிவணங்கி யெழுந்தமைச்சர் மன்னவர்த மேறே கேட்டி, நன்றமையும் பாண்டிநாட் ளதலமும் போற்றியபி னவிறி யென்றார், மன் றல்கமழ் தொடைப்புயத்தா னற்றாக வென்றுரைத்து வயங்க முன்போல், வென்றமையும் பரிசனம்பல் பொருள்களொடு மெழுந்தியங்கன் மேற்கொண் டானே. (௪௭)

ஆலவா யாப்பனூர் பரங்குன்றங் கொடுங்குன்ற மழகு வாய்ந்த
வேலவாய் குழல்பாக ராடானை கானப்பே ரேட கஞ்சீர்
நாலவா யுயிர்புகுபூ வணஞ்சுழியல் குற்றால நகுநெல் வேலி
சாலவாய் புனவாயில் பணிந்துதிருப் புத்தூருஞ் சார்ந்து தாழ்ந்தான். (௪௮)

பொற்புமலி திருவிரா மேச்சுரம்போய்த் தொழுதுமெனப் புத்தூர் நின்று
மற்புமலி தரவிரைந்து குணதிசைபோய்ப் பரிதிமுதிர்ந் தழற்ற நேர்ந்து
வெற்புமலி புயத்தரசன் வீரவனந் தனக்கடுத்த மேல்பா லோர்சார்
வற்புமலி பெருங்கானிற் படமாடத் தமர்ந்தனன்றன் வளங்க ளோடும். ()

கண்டனெனும் வளவர்பிரான் கானவள மமைச்சருடன் கலந்து நோக்கி
விண்டமலர் பலகவர்ந்துங் காய்கனியா திகள்கவர்ந்தும் வேறு வேறு
கொண்டபெருங் கிளைகொடுப்ப வாங்கியனு பவித்துமகிழ் கூர்ந்து வேட்கை
மண்டவதை நீக்குமுள மில்லானுய் வீற்றிருந்தான் வருத்தந் தீர்ந்து. (௫0)

வேறு.

வழிவரு மிளைப்பு நீங்கி மன்னவ னனைய கானத்
துழியமர் தருநா லன்பே யுருவமாங் கிராதர் கோமான்
கழிமகிழ் மனைவி யோடு காலைமா லையினுஞ் சென்று
பழிதபு வீரா மூலப் பகவனை யுமையைப் போற்றி. (௫௧)

உருகுபே ரன்பு பொங்க வொழுகுவா னொழுகு நாளிற்
றிருகுதீர்த் தென்னை யாண்ட சிவபிரா னுமையா ளோடு
பெருகுகா னகத்துக் கோயி லிலாதமர் பெற்றி நன்றோ
கருகுமே யுள்ள மெண்ணுந் தொறுமெனக் கசியா நிற்பான். (௫௨)

செறிபிற தலங்கள் போலச் சினகர மாவ தென்று
மறிதலில் பூசை யோடு வான்சிறப் பாவ தென்று
வறியன்யான் யாது செய்கேன் மாநிலத் தியாவர் பாற்சென்
றறிதர வுரைப்பே னென்று வழுங்குபு புழுங்கா நிற்பான். (௫௩)

இலைசரு குதிரா வண்ண மூடியிங் கிருந்த புற்றும்
புலையனேன் சிதர்த்தேன் சென்னித் தழும்பொன்று பொருந்த
னுலைதரா திருப்பேன் கோயி லாதிக ளொருங்கு ருவே [வைத்தே
னிலையுரு துயிரெற் கென்று நெட்டுயிர்த் தழிந்து சோர்வான். ()

பொருவரு மன்பி னிவ்வா றெண்ணுபு புலரா நிற்போ
னிருவரு முணரா வண்ண லென்றருள் செய்யு மென்று
கருவரு மனைவி யோடுங் கவலைமிக் குற்று ணோர்நா
ளொருவரு முணவு நீத்தா னுற்றுமண் கிடந்தா னன்றே. (௫௫)

அண்ணலா ரருளி னாலே சிறுதுயி லவற்குண் டாயிற்
றெண்ணலார் புரங்கள் செற்ற வெந்தையா ரருளல் வேண்டி
மண்ணலா ரிறைஞ்சு முந்தை மறையவர் வடிவங் கொண்டே
கண்ணலா ரனையான் காணக் கனவகத் தெய்தி னாரால். (௫௬)

விழிநுதன் மறைத்து வந்த வேதிய ரவனை நோக்கிக்
கழிதுய ரடைந்தா யன்ப கவலைசற் றேனுங் கொள்ளே
லொழிவில்பல் செல்வத் தோடு கோயிலு முவப்ப வுண்டா
மிழிவற நீயுங் காண்பை யாவருங் கண்டு வாழ்வார். (௫௭)

பொன்னிநன் னாட்டு நீடு புகாரெனு நகர்வாழ் வேந்தன்
கன்னியந் துளவத் தாரான் மிகையெனக் காவல் பூண்டான்
மன்னிய புகழின் மிக்கான் மலிதர நம்பா லன்பு
துன்னிய மனத்தான் கண்ட னெனும்பெயர் சுமந்த வள்ளல். ()

முந்துசெய் வினையான் மேனி மொய்த்தவெண் குட்ட நோக்கி
யெந்துசெய் குவலென் றெண்ணி யெம்முடைத் தலங்க ளெல்லா
நந்துமன் பமையப் போற்றி நம்மிரா மேசங் காண்பான்
வந்துமேல் பால்வ னத்து வதிந்தனன் வளங்க ளோடும். (௫௯)

அன்னவன் றனையு நின்போ லாள்வது கருத்திற் கொண்டோ
முன்னவ னம்மைக் காண்பான் மொழிதிசென் றென்று கூறித்
தென்னவ னாகி யானை செலுத்தினார் மறைந்து வீரைப்
பன்னவன் றருக்கீழ்க் கோசப் படிவத்துப் புக்கா ரன்றே. (௬௦)

கண்டவக் கனவை வீர னனவெனக் கருதி வாழ்வ
கண்டமும் பெற்றா னாகிக் கைகுவித் தெழுந்து புல்ல
கண்டமென் மொழியாள் பாகர் கருணையை வியந்து போற்றிக்
கண்டனைக் காணச் சென்றான் கணக்கிலா மகிழ்ச்சி யோடும்.(௬௧)

மறையவ ராகி நம்பர் வந்துதற் குரைத்த வாறே
நிறைவன யேல்பாற் றேன்று நெடிபடு கானஞ் சென்றான்
கறையடிக் களிறு மாவுந் தேருங்கா லாளு மற்று
முறைவளம் பலவுங் கண்டா னெழிலிலா வுவகை பூத்தான். ()

விரிபட மாடத் துள்ளால் விளங்கரி யணையின் மீது
பரிவகன் றிருக்கும் வேந்தைப் பார்க்கயான் வந்தே னென்று
தெரிதர வாயில் காப்பார்க் குரைத்தன னவருஞ் சென்று
வரிகழ லிறையைத் தாழ்ந்து சொற்றனர் வருக வென்றான். (௬௩)

புரவலன் கருணை பெற்று வாயில்கா வலர்பு குத்த
விரவிய வீரன் சேய்த்தே தாழ்ந்துதாழ்ந் தெழுந்து மேவி
யுரவுடை யனையான் முன்ன ரொருபுறத் தொதுங்கி நின்றான்
கரவிலா வவனை நோக்கிக் காவலன் விளம்ப லுற்றான். (௬௪)

யாரைநீ யிங்கு மேய கருமம்யா துரைத்தி யென்ன
வீரையா னடிக்கன் புற்றான் மீட்டுமெண் விழுந்தெ ழுந்தே
யாரையா தரிக்குந் திண்டோ ளையசிற் றடிநா யேனிக்
காரையார் காட்டு வேடன் கண்டடி பணிவான் வந்தேன். (௬௫)

உற்றவிக் கானின் கீழ்சா ரொருபெரு வீரை மூலத்
துற்றபுற் றகழ்ந்தேன் வள்ளி யுறுகிழங் கெடுத்தற் காக
வுற்றவப் பொழுது கண்டே னொருசிவ லிங்கஞ் சென்னி
யுற்றதென் கருவி செந்நீ ருதித்துப்பின் மாறிற் றன்றே. (௬௬)

அந்தமா விலிங்கத் தோற்ற மையநிற் குணர்த்த வெண்ணி
வந்தனெ னடியே னென்று மறுவலு மடியிற் றாழ்ந்தான்
முந்தவா தரத்தின் வீரை முதல்வர்தந் தோற்றங் கேட்ட
சந்தமார் செவிவெண் குட்டந் தவிர்ந்தது பலருங் கண்டார். (௬௭)

மறையவ ரமைச்ச ராதி யாவரு மகிழ்ச்சி பூத்தார்
நிறைபெருங் களிப்பு மேவிக் கிராதர்கோ மகனு நின்றா
னறைசில ராடி காட்ட வரசனுங் கண்டு வந்து
குறைவில்பே ரன்பு கொண்டான் கூறிய விலிங்கங் காண. (௬௮)

ஆயமா விலிங்க மெங்கே யமர்தருங் காட்டு கென்று
தூயகா வலனெ ழுந்தா னெழுதலுந் துணைத்தாட் குட்டம்
போயதா லதனைக் கண்டு பூரண னருளை யெண்ணி
மேயனை குவித்தான் கையிற் குட்டமும் வீந்த தன்றே. (௬௯)

மறவன்முன் னடவை காட்ட வாரிநீ ருலகங் காக்கு
மறவன்றன் றமரோ டெம்பி னடைந்தனன் வீறா மூலத்
துறவன்றன் வடிவங் கண்டா னொய்யெனத் தழுவி னான்முன்
னிறவனில் விறைவ னென்ன நீங்கிற்று முழுது மாதோ. (௭௦)

தண்ணிய கவிகை வேந்தன் சம்பரா ரியுந்தாழ் மாமை
நண்ணிய மேனி சூழ்ந்த குட்டநோய் நசித்து நீங்க
மண்ணிய மணியை யேய்க்கு முன்னையி னுருவம் வாய்ந்து
கண்ணிய விறும்பூ தோடு களிப்புமீக் கூர்ந்தா னன்றே. (௭௧)

இடையறா தொழுகுங் கண்ணீ ரிருநிலஞ் சேறு செய்ய
வடையறா வீறா மூலத் தமர்ந்தநா யகனை நோக்குங்
கொடையறாச் செங்கை கூப்புங் குடந்தம்பட் டெதிரே நிற்கு
நடையறா விதியிற் பல்கா னயந்துமண் டோயத் தாழும். (௭௨)

பன்முறை பழிச்சா நிற்கும் பன்முறை சூழா நிற்கும்
பன்முறை யிறும்பூ தெய்தும் பன்முறை நிருத்தஞ் செய்யும்
பன்முறை யஞ்ச லிக்கும் பன்முறை யருள்கொண் டாடும்
பன்முறை தழுவிக் கொள்ளும் பன்முறை யுயிர்த்து மோக்கும். (௭௩)

மறையவர் தம்மைப் புல்லு மமைச்சரை மகிழ்ந்து புல்லு
நிறைதரு காதன் மற்றைச் சுற்றத்தை நிரம்பப் புல்லு
மிறையகல் களிப்பி னின்ற வேடர்கோ மகனைப் புல்லு
மிறையவன் கருணை யிங்ங னிருந்தவா றென்னே யென்னும். (௭௪)

நினைசிவ தலங்க ளெல்லா னொரேலெனத் தரிசி யென்னு
வெனைவியங் கொண்ட வான்றோ ரியல்பினைப் புகழ்கோ வென்னும்
வினையின்மற் றிவர்த முண்மை வெளிப்படை யுறவெற் கோதிப்
புனையுமிந் நன்மை தந்த வேடனைப் புகழ்கோ வென்னும். (௭௫)

மேயவிக் குட்ட நோய்செய் மேனியின் வெளுப்புந் தீர்ந்தே
னுயவெங் கூற்றிற் கென்பா லாம்விழிச் சிவப்புந் தீர்ந்தேன்
பாயபல் பிறவி யாக்கும் படர்மலக் கறுப்புந் தீர்ந்தேன்
சேயமெய்ப் பெருமான் வீர சேகர னருளா லென்னும். (௭௬)

இவர்பெருங் கருணை ரூப மிவ்வியல் புடைய தென்று
தவர்களு முணர மாட்டார் தத்துவ முணர்ந்தே னந்தோ
வுவரடை கடல்சூழ் வைப்பி லுறுமுக வுரோம நத்தங்
கவர்சிக ழிகைமுற் றுங்கி வேடுருக் கதித்த தென்னும். (௭௭)

குட்டநோய் தீர்த்தா ரென்று கூறலென் றரணி நால்வாய்ப்
பட்டநோய் முழுதுந் தீர்த்தார் பற்பல பிறவி யென்னுங்
கட்டநோய் முழுதுந் தீர்த்தார் கஞ்சுகன் கழுவா வென்ன
விட்டநோய் முழுதுந் தீர்த்தார் யாவரே தீர்ப்பா ரென்னும். (எஅ)

சுனைபடு கருவி தாக்கச் சுவடுதஞ் சென்னி யேற்றும்
புனைபடு மெளியே னுற்ற புழுக்கநோய் புழுங்கத் தீர்த்து
முனைபெருங் கருணை யேயோ ருருக்கொடிங் கமர்வார் தம்மை
மனையய னெடுமால் காணு வண்ணமு மிறும்பூ தென்னும். (எகூ)

உற்றவன் புருவ மாய வொருவனிவ் வாறு போற்றிக்
கற்றவர் கருத்து ணீங்கா வுமையையுங் கனிந்து தாழ்ந்து
முற்றவும் பிரிதற் கஞ்சி மொய்த்ததன் றமரி னோடும்
பொற்றதன் னிருக்கை வேட னிறைவனும் பொருந்தப் புக்கான். (அ0)

வேறு.

அல்லலற் றிருக்கை புகுந்தவே லரச னமைச்சரா தியர்முக நோக்கி
மல்லலுற் றமைந்த காசிமுற் பலவாம் வண்டல மெலாந்தரி சித்துஞ்
செல்லன்மிக் கியற்று குட்டநோய் சிறிதுந் தீர்ந்தில தித்தலத் தெய்தப்
புல்லலுற் றதுபே ரின்பநோய் தீர்ந்து போயதென் பதுமொரு புகழோ. (அக)

நண்ணிய தலங்கள் பலவுளுஞ் சிறந்த நற்றல மிதுவெனத் தெளிந்தே, னெண்ணிய விதனைத் தெரித்தவிவ் வேடற் கியற்றுகைம் மாறொன்று மில்லேன், றண்ணிய வருள்செய் தென்னுயி ரளித்த தம்பிரான் வீரசே கரன்மெய்ப், புண்ணிய வுமையோ டிருந்தனன் வனத்துட் பொற்றவா லயமிலா தழகே. (அஉ)

தொழில்செய்வார் பலரைக் கூய்ப்பொருள் வீசித் தொக்ககா டகழ்ந்துமண் டிருத்தி, யெழில்செயா லயநுண் டொழில்படச் சிறப்பி னிடங்கொள வியற்றுமி னின்னே, கழிமகிழ் கொண்டி னெத்துணைச் செம்பொன் கழியினு மென்றன னிதமே, பொழிதிறத் தமைச்சர் புத்தியென் றேற்றூர் புகழ்ந்துவே டனும்விடை கொண்டான். (அ௩)

மதிவல வமைச்சர் வனமெறி தொழிலின் மாண்டவெண் ணிலர்களைக் கூவி
நிதிபல வீசி யின்றுகா டகழ்ந்து நிலச்சம மியற்றுமென் றுரைப்ப
நுதிவசி நவியங் குயமுதற் கருவி நுவலருந் திறற்புயந் தாங்கிப்
பொதிதரு காட்டிற் புகுந்தனர் முயன்று பொள்ளெனத் தொழில்செய லுற்றார்.

கிளைபல தறிப்பார் வேரறக் களைவார் கெடலரும் பரரைையைக் குறைப்பார்
தளைகொடி யறுப்பார் காய்கனி கிழங்கு தகுதியின் வேண்டுவ கவர்வா

ரிளைபடு சிலகண் டகஞ்செறி புதல்வா யெரிகொழுந் தெழப்பொருத் திடுவார்
வளைவன முழுது மிங்ஙன மழித்தார் மாண்புடை வீரையொன் ஞெழிய. ()

கலந்தவர்க் கிடையூ றுற்றிடு காலைக் கைவிடு கயவரே போல
வலந்தவில் வனந்தீர்ந் தயல்வனம் புகுந்த வாவயிற் பயின்றமா வனைத்து
நலந்தபு காலு மொருங்கனு பவிக்கு நல்லவர் போறபல கொடியின்
குலந்தப வழிந்து சாய்ந்தன தழுவிக் குலாயபற் பலதரு வோடும். (அசு)

நிலையியற் பொருளு மியங்கியற் பொருளு நிலைதப முழுமையு மழிய
வுலைவிலெம் பெருமா னொருவனே நின்றாங் குறுவன முழுமையு மழிய
விலைமலர் துவன்றித் தலைமைகொள் வீரை யெனுந்தரு வொன்றுமே நின்ற
தலைகடல் குடித்தா னெனநிலைச் சமமு மாற்றின ரறிவித்தா ரன்றே. (அஎ)

அதுதெரி யமைச்சர் சிற்பநூல் வல்லா ரளவிலர் வரும்படி கூவிக்
கதுமென வளவில் பொருண்முதற் றெறிந்து காணுமி னலய மென்றார்
குதுகல மடைந்து தபதியர் பல்லோர் குழாங்குழா மாயுளத் துணர்ந்து
முதுமறை யுணராப் பிரம்பரன் கோயின் முறைமையி னியற்றிட லுற்றார். ()

எற்றுநா லிடுவா ரிட்டநா ளளவி னிருநிலம் பிலமுறத் தொடுவார்
மற்றுமப் பிலம்பேர்ய் மணிதரத் தூர்ப்பார் வன்மைசெய் குற்றிகொண் டிடிப்பார்
பற்றுமா தரத்தி னிடுகை சுடுவார் பகரரி தாகநா றிடிப்பா
ருற்றுநீர் நிறையிற் சுரும்படு கட்டி யுறத்தகர்த் திட்டனர் கரைப்பார். (அகூ)

நிரைவரை பிளப்பா ரயலிடத் துய்ப்பார் நிற்பவுங் கிடப்பவு மாகப்
புரையறத் தடிந்து நுண்டொழில் புரிவார் போக்கரும் பண்டியேற் றிடுவார்
தரைவெரி னெளியச் செலுத்துவார் குறித்த தலத்திடை யிழிச்சுவார் பொருத்தி
விரைதரச் செலுத்தி யடுக்குவார் மூண்டார் வேலையி லிங்ஙன மாதோ. (கூ0)

வளர்கருக் கிரக மத்தமண் டபமா மண்டப நிருத்தமண் டபமேர்
தளர்வறும் வசந்த மண்டப மூர்தி தயங்குபொன் மண்டபம் விசும்பிற்
கிளர்தரு விழாக்கொண் மண்டபஞ் செம்பொன் கெழுமுகா னூறற நிறுவி
விளர்தவப் புரிமண் டபஞ்சகத் திரக்கால் விளங்கிய மண்டபம் பிறவும். (கூக)

ஒளிவள ருமையா ளமர்திருக் கோயி லுறுமழ கும்பல்வாழ் நகர
மளிவளர் குமரக் கடவுள்வாழ் கோட்ட மற்புத மதிமுடிப் பெருமான்
றளிவளர் சோமாக் கந்தர்வாழ் நியமந் தவலரு மாநந்த நடஞ்செய்
வெளிவளர் மன்ற மற்றுமா வரண விண்ணவ ருறைபெரும் பாழி. (கூஉ)

வெளிமுக டணவு கோபுர மிஞ்சி விரிகதிர் சமழ்ப்புறு விமான
மொளிகெழு யாக சாலைசெந் தழலோ னுழிதரா தமர்மடைப் பள்ளி

களியமை சிறப்பிற் பலிபிடு பீடங் கதிர்செயு மடுக்குமண் டபந்தேத்
துளிபடு வீரா சூழ்பெருங் குறடு சொல்லுமற் றியாவுஞ் செய் தமைத்தார். ()

வளவர்தம் பெருமாற் கமைச்சர்க ளுணர்த்த வந்துநோக் கினன்மகிழ் பூத்துப்
பளகற முழுகுந் தீர்த்தமின் றென்று பரிந்தனன் பிரான்முனம் பணிந்தா
னுளநெகிழ் கருணை யுமையவண் மணாள னும்பர்தம் பிரான்றிரு வருளா
லளவினம் மெதிரே சிவகங்கை நாம மடைந்தமர்ந் திட்டதோர் தீர்த்தம். ()

மற்றத னெல்லை தெரியநாற் புறத்து மணமலர் சிந்துபு கிடக்கு
முற்றதை யுணர்ந்து தொட்டுநின் பெயரா யுறுத்தென வெழுந்ததோர் வாக்கு
நற்றவ வளவ னஃதுணர்ந் தெழுந்தா னயந்துகீழ்த் திசைத்தம ரோடும்
பற்றமை விருப்பிற் சென்றனன் கண்டான் பன்மலர் சூழ்தரக் கிடத்தல். ()

கண்டனன் வணங்கி யெழுந்தனன் மலர்கள் காட்டிய வெல்லையிற் றொட்டு
விண்டவழ் கங்கை யாவயிற் பொலிய விருப்பொடு தாபித்துச் சூழ்தல்
கொண்டசோ பான மண்டபம் பிறவுங் குயிற்றியொண் கரைமுழு தமையத்
தண்டலை நந்த வனம்பல சமைத்துத் தவாததன் னுமமும் புனைந்தான்.(கசு)

கூறிய வினைய வேதுவாற் சோழன் குளமென யாவரு முரைப்பார்
நாறிய மலரார்ங் கண்ணியான் பின்னு நாற்றெரு வகுத்துநால் வருணத்
தேறிய குடியும் பிறகுடி களுநன் கிருக்குமா ளிகைபல சமைத்து
வீறிய வன்ன சத்திர மாதி விம்மிதம் பொலிதரச் கண்டு. (கஎ)

களிமிக நடன நவில்பவர் சோமாக் கந்தர்முன் னோர்திரு வுருவு
மளிமிகக் கண்டு குடைகொடி கவரி யாதிய பற்பல விருது
மொளிகெழு குடங்கொப் பரிமணி முதலா வுற்றபல் பாத்திர வகையுந்
தெளிமணி பொன்செய் கலம்பரி வட்டந் தேர்முத லூர்தியு மாக்கி. (கஅ)

மற்றுமா லயத்துக் குரியன பலவும் வழாவகை பொருந்துறப் பொருத்திச்
சுற்றுநால் வகைய குடிகளும் பிறவுந் துவன்றிடும் படியினி தேற்றிக்
கற்றுமே தகைபூண் டவர்தமைக் கொண்டு கடலினும் பல்லிய முழங்க
வெற்றுநீர்ப் புடவி தழைதர நன்னு ளேந்துகும் பப்புன லாட்டி. (கக)

அறைதரு மாதி சைவரோ யாதி யலகிடு பவர்களீ றாக
நிறைதரு தளித்தொண் டாற்றுவார் பலர்க்கு நிரம்புபொன் னுடைமுன் னுகப்
பொறைதரு பலவு முதவிநன் குவப்புப் புரிந்துநித் தியமுதன் மூன்று
முறைதரு நிகமா கமப்படி நடக்க வுஞற்றினன் வ்ளவர்தங் கோமான்.(க00)

உண்மைசால் வீர சேகரப் பெருமா னுற்றவர்க் கருள்செயுந் திறமும்
வண்மைசா லெங்க ளுமையவ ளருளு மாட்சியுஞ் சிவகங்கை யென்னுந்

தண்மைசால் சோழன் குளப்பெருஞ் சீருந் தரணிவா னுலகெலாம் பரந்த
வண்மைசால் வளவன் வேட்டுவ னோடு மகமிக மகிழ்ந்தனன் மாதோ. (க0க)

நறைகமழ் தருமார்ங் கண்ணியா னுடல நலிவுசெய் குட்டநோய் தீர்ந்து
குறையற வேண்டுந் திருப்பணி யனைத்துங் குயிற்றிய தெடுத்துரை செய்தா
மறைபுகழ் வீர சேகர ரிடப்பான் மருவிய வுமைதிரு வருளாற்
றறைபுகழ் மகவொன் றீன்றுபின் முத்தி சார்ந்தினி தமர்ந்தது மொைப்பாம். ()

சோழன் திருப்பணிப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௬௫௨.

# சோழன்

# மகப்பெற்று முத்தியடைந்தபடலம்.

மருவல ருடலம் போழ்ந்து வழும்பொடு தடிவாய்ப் பெய்து
குருதிநீர் முழுது மாந்திக் குடர்நெடு மாலை பூண்டு
பொருவருங் கொழுச்சு வைத்தும் பொருபசி யடங்கு றாம
லிருகடை வாயு நக்கு மிலங்கிலை வடிவேற் கண்டன். (க)

திரையெறி கடல்சூழ் ஞாலஞ் சேவித்து மகிழ நாளா
திரையுவந் துமையாள் காணத் திருநடம் புரிம றைக்கு
திரையுகைத் தருளும் வீர சேகரப் பிரானுக் குச்சித்
திரைவிழா வாதி யாய திருவிழாப் பலவுஞ் செய்தான். (உ)

கூடிய புகழ்சால் சோழன் குளமெனு நாமம் பெற்று
நீடிய தெய்வ மேன்மை நிகழ்சிவ கங்கைத் தெண்ணீ
ராடிய வருளி னம்மா வத்திர தேவர் நல்கப்
பாடிய வுலகோர் யாரும் படிந்துதங் கவலை நீத்தார். (௩)

இன்னநன் ஞளி லோர்நா ளிருந்துகிர் கொழுந்து விட்டா
லன்னசெஞ் சடையார் வீர சேகர வமல னுர்க்கு
மின்னவிர் மருங்குற் செவ்வாய் வெண்ணகை யுமையா ளுக்கும்
பன்னரு முகிலார்ப் பன்ன பணைபல முழங்கா நிற்க. (௪)

அறைபல பொருளுங் கூட்டி யபிடேகஞ் சிறப்பச் செய்து
நிறைசுவை வருக்க மாய நிவேதனம் பலவு மூட்டி
முறைமையின் முகம னெல்லா முறிவறப் புரிந்த பின்னர்
நறைகம ழலங்கற் றோளா னயந்திது துதிக்க லுற்றான். (௫)

அன்பெனு மொருதா யீனு மருளெனு மொருசே யென்பர்
மன்பெருங் கருணை யாலே யருள்வழங் கினையெ னக்கு
நன்புவி யவர்தா யில்லாச் சேயென நவிலா வண்ண
முன்புரைத் ததும ளித்தன் முறையன்றோ முக்கண் மூர்த்தி. (௬)

மருவுமெய்ப் பிணியெற் கோவ வழங்கினை யருளா றாவ
தொருவிலே ழாவ தோடும் பயன்றொகை யுரைப்ப தோடு
வெருவரும் பெரியோர் பண்புத் தொகையையும் விளம்பு மாறு
திருவருள் வழங்கல் வேண்டுஞ் சிற்பரா நந்த மூர்த்தி. (௭)

பிணிதர வந்த மேனி வெண்மையைப் பெயர்த்தாய் மற்றுந்
திணிதர வமைந்து மூல மலமெனச் செப்ப மேய
பிணிதர வந்த தாய வறிவின்வெண் மையும்பெ யர்த்தி
திணிதர வுலவு மோர்முப் புரஞ்செற்ற தேவ தேவே. (௮)

அலருநின் கருணை யாலே யறிவிலா துழன்று தேம்பிப்
புலருமென் றனையு மாண்டு புல்லிய பணியுங் கொண்டாய்
வலருமாய்ந் துரைக்க வொண்ணா மாண்பினின் னடியா ராய
பலருமென் பணிய வாவப் பண்ணுதி பரமா நந்தா. (௯)

ஒருமல வலியா னென்று மிருவினை யுடையா னென்றும்
வெருவுமும் மலத்தா னென்றும் விளம்பினர் விளம்பி நிற்க
வருள்கனிந் தென்னை யாண்டா யாண்டதற் கியையு மாறுன்
பொருவிலா ஞான மேய்த்தி பூரணா னந்த வாழ்வே. (௧௦)

வெருவுற மடங்கு மோரேழ் விடையுடை விடையாய் போற்றி
கருநிறக் கடல்சு வற்றுங் கணையுடைக் கணையாய் போற்றி
பெருகெழில் சுமந்த வாக்கப் பெண்ணுடைப் பெண்ணாய் போற்றி
முருகலர் மேனிக் கொப்பு முகிலுடை முகிலாய் போற்றி. (௧௧)

கமலையொண் மாமை நோக்குங் கண்ணுடை யடியாய் போற்றி
யமருமக் கண்கூ ழென்பு கைவிர லணிந்தாய் போற்றி
பமரமுண் டுழக்கும் பச்சைத் துளவொரு பாலாய் போற்றி
தமரவே தங்க ளுறும் பரிகலந் தரித்தாய் போற்றி. (௧௨)

திரிபுர மெரித்தாய் போற்றி தீமழுத் தரித்தாய் போற்றி
கரியற வுரித்தாய் போற்றி கலைபல விரித்தாய் போற்றி
யரியுடல் பரித்தாய் போற்றி யடியர்மா சிரித்தாய் போற்றி
விரியறந் தெரித்தாய் போற்றி வீரையங் குரித்தாய் போற்றி. (௧௩)

ஒளிகெழு பிழம்பே போற்றி யுமையவண் மணாள போற்றி
யளிகொளெண் குணத்தாய் போற்றி யமைந்தவெட் டுருவாய் போற்றி
மூளிதவிர் வீரை மூல முளைத்தெழு சுடரே போற்றி
தெளிபவர்க் கினிக்கும் வீர சேகரப் பிரானே போற்றி. (௧௪)

விழையுமன் புருவ மாய விறற்கழற் கண்டன் கண்சண்
மழைபொழி தரமெய் யெங்கு மயிர்சிலிர்த் தெழவிவ் வாறு
குழைவொடு துதித்துப் போற்றிக் குடந்தமுற் றியங்கி யார்வந்
தழைதர வுமையாண் முன்பு சார்ந்திது துதிக்க லுற்றான். (௧௫)

உருகுமெய் யடிய ருள்ளத் தொளிவளர் விளக்கே போற்றி
சருகுவன் மலநோய் தீரக் கடைக்கணித் தருள்வாய் போற்றி
பெருகுபல் லறமு நாளும் பெயர்வற வமர்ந்து வாழுங
குருகுமுன் கையாய் போற்றி குலமலை மருந்தே போற்றி. (௧௬)

எண்ணிய வன்பு செய்வா ரென்றுமெய்ப் புரும லோம்பும்
புண்ணிய முதலே போற்றி பூரண னந்த ரூப
நண்ணிய தாயே போற்றி நல்லவர் நயந்து நாளு
மண்ணிய வீரை மேவு மருட்பெருங் கடலே போற்றி. (௧௭)

நகுபரை யாதி யிச்சை ஞானம்வண் கிரியை யாகி
மிகுதொழி லைந்து மெங்கள் வீரசே கரனார் செய்யத்
தகுதுணை யாகி நிற்குந் தண்ணிய வமுதே தஞ்சம்
புகுமவ ரெய்ப்பில் வைப்பே புண்ணிய வாழ்வே போற்றி. (௧௮)

அறைதரு மிலயம் போக மதிகார மூன்று மாகி
நிறைதரு மினும்பல் வேறாய் நிகழ்தரு திருவே போற்றி
மறைதரு முதலே போற்றி மறையினுட் பொருளே போற்றி
யுறைதரு மறையி னந்த முணர்தரா வுமையே போற்றி. (௧௯)

மருவள ரளகம் போற்றி வளரொளி வதனம் போற்றி
யுருவள ரருட்கண் போற்றி யுவமையில் செவ்வாய் போற்றி
கருவளர் பவந்தீர் ஞானங் கசிந்தெழு கொங்கை போற்றி
திருவள ருமையே நின்பொற் சேவடிக் கமலம் போற்றி. (௨௰)

எண்ணிய வரங்க ளெல்லா மெண்ணியாங் கெளிதி னீயும்
புண்ணிய வுமையாண் முன்னு மிங்ஙனந் துதித்துப் போற்றித்
தண்ணிய குணத்து வேந்தன் றன்பெருந் தமர்கள் சூழக்
கண்ணிய மேல்பாற் கானக் கண்ணம ரிருக்கை யுற்றான். (உக)

அன்னவெங் கான முற்ற வழித்துமா நகருண் டாக்கிப்
பன்னருங் குடிக ளேற்றிப் பலவளங் களும்பொ ருத்தித்
தன்னமுங் குறையு றாது தன்பெயர் விளங்கு மாற்றாற்
கன்னவி றடம்பு யத்தான் கண்டனூ ரெனும்பே ரிட்டான். (உஉ)

கண்டனூ ரிருக்கை கொண்ட காவலன் சோழி வேந்தன்
கண்டனேர் மொழிவார் கூந்தற் கற்புடை மனைவி யோடுங்
கண்டனே ருறமற் செய்த கண்ணுதல் வீரை நீல
கண்டனு லயத்துச் சென்று கைதொழுங் காலந் தோறும். (உ௩)

இத்திற மொழுகு நாளி லிவன்மனை சுசீலை யென்பாண்
முத்திற முளைத்த வெண்பன் முருக்கிதழ் முருக்குஞ் செவ்வாய்
நத்திறப் பொலியுங் கண்ட நன்னுதல் கருணை செய்யு
மத்திறத் துமையாண் டாள்பா லன்புமேன் மேலும் பூண்டாள். (உ௪)

முருகுசெய் கமலம் பூத்து மொய்சிவ கங்கை மூழ்கி
யருகுபல் லாயத் தாரு மணைதர வீரங் கோத்துக்
கருகுத லுறாத சீரை கவினுற மருங்கிற் சூழ்ந்து
பிருகுவின் வாரந் தோறும் பெட்குமா விளக்கு வைத்து. (உ௫)

பாயச மாடங் கொண்டு பண்ணிய வடைநெய் பான்மிக்
காயபல் சொன்றி மற்று நிவேதன மாகச் செய்து
மேயபன் மலர்முன் னுய வருச்சனை விதியிற் செய்துந்
தூயபே ரன்பு பொங்க வலஞ்செய்துந் தொழுதல் செய்தும். (உ௬)

நன்னர்கொள் விரதம் பூண்டு நன்மகப் பேறு வேண்டி
யின்னண மொழுகு நாளி லேழுல கீன்ற செல்வி
பன்னருங் கருணை வாய்ந்த பராபரை யுமையாண் டாண்மற்
றன்னவ ளெண்ண முற்ற வருட்கடை நாட்டம் வைத்தாள். (உ௭)

முழுதுல கீன்ற செல்வி முழங்கருள் சுரத்த லாலே
வழுவறு கற்பு வாய்ந்த சுசீலைதன் மணிவ யிற்றுச்
செழுவிய கருப்ப நீடித் திங்களோர் பத்துஞ் செல்லக்
கொழுமணி யீன்ற லென்னக் குமரனைப் பயந்தா ளன்றே. (உ௮)

மருவா சளம கிழ்ந்து மறையவ ராதி யோர்க்குத்
தருவினு மணிபொன் னூதி வீசுபு சாத காதி
திருவுறச் செய்து வீர சேகரச் சோழ னென்றோர்
பொருவரு நாமஞ் சாத்திப் புதல்வனைப் போற்றி வாழ்ந்தான். (உ௯)

இன்னணஞ் சிலநாள் செல்ல விலகுறண் மதியிற் செம்பொ
னன்னமந் திரிகள் யாரு மடிதொழு தெழுந்து கோவே
யுன்னரும் புகாருக் கேக வுளங்கொளா திருத்த னன்றே
முன்னவன் விடைபெற் றின்னே சேறலை முயறி யென்றார். (௩௦)

மதியுடை யமைச்சர் சொற்ற வார்த்தையும் வீரை மேய
பதிதரி சனமு மங்கு மிங்குமாய்ப் பால்செய் தீர்ப்ப
வதிர்கழ லரசன் மாழாந் தாங்கொரு வகைதுணிந்து
விதிர்விதிர்ப் படைந்தெ ழுந்து வீரசே கரர்முன் சென்றான். (௩௧)

சென்றவ னடியில் வீழ்ந்து திருவடி பிரிதற் கஞ்சி
யன்றளவில்லாத் துன்புற் றழுதழு திரங்கிச் சோரக்
கொன்றையங் கண்ணிக் கூத்தர் குறிக்குமா காய வாக்கா
னன்றமை நின்பு காரை நண்ணுதி நாம வேலோய். (௩௨)

ஆண்டினுக் கொருகான் மேடத் திங்களிங் கணைந்து நந்த
மாண்டிகழ் விழவு போற்றி மனையொடு மேகு வாயேற்
பூண்டிய லாண்டு முற்றும் போற்றிய பலனு மீற்றி
லீண்டிய முத்திப் பேறு மெய்துவை போதி யென்ன. (௩௩)

ஆணையை மறுத்தற் கஞ்சி யடிக்கடி பணிந்து போற்றி
யேணையுற் றிலங்கு தோளா னிியைபுற விடையே பெற்றுப்
பூணையொத் தமைந்த பொம்மற் புணர்முலை யுமையாண் டாண்முன்
மாணையொத் தமைந்த கற்பின் மனையொடவ் விடையே பெற்று. (௩௪)

பிரிவதற் குள்ள மஞ்சிப் பேதுறு கிராத னுக்கும்
வரிசிலைத் தடந்தோண் மன்ன னுடம்படு மாற்றங் கூறிப்
பரிதரு வீரை யூரார் பலவளக் கண்ட னூரார்
விரிதுயர்க் கடலா ழாமன் மேதகு முகமன் சொற்று. (௩௫)

பரிகரி யிரத மாதிப் பல்வகை வளத்தி னோடுந்
தெரிதர வெழுந்த காலைத் திகழ்மதி யமைச்சர் தாழ்ந்து
புரியிரா மேசம் போற்றிப் போதுவா மெனவவ் வாறே
யுரியவத் தலஞ்சென் றேத்தி மீண்டன னுலகாண் மன்னன். (௩௬)

மீளுமக் காலை வையை வியல்வளப் பாண்டி நன்னா
டாளும்வித் தகனே ரேவந் தளவளா யலங்கற் றாருந்
தோளுமிக் குவப்பப் புல்லிச் சுவைபட வினையான் செய்யு
நாளுமற் பொருவு றாத நல்விருந் தமைய வுண்டு. (௩௭)

மருவளர் வீளா மூலம் வைகிய பெருமான் சீரு
முருவள ருமையாண் டாளன் புளுற்றுவார்க் கருளுஞ் சீரும்
வெருவளர் தன்னோய் தீர்ந்த விதமுமெய்க் கிராத னன்புந்
திருவளர் பாண்டி நாடன் றெளிதர வெடுத்துக் கூறி. (௩௮)

தென்னவன் விடையும் பெற்றுச் செம்பியர் பெருமான் பூமே
லன்னநன் கமர்நீர் வாவி யமைந்தபூம் புகார டைந்து
தன்னா சிருக்கை மாடந் தவாதநன் னுளிற் புக்கு
மின்னவிர் செங்கோ லோச்சி மேதினி காத்து வாழ்ந்தான். (௩௯)

மனையொடு மைந்த னோடு மற்றுள தமர்க ளோடும்
புனைதரு மாண்டிற் கோர்காற் பொலிதரு மேடமாத
நனைவளர் தெய்வ வீளா நகர்மரீஇ விழாக்கண் டேத்திக்
கனைகழற் காலான் பின்பு கசிந்துதன் புகார்க்குச் செல்வான். (௪௦)

அறுநல மமைந்த கண்ட னபிடேகந் தகுநாட் டெவ்வர்
செறுவலி யமைந்த வீர சேகரச் சோழற் காற்றி
யிறுமகிழ் பூப்ப வீளா யிருந்தல மனையோ டெய்த
லுறுவிரு வளையும் போற்றி யுயர்சிவ லோக முற்றான். (௪௧)

அன்னவா கண்டு வேடர் குலத்தவ தரித்த வீரன்
றன்னமர் மனையா ளோடுந் தம்பிரான் கோயில் சார்ந்து
பன்னருங் காதல் கூரப் பணிந்தெழுந் திரந்து வேண்டி
யின்னருள் பெற்றுச் சோழ னெய்துல கடைந்து வாழ்ந்தான். (௪௨)

மணமலி யார்த்தார்ச் சோழன் மகப்பெற்று முத்தி யுற்ற
குணமலி காதை சொற்றுங் குளிர்மதி மருமான் போந்து
பணவர வணியாற் போற்றப் பசுந்தழை மலர்சால் வீளா
யணவொரு வருக்கை யாய்ப்பின் வீளாயா யதுவுஞ் சொல்வாம். (௪௩)

சோழன் மகப்பெற்று முத்தியடைந்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௩௯௫.

# வீணை பலாவாகிய படலம்.

ஆன்ற பல்வளப் பாண்டிநன் னாடினி தளிப்போன்
மான்ற தன்மையர் புகலொணா மதிக்குல மருமா
னேன்ற நல்லற முழுதுமோ ருருக்கொளி னேய்ப்பான்
றோன்ற வாழ்பவன் சுகுணபாண் டியனெனுந் தோன்றல். (௧)

மகார்க யற்கிணை விழியுமை யிவரொடும் வாஞ்சை
நகார்தி கைத்திட வன்பர்பா லமர்தரு நயஞ்சார்ந்
தகார்மி டற்றினான் வீணைமான் மியஞ்சில தடஞ்சூழ்
புகார்பு ரப்பவ னுரைத்தலா னினைந்தனன் போற்ற. (௨)

பரிச னங்களும் பரிகரி முதலிய பலவுந்
தெரித ரும்படி தொடர்தரச் சிவிகையி னிவர்ந்து
கரிச றுந்திரு மதுரைநின் றெழுந்துகான் கடவா
வரிய யன்றொழு தேத்திடும் வீணைவந் தடைந்தான். (௩)

தளநி லாவிய தாமரைச் சிவகங்கைத் தடமும்
வளநி லாவிய செம்பொன்செய் சிகரியு மதிலுங்
களநி லாவிய மூலவா ணவமறக் கடிவா
ருளநி லாவிய கோயிலுங் கண்டுகண் டுவந்தான். (௪)

பரவு மேன்மையிற் பொலிசிவ கங்கைநீர் படிந்து
புரவு மேவிய நீற்றொளிப் புண்டரம் புனைந்து
கரவு தீர்த்தருள் கண்மணி மாலையுந் தாங்கி
யுரவு சேர்தடந் தோளினா னைந்தெழுத் தோதி. (௫)

வந்து கோபுர வாயிலின் றென்றிசை மருவு
நந்து போரு ளழகிய வுலாவடி நயந்து
முந்து போற்றியக் கோபுர முன்னரும் பணிந்து
சிந்து சேர்சடை யானொளிர் சினகரம் புகுந்தான். (௬)

நந்தி நாயக னாண்மலர்த் திருவடி நயந்து
முந்தி யேத்துபு விடைகொளா வற்புத முகிழ்ப்ப
வந்தி வான்மதி மிலைச்சிய செஞ்சடை யண்ணல்
கந்தி யாநிறை மலர்ப்பதந் தொழுவது கருதி. (௭)

வலஞ்செ யப்புகுந் தானது காலையின் மாநீர்
நிலஞ்செ யப்பொலி செல்வத்தா னிரம்பிய செருக்கோ
புலஞ்செய் கல்விமிக் குடைமையிற் போந்ததோர் செருக்கோ
நலஞ்செய் மற்றவற் குற்றதை யிஃதென்று நவிலோம். (௮)

உற்ற சோழனிவ் விலிங்கமா விலிங்கமென் றுறுத்திச்
சொற்ற துண்மையோ புனைந்துரை யோவொன்றுந் துணியாங்
கற்ற மேலவர் புகழுறும் பூதொன்று காணின்
மற்ற துண்மையே யாமெனத் தன்னுள மதித்தான். (௯)

இந்த வாறுள மதித்தனன் சூழ்தரு மேல்வை
நந்த நாயகன் வடதிசை நன்னிழல் செய்து
சந்த மார்தளி ரிலைமலர் காய்கனி ததைந்து
கந்த மார்தர நின்றதோர் வீரையைக் கண்டான். (௧௦)

இனைய பைந்தரு விற்கிசை நாயமென் னென்று
முனைய வேலினன் வினவிட வருகுறு முதியோர்
புனைய வல்லது வீரையென் றொருபெயர் பூண்டு
நினைய மிக்கினி யார்க்குநன் னிழல்செயு மென்றார். (௧௧)

என்ற போதுள மகிழ்ந்தன னேகின னிளமான்
கன்ற வாவிய கையின னளவிலாக் கருணை
வென்ற வீரசே கரப்பிரா னத்தரு வீரை
நின்ற வாறொரு வருக்கையாம் படியுள நினைந்தான். (௧௨)

மன்றல் வேம்பினன் கொண்டவா சங்கையை மாற்ற
வொன்ற னைச்செய்கை முதலொரு மூன்றையு முடையா
னன்று ளத்துற நினைந்தவா றேநறு வீரை
யன்று தண்பல வாய்ப்பல பழுத்துநின் றன்றே. (௧௩)

வலஞ்செய் பூழியன் மறுத்திரண் டாமுறை வருவான்
பொலஞ்செய் செஞ்சடைத் தம்பிரான் மேற்றிசை போத
நலஞ்செ யொண்பழ வாசனை மிக்கெழூஉ நாறிற்
றுலஞ்செய் தோளினன் முதலிய பலருமாங் கோர்ந்தார். (௧௪)

வருக்கை யொண்பழ வாசனை யென்றுள மதித்துத்
தருக்கை மேவிய வாளினன் வடதிசை சார்ந்தான்
குருக்கை யாவொரு வீரையைக் கண்டிலன் குலவிப்
பெருக்கை யாரொரு பலவினைப் பிறங்குறக் கண்டான். (௧௫)

அடிமு தற்பல வாகிய பெருங்கனி யமைய
நெடித மைந்துநின் றிடும்பலா விமிர்ந்ததன் னுருவி
லொடிவில் பற்பல வண்டங்க ளொருங்குகோத் தமைய
முடிவி லாதுநின் றிடுமொரு முதல்வனே போலும். (௧௬)

கொழுத்து மேவிய கூற்றுயிர் குடித்தவர் தொய்யி
லெழுத்து வார்முலை பாகனார் விமானமே லெங்கும்
பழுத்த தீங்கனி விண்டசா றொழுக்குவ பாவ
மழுத்து பல்குடத் தேனபி டேகஞ்செய் தாங்கு. (௧௭)

பலவின் கோடுகள் கிழித்திடப் பயோதரங் கீண்டு
நிலவு வார்புன லொழுக்குவ நிமலர்மா னத்து
விலகு றுதசெந் தேன்விழைந் தாட்டிய பின்ன
ரிலகு சுத்தநீர் கொண்டபி டேகஞ்செய் தென்ன. (௧௮)

சுட்ட செய்யபொற் றகடெனத் துவன்றுபல் சுளைய
விட்ட வண்கனி வெடித்தவா யிழிந்ததேன் பெருகி
யுட்ட தும்பியே குட்டிம மெங்கணு முற்றுப்
பட்ட வன்பினிற் சூழ்பவர்க் கிசும்புறப் பண்ணும். (௧௯)

தொக்க பேரொழிற் பொதுமட மாதரைச் சூழ்ந்து
மிக்க காமுகர் பற்பலர் மொய்ப்பது விழையத்
தக்க வண்பலாக் கோட்டினிற் றங்குபல் கனியின்
பக்க மெங்கணு மொய்ப்பன பற்பலீப் பறவை. (௨௦)

அழிந்த தீஞ்சுளைக் குடம்புரை முட்கனி யவைதாம்
பொழிந்த வின்சுவைத் தேனலை யெறிந்துநாற் புறத்து
மொழிந்த நீர்நிலை யெனப்பெரு குபுமுது தூம்பின்
வழிந்த தாய்நெடு வீதியுஞ் செறுவென மருவும். (௨௧)

இந்த வற்புத மென்னெனப் பலருமங் கிறுத்தார்
கந்த மிக்குயர்ந் தோங்கிய பலவினைக் கண்டார்
வந்த வற்புதம் யாதென நெஞ்சினுண் மதிப்பார்
பந்த மற்றுமுற் றருவுற்ற தெங்கெனப் பகர்வார். (௨௨)

பொங்கு கண்டனூர் முதற்பல வாகிய புரியுந்
தங்கு மாதரு மாந்தரும் விரைந்தனர் சார்ந்தா
ரெங்கு மில்லதோ ரற்புத மாமிது வென்பார்
கொங்கு தங்குமா றொழுகுறு தேனளிக் கொள்வார். (௨௩)

விழைவி னுண்பதற் கஞ்சுபு மீட்டுமெண் விடுப்பா
ருழைய மைந்தகை வீரசே கரருல கொருங்கு
தழைய வாற்றிய வாடலீ தென்பர்நந் தாயா
மிழைகொள் கொங்கையா ளுமைபுரி யாடலென் றிசைப்பார். ()

இருவ ருங்குழீஇ யாற்றிய விலீலையென் றிசைப்பார்
பொருவ ருந்தல மிதுவலா திலையெனப் புகல்வார்
பருவ ருந்திற மினியுயிர்க் கிலையெனப் பகர்வார்
கருவ ருந்தலற் றுய்ந்தன மாலெனக் கரைவார். (௨௫)

பலப ழுத்தலிற் பலவெனப் பட்டதோ வென்பா
ரிலகு மீதுத்தா லகவண மோவென விசைப்பார்
விலகு ருவதிற் குறும்பல வேயென்று விள்வா
ரலகி லற்புத மெங்கிது காண்டலென் றறைவார். (௨௬)

கண்ட யாவரு மதிசயித் திங்ஙனங் கரைய
வண்ட வாவுதார்த் தடநெடும் புயவிறல் வழுதி
கொண்ட பேதைமை யாமுளங் குறித்தமை தேர்ந்து
துண்ட வெண்பிறை யான்செய்த திதுவெனத் துணிந்து. (௨௭)

அறிவி லாமையா லிதுநினைந் தோமென வஞ்சிப்
பிறிதொன் றுற்றுறிற் றடுப்பவ ரியாரெனப் பேணிச்
செறியும் யார்க்குந்தா னினைந்தமை வெளிப்படச் செப்பிக்
கிறியி லார்க்கருள் வீரசே கரர்முனங் கிடைத்தான். (௨௮)

அச்ச மும்பெரு கன்புமிக் கெழுதர வழுது
கச்ச மில்லையென் றுரைத்திடாக் கைகுவித் திறைஞ்சி
முச்ச கம்புகழ் முதல்வநின் பெருமையா னறியே
னெச்ச ஞதிய ரினுமுணர்ந் திலரெனின் யாஞர். (௨௯)

மறைக ளாலய ஞலரி யான்மஞ திகளாற்
குறைத ராவள வாற்குறித் தறியொணு தெங்கு
நிறைவ தாகிய நின்னையா னளந்திட நினைந்தே
னிறைவ வென்செய னினைதொறு நகையெழு மெனக்கே. (௩௦)

இருவி னைப்பய னுகர்ந்தவத் தைகளைந்து மெய்திக்
கருவி னைக்கிட மாயுழல் கடையனே னொருமூ
வுருவி னைக்கொடைந் தொழில்செய்து முருவினை யளக்குந்
திருவி னைக்கொளல் சிரறியிங் கிலங்கவர் திறனே. (௩௧)

ஒருகி ராதன்வந் துரைத்திட வனங்களோந் துடனே
யருகில் காஞ்சியைப் புதாக்கினன் வழிவந்த வறத்தா
லொருகி ராதன்வந் துரைத்திட வனங்களோந் துடனே
யருகில் வீரையை யாக்கினா னரணி கண்டன். (௧௨)

அறிவி லாதிவ னமலனைச் சோதனை செய்தான்
செறியு மற்றிவன் குலத்துமுன் னொருமித் திறமே
நெறிய தாக்கொண்டு ளார்கொலோ வென்றுமண் ணினைக்கப்
பொறியி லேன்பெருந் தீங்குசெய் தேனிது பொறுத்தி. (௧௩)

என்று பன்முறை நைந்துநைந் தழுங்கசிந் திரங்கு
மொன்று நல்லருள் பெறுவதெஞ் ஞான்றென வுரைக்குங்
கன்று மிங்ஙனங் கவல்செழி யன்செயல் காணூஉ
வன்று நல்லருள் புரிவதற் கெண்ணினனையன். (௧௪)

வழுதி கேட்டிநீ சோதனை செய்தது மாண்பே
பழுது தீர்தரு முலகெலாம் பத்திசெய் தின்னுந்
தொழுது நம்மருள் வெளிசெய்தாய் நீயெனச் சொல்லி
யெழுது நின்புகழ் விருப்பொடு மென்னிலென் வேண்டும். (௧௫)

ஈது நிற்கவண் பாகலின் பெருங்கனி யெவரு
மோது பத்தியிற் கவர்கநீ யுங்கவர்ந் துண்ணிற்
றீது முற்றுட னேயறுங் கனியெலாந் தெவ்விற்
போது முற்றிய வீரையே பண்டுபோற் பொலியும். (௧௬)

என்று தம்பிரா னருளினாற் காயவாக் கெழுந்த
தன்று தென்னவ னுய்ந்துளே னென்றடி தொழுது
சென்று பாகலி னொருகனி தெவ்வினான் பலரு
நன்று தெவ்விடப் பணித்தன னவரது நயந்தார். (௧௭)

கனிக வர்ந்தவர் யாவருங் கைதொழு துண்டார்
தனியில் வேந்தனு முண்டனன் றன்றம ரோடு
நனிவ ருத்தவ ரவர்க்குள நோயெலா நசிக்கப்
பணிம திக்குல மன்னனைப் புகழ்ந்தனர் பலரும். (௧௮)

தென்ன னுந்தனக் குறுதமை வயிற்றுநோய் தீர்ந்தா
னுன்ன ரும்பல வொழிந்தது கனியெலா மொழிய
முன்னர் வீரையே நின்றது மொய்ந்நிழல் செய்து
நன்னர் வானவர் மலர்மழை பொழிந்தனர் நயந்து. (௧௯)

ஆய காலையி லதிசயம் யாவரு மடைந்தார்
மேய வேந்தனு முமையவ டிருமுன மேவிப்
பாய தோத்திரம் பற்பல புரிந்தனன் பணிந்தாங்
கேய வங்க ரொருபுறத் திருக்கைசெய் திருந்து. (௪0)

ஆண்ட வீரசே கரப்பிரான் றிருவுமை யாண்டா
ளீண்ட மேனியிற் புனைவகை யிலங்குபொற் பூணு
மாண்ட பன்மணிக் கலன்களும் வயங்குபொற் கலையு
நீண்ட கைத்தலச் செழியர்கோன் கொடுத்தன னிரம்ப. (௪க)

மன்னு மாலயப் பணிபல வணிபெற வயக்கி
மின்னு பற்பல கிராமங்கள் விளைவொடு நல்கி
யுன்னு நித்திய முதலிய மூன்றுமிக் கோங்கப்
பன்னு மாபுகழ்ச் சுகுணபாண் டியனென்பான் பண்ணி. (௪௨)

கோல மார்தரு வீணைவா ழிருமுது குரவர்
சீல மாரடி பணிந்தெழுந் தன்புமீச் சிறக்குங்
கால மார்புற விடைபெற்றுக் கைதொழு தெழுந்து
ஞால மார்திரு வாலவாய் நோக்குபு நடந்தான். (௪௩)

ஆல வாயடைந் தத்தல மார்பவர் பலர்க்குஞ்
சால வாய்புகழ் வீரசே கரரருள் சாற்றி
ஞால வாயிலிஃ ததிசய மாலென நயந்து
மால வாய்வளர் சுகுணபாண் டியனுற வாழ்ந்தான். (௪௪)

கலைம திக்குல மன்னவன் கைதொழு தேத்த
நிலையு டைத்திரு வீணைவண் பலாவென நின்ற
தலைமை சொற்றனம் வடதிசைக் கோமகன் சார்ந்து
மலைவ றப்புரி பூசனைத் திறமினி வகுப்பாம். (௪௫)

வீணை பலாவாகியபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௬௪0.

## குபேரன் பூசைப்படலம்.

விதித்திடு நான்முகன் விழையும் புத்திரன்
றுதித்திடு புலத்திய னவற்குத் தோன்றினோன்
மதித்திடு விச்சிர வாவென் பானவற்
குதித்தன னிணையிலா வொருகு பேரனே. (க)

விச்சிர வாவெனுந் தவத்தின் மேலவ
னச்சிறு மைந்தனை யெடுத்த ணைத்துநன்
குச்சிமோந் துள்ளமு முருக நோக்கிஞ
னச்சிய மைந்தனு நயந்து தாழ்ந்தனன். (௨)

அடியனேன் செய்வினை யருளிச் செய்கவென்
றொடிவிலா வூக்கமிக் குறைப்பக் கேட்டவன்
மடிவருந் திருவமிக் கடைய மாதவ
முடிவிலா முதல்வனை முன்னி யாற்றென்றான். (௩)

தந்தைத னிணையடி மீட்டுந் தாழ்ந்தெழுந்
தெந்தையே முடிவிலா முதல்வ னென்றனை
நிந்தையி லனையவ னிகழு மூவரு
ளெந்தையி லினையனென் றறைதி யாவென்றான். (௪)

மலரவன் படைத்தலை மாயன் காத்தலை
யலர்தர வவரொடு மழித்து நிற்றலாற்
பலர்தொழ மீட்டுமப் பண்பி னுக்கலா
லுலர்தலின் முதலவ னுருத்தி ரப்பிரான். (௫)

வருத்துறு வியசன மூயிர்க்கு மாய்த்தலா
லுருத்திரன் சுகமுத வுதலிற் சங்கரன்
றிருத்துறு மங்களஞ் செய்த லாற்சிவ
னருத்தமுற் றிடுபெய ரனந்த மின்னுமே. (௬)

பிறப்பிலி யெனும்பெயர் கோசம் பேசலா
லறப்பணி தலையமை யறிவின் மிக்கவர்
மறப்பரு மவனடி மதித்துச் சார்குவார்
விறப்பமை பலமொழி விதமுட் கொண்டரோ. (௭)

காலனைத் தெறுதலிற் கால னல்வரு
மாலமை தண்டங்கண் மாற்ற லுண்மையென்
றாலமை கலையுண ரறிஞர் சார்குவர்
சீலமுற் றொளிரவன் செய்ய தாண்மலர். (௮)

காமனைத் தெறுதலிற் காம னல்வரு
நாமவெந் துயரெலா நசிக்கச் செய்யுமென்
றேமமிக் குயரவன் சரண மெய்துவார்
தோமறக் கலைபல துணிந்து ணர்ந்தவர். (௯)

எவரினும் பெரியவ னவனென் றெண்ணுதி
யுவமையி னூலெலா மெவருக் கோதிடுஞ்
சிவமலி திறத்துமா தேவ னென்னுமோர்
தவமலி பெரும்பெயர் தனய வோர்தியால். (௧0)

பரசிவன் றிருவருள் பதித்த லாலன்றே
வரவயன் படைத்தலில் வல்ல னயினன்
புரவுசெய் திடுதிறம் பொருந்த மேற்கொண்டா
னரவணை யவனிலை யென்னி லாவதோ. (௧௧)

மதிகதி ரியங்கலும் வளிச லித்தலு
முதியவெங் தழல்சுடு முயற்சி மேயது
மதிர்கடல் கரையிக வாத டங்கலும்
பதியெனப் புகலுமப் பரம னாணையே. (௧௨)

அவதியி லுயிரெலா மவாவிப் பற்றுமோ
ரவதியை யுணர்ந்துட லாதி நல்குவா
னவனிமுற் பற்பல வகலி டந்தொறு
மவனவ ளதுவெனு மவைகொண் டாட்டுவான். (௧௩)

மறைமுழு வதுமழு வலன மைத்தகை
யிறைவனே யேபர மென்று கூறிடு
மறைதரும் பிறவையு மதுவென் னென்றியே
லுறையுப சாரமென் றுணர்தி மைந்தனே. (௧௪)

இனைதலி லொன்பது மெட்டு மாறுமுற்
புனையுரு வமைந்துமோர் பூட்சி யும்மிலான்
வினைகளைந் துற்றுமோர் வினையு மில்லவ
னனையவன் பெருமையா ரறைய வல்லரே. (௧௫)

பருவருங் கொடுவிடம் பதிந்த கண்டமும்
வெருவரு மென்புமுன் மேவு மங்கமு
மருவுற ஞேக்குறுர் வரதன் மூவரு
ளொருவனென் றுரைப்பரா லுண்மை தேர்கிலார். (௧௬)

கலையுணர் விருநிதி யாதி கைக்கொள
றொலைவறு போகங்க டுய்த்த வீடிய
நிலையுடை யாயுண்மற் றெவையு நேருமே
யுலைபுனன் முடிப்பிரா னடிய ருச்சனே. (௧௭)

பொய்யுணர் வடங்கலும் புகைந்து மாயுமே
மெய்யுணர் ஞானமும் வீடு மெய்துமே
யையுணர் வுடையவர் யார்க்கு மாற்றலா
மொய்யுணர் சூலத்தான் முளரித் தாடொழ. (கஅ)

வேதியர் தமைச்செகுத் திட்ட வெங்கொலை
யோதிய தந்தைதா யுறுமக் கக்கொலை
யாதிய கொலைபுரி யஞரெ லாமறுஞ்
சோதித ளொருபெயர் சொல்லி னோர்தரம். (ககூ)

ஆதலிற் பரசிவ னடிநி னைந்துநீ
காதலிற் றவஞ்செயல் கைக்கொண் டாயெனின்
மேதக வன்னவன் வெளிப்பட் டெண்ணிய
வார்தரக் கொடுத்திடு மைய போவென்றான். (உ0)

வேறு.

தந்தையுரை செவிமடுத்துத் தாழ்ந்தெழுந்து விடைபெற்று
முந்தைவினை தகவுந்த முழுச்செல்வத் திறம்பெறுதல்
சிந்தைகுறிக் கொண்டுவட திசையணுகி மேருவின்பா
லந்தைதெறு வளம்பொலியோ ரகத்தமர்ந்து தவம்புரிவான். (உக)

சிலநாளின் சுவைக்கிழங்குஞ் சிலநாணன் கியல்கனியுஞ்
சிலநாண்மென் பசுங்காயுஞ் சிலநாள்வீழ்ந் துலர்சருகுஞ்
சிலநாளங் கெதிர்புனலுஞ் சிலநாள்வா யுவுமருந்திச்
சிலநாண்மற் றதுந்தவிர்ந்து திருந்துமா தவம்புரிந்தான். (உஉ)

அண்ணலுமை யொருபாக னருளுருவ மிதயத்து
நண்ணலுற வஞ்செழுத்தும் விடாதுநா நவிற்றலுறக்
கண்ணலமை கண்முகிழ்த்துக் கைதலைமேற் குவியவுல
கெண்ணலுற விருந்தொரா யிரவருடந் தவம்புரிவான். (உ௩)

புரவுபுரி மான்மைந்தன் புத்திரன்புத் திரன்புதல்வன்
பரவுதவ மிவ்வாறு பண்ணுதல்கண் டவற்கருள்வா
னரவுமதி சடைக்கணிந்த வண்ணலா ரருளுருவக்
குரவுபுனை நறுங்கூந்தற் கோற்றொடியோ டெதிர்நின்றார். (உச)

கண்டவுடன் விரைந்தெழுந்து கைகுவித்து வலஞ்சூழ்ந்து
தண்டமெனத் திருமுன்பு தாழ்ந்துபணிந் தனன்கிடக்க
வண்டர்பிரா னெழுந்திருவென் றையதிரு வாய்மலர்ந்தான்
றெண்டனுய லுற்றேனென் றெழுந்தெதிர்நின் றிதுசொல்லும். ()

அடிகளய னொடுதிருமாற் கரியபெருங் காட்சிதரு
மடிவிறிரு வருளாலென் றவம்பழுதில் லதுமற்று
நெடியவென தெண்ணமெலா நிரம்பியது நிரம்பியவன்
கடியகுணத் தியானுமுன தடிமையே யெனக்கனாந்தான். (உ௬)

வேட்டபொரு ளியாததனை விளம்புவா யெனமன்றத்
தாட்டயரும் பெருங்கூத்த ரருளுதலு மேட்டைபடு
வாட்டமொழிந் தனனென்று மறுவலுந்தாள் பணிந்தெழுந்து
கோட்டமில்சிந் தையனைய குபேரனிது வேண்டுவான். (உ௭)

பொருவருநின் றிருவடிக்கட் பொலிந்தோங்கி வளரன்பு
மிருநிதியும் புட்பகமு மிலங்குநர வாகனமு
மொருவரிய மணியாதி யுற்றபல பெருந்திருவு
மருவுவட திசையாளு மாட்சியுநல் கென்றிரந்தான். (உ௮)

என்றவுடன் குறுநகைசெய் தெம்மடிக்கட் படுமன்பு
மன்றவுனக் கினிதளித்தோ மற்றயா வையுமொருநா
மொன்றவமர் பஃறலங்க ளுள்ளுமொரு தலஞ்சார்ந்து
நன்றமைய வெமைப்பூசை நவிற்றியடை குதியென்றான். (உ௯)

அடைதியென வாய்மலர்ந்த வண்ணலடி மிசைப்பணிந்து
மிடையுமகிழ்ச் சியனாகி விளம்புவா னடுத்திறைஞ்சி
லுடையவநீ விரைந்தருளு முத்தமநற் றலமியாது
கடையனுணர் பாக்குறைத்தி யெனப்பெருமான் கனிந்தருள்வான்.

காவெலாந் தோகைமயில் களமெலாங் கதிர்ச்சாலி
பூவெலாம் பொறிவண்டு புனமெலாங் கருமேதி
சோவெலா மழைமேகந் துணரெலாந் தேனொழுகும்
பாவெலாந் தன்புகழாப் பயில்பாண்டி வளநாட்டில். (௩௧)

குருந்தவனங் கீழ்பாலுங் குலவுசிறு மருதவனந்
திருந்தவொளிர் தென்பாலுஞ் சிறந்தவர்சூழ் வன்னிவனம்
விருந்தமைய மேல்பாலும் வெள்ளாறு வடபாலும்
பொருந்தவொரு வீரவனம் பொலியுமா லெஞ்ஞான்றும். (௩௨)

அன்னதலத் திடைநமக்கா மகிலதலத் தினும்விருப்ப
மென்னதலங் களுமதனுக் கிணையாகா வுமையெனும்பேர்
மின்னவிவ ளாங்கமர்வள் வீரசே கரநாமம்
பன்னவொரு நாமுமவ ணமர்வோம்வா னமும்பழிச்ச. (௩௩)

அத்தலத்தி லொருவினை யான்றநிழல் செயுநமக்கு
வித்தகவே வென்றொருவன் மிக்கசுவைக் கிழங்கெடுப்பா
னொத்தசுனை யிரும்பூன்ற வொண்முடியிற் றழும்பேற்றுச்
சித்தமுவந் தவனையவன் மனைவியொடு சேர்த்தாண்டோம். (௫௪)

வட்டமா நிலத்துள்ள மாத்தலமெ லாம்பணிந்துங்
குட்டநோ யறுதுநிலை குலைந்தடைந்த வொருசோழற்
கிட்டமாம் படியருளி யெப்பணியு மவனுற்ற
வுட்டவா மகிழ்ச்சிமிக வேற்றுநம துலகளித்தாம். (௫௫)

அன்னபுகழ்ப் பெருஞ்சோழன் மனைவியருங் குணமிக்கா
டன்னமர்நா யகன்பணிசெய் தக்கநா ளிவண் மலர்த்தாண்
முன்னவழி பாடுசெயா முளையொன்று பயந்துநம
தின்னருளாற் கொழுநனுட னெய்தினளின் புற்றமர்வாள். (௫௬)

ஆயபுகழ்ப் பெருஞ்சோழ னற்புதமாஞ் சிவகங்கை
மேயவிட நம்மருளா லுணர்ந்துவிழை தரப்புதுக்கித்
தூயபடி முதற்சமைக்கச் சோழதீர்த் தப்பெயர்பூண்
டேயநினைப் பவர்வினையு மிறவளத்தி னுங்கமரும். (௫௭)

கற்றகலை வளச்சோழன் கண்டனெனு நாமத்தா
னுற்றவன முழுதழித்துத் தன்பெயரா லோரூர்செய்
தற்றவனூர்க் குடியேற்ற வக்குடிக ணமக்கன்பு
பெற்றவுளத் தினவாகிப் பெருகவது பொலியுமால். (௫௮)

கண்டனுரை செவிமடுத்துக் காதலித்து நமைப்போற்ற
வண்டமிழ்ப்பாண் டியனடைந்தான் மனந்தெளிய வீரைதனை
யண்டமண வும்பலவாப் புரிந்ததுநல் கியகனியாற்
கொண்டவவன் வயிற்றுநோய் முழுதுமறக் குறித்தாண்டோம். ( )

இன்னுமதன் கனிநுகர்வா லெண்ணிலர்நோய் தவிர்ந்துய்ந்தார்
மன்னுமவற் கியம்பியவா மற்றதுமாற் றிப்பண்டைத்
துன்னுமொரு வீரையே துவன்றிநிழல் செயச்செய்தா
மின்னுமதி சயம்பலவால் விளம்பரிது நம்மாலும். (௬௦)

அத்தலத்தை நீயுமடைந் தன்புகொடு பூசிப்பி
னித்தலத்து வேண்டியவை யாவுமடை வாயின்னு
மொத்தவினைக் குறுநகர்ப்பே ரங்கரா முற்றொளிருஞ்
சித்தமுவந் தடையென்று செப்பிமறைந் தனனிறையோன். (௬௧)

வேறு.

இறைவன் வார்த்தையுண், ணிறைய வேற்றனன்
முறைப ணிந்தனன், பொறைகொ ளன்பினன். (௪௨)

ஆங்கு நின்றுதென், பாங்கு நோக்கினன்
வீங்கு மன்பினு, லோங்கு முள்ளத்தான். (௪௩)

வழியி னுள்ளன, பழியி லாத்தல
மழிவி லன்புமீக், கழிய வேத்தியே. (௪௪)

கொழுதி வண்டின, முழுது ழக்குபூப்
பழுதில் சோலைசூழ், வழுதி நாடுற்றான். (௪௫)

வருவெள் ளாறுசீர், தருகு ருந்துசிற்
றுருவ ருச்சுனம், பொருவி லாச்சமி. (௪௬)

திசைக ணன்கினு, மிசையின் மேவுத
னசையி னேக்கினு, னசைவி லன்பினன். (௪௭)

இருக ரங்குவித், துருகு நெஞ்சொடும்
பெருகு வீரையி, னருக ெத்தனன். (௪௮)

எல்லை தாழ்ந்தனன், வில்லை வீசுமிற்
றொல்லை வீரையுள், வல்லை புக்கனன். (௪௯)

அளவி னுண்டொழில், வளம லிந்தொளி
கிளருங் கோயில்கண், ணெம கிழ்ந்தனன். (௫0)

பார்த்த போதினு, மோர்த்த வண்பய
ஞர்த்து சோழமா, தீர்த்த மாடினன். (௫௧)

கடைய வாவுறு, நடைய பூதிசீ
ருடைய கண்மணித், தொடைபு னைந்தெழா. (௫௨)

வேத சாரமென், றோத மேவிய
போத வைந்தெழுத், தாத ரஞ்செயா. (௫௩)

நன்ன ரெண்ணிய, பின்ன ரொண்மணி
யன்னார் கோயிலின், முன்ன ரெய்தினன். (௫௪)

சந்த வாரணத், தந்தண் வார்கழற்
கந்த மாமலர், முந்த வேத்துபு. (௫௫)

வேறு.

கொன்பொ லிந்தெழு கோபுர, முன்ப ணிந்து முழுநிதி
மன்பு குந்தனன் மாசிலா, வன்ப ருள்ளம ராலயம். (௫௬)

நந்தி நாத னலப்பத, முந்தி யார்வ முகிழ்த்தெழச்
சிந்தி நாண்மலர் சேவியா, வந்தி லாலயஞ் சூழ்ந்துபின். (௫௭)

இறைய வன்முன மெய்திக்கண், ணுறைது ளிப்ப வுரோமங்கண்
முறைசி லிர்ப்ப முதுக்குறைத், துறைக லப்பத் தொழுதனன். (௫௮)

எம்மை யாளு மெழிலுமை, யம்மை முன்னு மடைந்தொரு
வெம்மை யின்றி விளங்கிய, செம்மை சேரத் தொழுதனன். (௫௯)

காலந் தோறுங் கசிந்துதாழ்ந், தோல மார்துதி யும்புரிந்
தேல வைகு மிடஞ்செயாச், சால மேவித் தவஞ்செய்வான். (௬௰)

வேறு.

இவ்வாறு நூறாண்டு தவம்புரிய நம்பெருமா னிடப்பான் மேய
வவ்வாறு காண்மடுக்குங் குழலுமையோ டெதிர்தோன்றி யவாய யாவும்
வெவ்வாறு தபத்தந்தா நம்மையுந்தோ ழமையாக மேலுந் தந்தா
மிவ்வாறு பெற்றொருநீ யமர்பதிப்பே ரிந்நகர மெய்தச் செய்தாம். (௬௧)

ஆதலினின் பதியாய வளகையடைந் திருநிதிவாய்ந் தரசுமேவிக் [மூர்த்தி
காதலின்வீற் றிருத்தியென வுரைத்துமையா ளொடுமெறைந்தான் கருணை
நோதலின்மா நிதிக்கிழவன் மிகமகிழ்ந்து பெருகருளி னுண்மை போற்றி
யோதலின்மா யாத்திருவம் பலபெருக்கி விழாவாதி யுஞற்றிப் போற்றி. (௬௨)

நன்றுவிடை பெற்றுவட திசையளகைப் பதியடைந்து நயந்து வாழ்ந்தா
னன்றுமுதல் வீரைநக ரளகையெனும் பெயர்பெற்ற தறிவான் மிக்கீர்
துன்றுநலப் பெருமானைத் தனபதிபோற் றியதுணைத்தாஞ் சோழ தீர்த்த
மென்றுமொளிர் சத்தியபுட் கரிணியெனும் பெயர்பெற்ற திசைப்பா மன்றே.

குபேரன் பூசைப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௫௦௫.

## சத்தியபுட்கரிணிப்படலம்.

விண்மலர் பொழில்வாய்ப் பூவும் விண்டெவி னெழுக ரும்பும்
பண்மலர் மிடற்று வண்டும் பவளமும் பொன்னு முத்து
மெண்மலர் செல்வர் நெஞ்சு மிகபரம் வெறுத்தா ருள்ளுங்
கண்மலர் சிறப்பு வாய்ந்து கஞலிய பாண்டி நாட்டில். (௧)

தண்டலை நறுமென் பூவிற் றையலா ளொழின்முன் கையிற்
கொண்டலை நிகருங் கூந்தற் கோற்றொடி யவர்கு ழாத்தில்
விண்டல மளாநீ ராற்றில் விரும்புநீர்த் துறையி லோவா
வண்டல மருஞ்சீர் வாய்ந்த மங்கல மெனுமோர் மூதூர். (௨)

மழைவளஞ் சுரந்து நாளு மல்குமந் நகரத் தேரான்
விழைவளம் பெருக்கி வாழ்வான் மேதகு குணத்தான் மிக்கான்
றழைவள நினைவார்க் கீயுஞ் சங்கரற் கன்பு பூண்டு
பிழைவள முருங்கி வைகும் பெற்றியா னொருவே ளாளன். (௩)

மற்றவன் மகவி லாமை மதித்துமண் ணாதி யுள்ள
குற்றமில் வளங்க ளெல்லாங் கொள்ளுநர் தம்பால் விற்றுப்
பற்றமை செம்பொ னாக்கிப் பார்புகழ் காசி மேவி
நற்றவம் விளைப்ப வெண்ணி நண்ணுவான் மனையா ளோடும். (௪)

ஆயவக் காலை யுள்ள பசுக்களி லரனுக் கன்பு
மேயவன் கலைமுற் றோர்ந்த வேதிய னொருவன் மேவத்
தூயமற் றவற்கோர் பத்துச் சுரபியைத் தான மாக
நேயமுட் பொலிய நல்கி நிகழ்மற்றை யாக்க டம்மை. (௫)

இடைமக னொருவன் பாங்க ரிரும்பொருள் பெற்று நல்கிக்
கடையருட் குறியாக் கங்கைக் காசியை யடைந்தா னிப்பான்
மிடைபல நாட்கள் செல்ல வேதியன் பெற்ற பெற்ற
மடையவு மிடைய னாவை யடைந்தன பழக்கத் தாலே. (௬)

மறையவ னேடி வந்து மற்றிடை மகனைக் கண்டு
குறைவினின் குடஞ்சுட் டோடு கூடிய வென்னாப் பத்து
முறைமையின் விடுதி யென்ன முனிந்துநின் பசுக்க ளொன்று
கறையற விளக்கு தற்கா மிலச்சினை காட்டு கென்றான். (௭)

இலச்சினை யில்லை யென்னா னிதுவிது விடுதி யென்று
நலச்சிவ பெருமாற் கன்பு நண்ணிய மறையோன் கூறப்
புலச்சிறு மையர்போ லென்ன புந்திகொண் டடைந்தா யிந்தத்
தலச்சில ருடன்வந் தாலும் விடுகிலேன் சரத மென்றான். (௮)

வருந்திய மறையோ னவ்வூர் வாழ்நருட் சிலர்பாற் சென்று
பொருந்திய தெடுத்துக் கூறப் புந்திநொந் தனைய ருந்தேர்ந்
தருந்தியக் குழுத்து மண்டன் றனைவர வழைத்துக் கேட்கத்
திருந்திய பசுக்க ளெல்லா மென்னவே தெரிமி னின்னும். (௯)

பழியொடு பாவ மஞ்சும் பண்புசற் றில்லாப் பார்ப்பான்
மொழிகுவ தனைத்தும் பொய்யே மூதறி வுடையீ ரிந்த
வழியிவன் பசுவொன் றேனும் வந்ததை யறியே னெல்லாங்
கழிபொருள் கொடுத்துப் பெற்ற துண்மையே கண்டே னென்றான்

நடுநிலை பிழையா வன்னார் நயந்துரை மொழியுங் கொள்ளா
வடுவமை தொறுவ னோடு மறையவன் றனையுங் கூட்டித்
தொடுகட னிலமுற் றாருஞ் சுகுணபாண் டியன்முன் விட்டா
ரடுதிற லனையான் முன்னுஞ் சாதித்தா னறிவி லாயன். (௧௧)

மற்றவ னுள்ளத் தாய்ந்து தொறுவனை வலிசெய் போது
முற்றவு மெனவே யூரின் முட்டிவாங் கிடுபார்ப் பானுக்
குற்றவான் பத்துநல்கு வாரெவ ருண்மை தேர்ந்து
சொற்றிட வேண்டு மென்று தொழுதழு துரைத்தா னன்றே. (௧௨)

வழுதியு மறையோ னாக்கள் வந்தன வில்லை யென்று
செழுமலர் வீரை மேய தெய்வநா யகன்முன் பெய்தித்
தொழுதுரை யாடு வாய்கொ லென்றனன் றுணிந்தா னாயன்
பழுதில்பார்ப் பானும் வந்து பகர்வனேற் பகர்வே னென்று. (௧௩)

அரசுமவ் விருவ ரோடு மமைச்சரா தியர்க ளோடும்
பரசுபல் வளஞ்சால் வீரைப் பதியெனு மளகை சார்ந்து
வரசுகோ தயமா யுள்வார் மாட்டமர் பெருமான் முன்னம்
விரசுபே ரன்பிற் றாழ்ந்து விண்ணப்பஞ் செய்வா னீது. (௧௪)

ஐயனே யுமையோர் பாகத் தமலனே மழுமா னேந்துங்
கையனே காலற் காய்ந்த காலனே யந்தி வானேர்
மெய்யனே யென்னை யாண்ட வித்தகப் பிரானே யுண்மைச்
செய்யனே வாய்மை தேருந் திறந்திரு வுளஞ்செய் யென்றான். (௧௫)

மீனவ னிவ்வா றேத்தும் விண்ணப்ப மேற்று முக்கண்
வானவன் வீரை தன்னை வருக்கையாக் கியபி ரான்கா
ரேனவன் கோடு பூண்ட விறையவன் முறையே செய்யுங்
கோனவ னுள்ளந் தேற்றுங் கொள்கையுட் கொண்டா னன்றே. (௧௬)

வெருவரு றுனைய வெள்வேல் வேந்தகேள் சோழ தீர்த்தத்
திருவரு முன்னே மூழ்கி னியல்புண்மை தெரியு மென்று
பொருவரும் வெளிவாக் கொன்று புலப்படத் தோன்றிற் றப்போழ்
தொருவரு மன்பின் வேந்த னுவந்தெதிர் பணிந்து போற்றி. (௧௭)

நிறைபெருஞ் சனங்கள் சூழ நிகரிலாச் சோழ தீர்த்தத்
துறையடைந் தரச னின்று தோடங்கொ டொருவன் றன்னை
மறையவன் றன்னை யிந்த மாதீர்த்தத் துண்மை கூறிக்
கறைதப முழுகு மென்று கட்டுரைத் திட்டா னன்றே. (௧௮)

வேந்துரை செய்த வாறே வேதிய னிடைய னுவுட்
போந்துவை கியவென் னுக்கள் பத்தெனப் புகன்று மூழ்கி
யேந்துபே ரழகு வாய்ந்த விளமைமூப் பிரியப் பெற்றுச்
சாந்துநற் றூரும் பொங்கத் தண்கரை யேறி நின்றான். (௧௯)

கண்டவ ரிவர்தா நில கண்டரொத் தனரால் வீரை
யண்டர்தம் பெருமா னுட லளப்பரி தாய தென்று
தொண்டர்க ளோடுங் கூடித் துதித்தர கரவென் றார்த்தார்
விண்டல வாணர் யாரும் பொழிந்தனர் மென்பூ மாரி. (௨௦)

மிகுவியப் படைந்த வேந்தன் வெதிர்ங்குழன் மகனை நோக்கித்
தகுவகை யுரைத்து மூழ்கிச் சத்தியந் தெரித்தி யென்றூ
னகுமுகத் தனைய மூர்க்க னவிலெலா மெனவே யென்று
புகுசெருக் கோடு மூழ்கிப் போக்கினு னிரண்டு கண்ணும். (௨௧)

விழியிழந் தச்ச மேவி வெள்ளத்துள் வியர்வு மல்க
வழிதெரி யாது மாழ்கு மதியிலான் றன்மை கண்டு
கழிமட னிவன்கை பற்றிக் கரையிடைச் செலுத்து கென்று
மொழிசெய்தா னிறையவ் வாறே முன்னின்று னொருவன் செய்தான்.

அதுதெரிந் தவர்க டண்டி யடிகளோ டொட்டி முன்ன
முதுகம லைக்கோட் டுற்ற மூடரை யொத்தா னென்று
கதுமென வுரைத்துப் பாவி கலங்குறு செய்தி னுயே
பதுமனு நிகரான் பத்துப் பசுக்களு மவாவி யென்றார். (௨௩)

ஏடநீ யென்செய் தாய்மெய் யியம்பினுன் றனையான் பத்துங்
கூடநீ கொடுப்பாய் கொல்லோ கொடாய்கொலோ வுரைத்தி யாலென்
றூடவர் பெருமான் கேட்ப வச்சமுற் றடியில் வீழ்ந்து
மூடனேன் பிழைத்தேன் சற்று முனியலை யுலகாள் வேந்தே. (௨௪)

வருவது தெரித ராதிவ் வாறுகெட் டொழிந்தேன் பார்ப்பா
னொருபது மட்டோ வின்னு மொருபது கூட்டிக் கொள்க
திருகற வுண்மை யான தெய்வமாய் விளங்கு மிந்தப்
பொருவிலி யடியேற் குள்ள பொருளெலாங் கவர்ந்து கொள்க. (௨௫)

வழிவழி யடிமை யாயிவ் வண்டரு வீரை மூலத்
தழிவளர் பெருமா னுக்கு முமையாண்ட வளுக்கு நாயேன்
பழியில்குற் றேவல் செய்வேன் பார்த்திப ரேறு போல்வாய்
விழியிழந் துயிர்வா டிழனென் மெலிவினுக் கிரங்கல் வேண்டும். (உ௬)

அறிவிலா திழைத்த தீங்கு பொறுத்தன்மிக் கறம தாகும்
பறிவிலான் கொத்தை தீர்க்கும் படியுள மிரங்கு வாய்நீ
மறிவிலாச் செங்கோல் வேந்தே மன்செயு முறையு நாளு
முறிவிலா வீசன் செய்யு முறையுமொன் றென்பர் சான்றோர். (உ௭)

ஆதலின் வீரை மூலத் தமர்பிரா னெனக்கு நீயே
காதலி னடியே னின்பொற் கழல்சர ணென்ற டைந்தே
னோதலின் முடியாத் துன்ப மொழிதரக் குருடு தீர்த்தி
வீதலி னின்ப மில்லை யிலையெனில் வேந்தர் வேந்தே. (உ௮)

என்றுரைத் தழுது தேம்பி யிந்தவா றிரந்து வேண்டிக்
கன்றுநெஞ் சுடைய னாகிக் காண்மிசை விழுந்து சோர
வன்றுகண் டவர்க ளியாரு மந்தோவென் றிரங்கி னார்கள்
வென்றுநன் றொளிர்நூன் மார்ப மெய்யனு மிரங்கி னானே. (உ௯)

வழுதியு மிகவி ரங்கி மற்றிதற் கென்செய் வாமென்
றழுதில னின்ற வேழை யனருளி னாலங்கோர் வாக்கு
வழுவிலித் தீர்த்த மின்னு மற்றிவன் மூழ்க வென்று
கெழுமவா காய நின்று மெழுந்தது கேட்டார் யாரும். (௩0)

முன்னுமித் தீர்த்த நீருண் முழுகென வரசன் கூற
வின்னுமென் வருங்கொ லோவென் றெண்ணியச் சுற்றெ ழுந்து
பன்னுமத் தொறுவன் மூழ்கிப் பார்வையோ ரிரண்டும் பெற்று
மின்னுவண் கமலைத் தண்டி யடிகள்போன் மேலெ ழுந்தான். (௩௧)

புரவல னளவி லாத மகிழ்ச்சியூ சுரனோ டொற்றன்
கரவரு மனத்தோ ராகிக் களித்தனர் கண்டோ ரெல்லா
மரவணி சடையார் வீர சேகர ரருளைப் போற்றி
விரவலுற் றமைந்தார் யாரும் விடாதவா னந்த வாரி. (௩௨)

வேறு.

அண்மையடி யவர்க்காய வீரசே கரப்பெருமா னருளே யாகி
யுண்மைவெளிப் படுத்தலினாற் சத்தியபுட் கரிணியெனு மொருபேர் பூண்ட
தெண்மைமுழு குநர்க்கறமா திகளளிக்குஞ் சிவகங்கை யெனும்பே ரோடு
வண்மைதிகழ் தருசோழ தீர்த்தமெனப் பெயர்பெற்று வயங்கும் வாவி. (௩௩)

மறையவனு விருபதுகொண் டிடக்கொடுத்துத் தனக்குரிய வளங்கள் யாவு
மிறையவனு லயம்புகுத்தித் தனக்கேற்ற பணிபுரிந்தாங் கிருந்த வாயன்
கறையவனு தரியாத துணர்ந்துபிரா னருள்புரியக் கைலா யத்தோர்
நிறையவனு சாரமறப் புகுந்திருந்தான் பெருமகிழ்ச்சி நீங்கா னுயே. (௩௪)

வேதியனு விருபதுமப் பரமனுக்கீந் தவனுருவ மேவி வாழ்ந்தா
னோதியபாண் டியனமைச்ச ராதியரோ டாலவா யுற்முன் மேனிப்
பூதியரே சத்தியபுட் கரிணியெனும் பெயர்வரவு புகன்று மிப்பாற்
கோதியலா வீரவசந் தத்திருமால் வரவெடுத்துக் கூற லுற்றும். (௩௫)

சத்தியபுட்கரிணிப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௫௩அ.

# திருமால் பூசித்தபடலம்.

வெள்ளிய முத்தொடு செம்பவ ளங்களு மேவுற்றோர்
கொள்ளிய வீசு தரங்க நெருங்கிக் குரைபோவா
வள்ளிய பாற்கட லுப்ப ணராவணை வாய்த்தேவ
ருள்ளிய மேக மெனக்கிடை கொடுதுயி லுறுமாயோன். (க)

பிருகு முனித்தலை வன்சின மூண்டு பிறப்போர்பத்
தருகுத லின்றி யெடுத்துழல் வாயென வறைகுற்றன்
றிருகுத லற்றவை யேதுறு காலிகல் செற்றார்பா
லுருகுதன் மேவுறு தோல்வி யுறாவிற லுறல்வேண்டும். (உ)

ஆய திறம்பெற வென்புரி வாமென வாராய்ந்து
நாயன் மலர்ப்பத மேத்தி யிறைஞ்சுத னன்றென்று
மேய கருத்தின னுயின னெத்தல மேவுற்றுற்
பாய சிறப்பி னெலாமுறு மென்று படர்ந்தானல். (௩)

திருவளர் வீர வனத்தி லமர்ந்தரு டேவேச
னுருவளர் பாத மிறைஞ்சி னினைத்தவை யுறுமென்று
மருவளர் கொன்றையி னுனருள் கூட்ட மனங்கொண்டான்
வெருவளர் சிந்தை யிலாம லெழுந்தவண் மேவுற்றான். (௪)

எல்லை பணிந்து பெருஞ்சிவ கங்கை யெனுந்தீர்த்தத்
தொல்லை படிந்து விளங்குவெ ணீற்றின்மு ளுருவுற்று
வல்லை நலந்தரு கண்மணி மாலை வளம்பூண்டு
நல்லை யெனப்பதி வன்னமொ ரைந்து நயந்தெண்ணி. (௫)

தலைமிசை யங்கை குவித்து நடந்து தவாதோங்கு
நிலையெழு கோபுர வாய்த லிறைஞ்சுபு நெடுவில்லா
மலையவர் வாழ்தளி யுண் ணுழை வுற்றனன் வாழ்வேமிக்
குலைவற நல்கு வசந்த|மெனும்பெய ருறுகாலம். (௬)

நந்தி மலர்ப்பதம் வாழ்த்தி யிறைஞ்சி நறும்பூக்கள்
சிந்தி வலங்கொடு வந்து பிரானெதிர் சென்றுற்றே
யந்தி நிறத்தவ் வற்புத சிற்பர வமலாவென்
றுந்தி மலர்ந்த முகுந்தன் வணங்கி யுவப்புற்று. (௭)

முத்தித ருஞ்சிவ கங்கைந றும்புனன் மொண்டாட்டிச்
சுத்திய சந்தின றுங்கல வைக்களி துதைவித்துப்
பொத்திய வாசம ருப்பல மெல்லிய பூச்சாத்தி
யொத்திய[illegible]ஞ்சுவை பொங்குநி வேதன முறவூட்டி. (௮)

மாமலை யாளுமை யாண்டவ னுக்குமி வாருகத்
தேமலி மஞ்சன மாதிய செய்து சிறப்பித்துக்
கோமலர் நெற்றியி னெங்கள்பி ரான்முன் குறுகுற்றுத்
தா[illegible]வி ராவிய மார்புடை யான்றுதி தான்கூறும். (௯)

எண்ணிய வாறடி யார்பெற மேய விரும்பேறே
புண்ணியர் பாலக லாதுவி ளங்குறு பொன்னேயுட்
கண்ணிய யோகர் கருத்தி னிருங்கதிர் கான்றோங்கு
மண்ணிய செஞ்சுட ரோயுன டைக்கல மடியேனே. (௧௦)

கற்பனை யத்தனை யுங்கட வாவொளிர் கனவாழ்வே
தற்பர ஞானசொ ரூபகு ணாதிச யத்தேவே
புற்புத மாமுடல் வாழ்க்கையெ னருட் பொலிகோவே
யற்புத சிற்பர னேயுன டைக்கல மடியேனே. (௧௧)

பிணிகிளர் மெய்யு மதிற்புகு வாழ்வும் பெரிதென்றே
துணிகிளர் சிந்தைய ரென்றுமு றாத சுயஞ்சோதி
கணிகிளர் கொன்றைந றுந்தொடை வேணிய காபாலி
யணிகிளர் வீணையு ளாய்நின டைக்கல மடியேனே. (௧௨)

பெயர்வரு நோய்பல வற்றுளும் வெய்துபி றப்பாய
கயமிகு நோயென வோதுவ ரந்தக் கடுநோய்க
ளுயலரி தாமொரு பத்துடை யேனென் றொழிவேனோ
வயர்வறும் வீணையு ளாய்நின டைக்கல மடியேனே. (௧௩)

பூதர நாணிடு புங்கவ சங்கம் புரிகாத
மாதர மேயவு மாதர வோதர மணிகண்ட
சீதர னுமெனை யாதிய ராலுந் தெரிவொண்ணு
வாதர வீரையு ளாய்நின டைக்கல மடியேனே. (க௪)

என்று துதித்திரு கட்புனல் வாரவி ரங்குற்று
நன்றுகு ழைந்துக சிந்துநெ கிழ்ந்து நலம்பேணுங்
குன்றுகொ லென்றபு யத்திரு மாலெதிர் குளிர்மேவ
வென்றுவி ளங்குபி ரான்வெளி வந்திது விள்ளுற்றான். (க௫)

வேறு.

திருநெடு மாலே கேட்டி சிறந்தவித் தலத்தை மேவி
யொருவற நம்மைப் பூசை யுஞற்றினை யாத லாலே
பருவரும் பிறப்போர் பத்தும் பார்க்குப கார மாகப்
பொருவரும் வீரம் பூண்டு பொலிதரு மேன்மை தந்தோம். (க௬)

இன்னுமித் தலத்தில் வைகு மிருந்தவர் வீர மாதி
மன்னுவ ரதனு னீயு மாறுய நிருதித் திக்கி
னுன்னுமோர் சினக ரங்கொண் டுறைகுதி நினைத்த தன்றி
முன்னுமற் றுள்ள யாவு முகிழ்த்திடு முனக்கு நாளும். (க௭)

அன்றியும் வீரம் வேண்டி வசந்தகா லத்தி லன்புற்
றொன்றிய நமைப்பூ சித்தா யுற்றவிக் கார ணத்தா
லின்றுமுன் னினக்கு வீர வசந்தமா லெனும்பே ரெய்து
நன்றுபெற் றமர்தி யென்று மறைந்தன னங்கள் கோமான். (க௮)

மாயவன் மகிழ்ச்சி பூத்து மாறுகொ ணிருதித் திக்கின்
மேயவோர் கோயில் கொண்டு விளம்பிய பெயரும் பூண்டு
தூயனு யமர்வா னன்னுன் றுணையடி வழுத்தப் பெற்றோர்
நேயமா ரவனு லோக நிலவிவாழ்ந் திருப்ப ரன்றே. (க௯)

மன்னிய புகழான் வீர வசந்தமால் வரவு சொற்று
மின்னிய கழலி ராமன் வீரநா யகன்பொற் பாதம்
பின்னிய வன்பி னேத்தி வீரரா கவப்பேர் பெற்று
முன்னிய விலங்கை செற்ற காதையு மொழிவாங் கேண்மின். ()

திருமால் பூசித்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௫௫௮.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

# வீராகவப்படலம்.

திரையெறியுஞ் சரயுநதித் தெண்புனல்பாய் வளம்பெருகிப்
புரைதபுபல் குடிமல்கிப் பொலிதருகோ சலநாட்டில்
வரைநிகரு மாளிகையு மாமதிலுங் கோபுரமுங்
கரையறவுற் றென்றுமுள தயோத்தியெனுந கடிநகரம். (க)

அந்தநகர் மார்த்தாண்டன் குலத்துதித்தா னயன்புதல்வன்
றந்தவரை பரியிரதந் தவாவலியாட் பெருங்கடலா
னெந்தவுல கமும்புகழு மிரும்புகழான் பெருந்திறலான்
சந்தமிகு கழற்காலான் றசரதனென் றிடுபெயரான். (உ)

மாடுபெருந் தவமெனச்செய் வசிட்டமுனி மொழிவழிபோய்
நாடுகலைச் சிருங்கமுனி வனையழைத்து நகர்புகுதப்
பாடுபுக ழவன்கிருது பண்ணியவி நாற்கூறும்
மூடுநிறை கற்புடையார் மூவருக்கும் பகிர்ந்தளித்தான். (௩)

ஈன்றனள்கோ சலையென்பா ளிராமனைமா ளிகைமேலால்
வான்றவழ்கே கயன்மடந்தை வயிறுவாய்த் தனள்பரதத்
தோன்றலையோ திருமகவைச் சுமித்திரைநல் கினடனய
ரான்றகலை முதற்பலவு மமைந்துவளர் தருநாளில். (ச)

காதிமக னரசனெதிர் கரியவற்றம் மோவெனலுங்
கோதியலா விளவலொடுங் குனிசிலைகைக் கொண்டடைந்து
நீதியிலாத் தாடகையை நிகழுமவ ளொருமகனை
மோதியுயிர் குடித்துமக முடித்தொருகல் லெழப்புரிந்து. (ரு)

தனுமுறித்துச் சீதையெழிற் றனுவளைத்துத் தம்பியரும்
பனுவன்மறைப் படிவேட்கப் பரந்தபெருஞ் சேனையொடு
மனுமுதற்பற் பலரறிந்த மாளிகைவா னகர்புகும்போ
தனுமொருவிற் கவர்ந்துநக ருற்றொருதாய் மொழிகொண்டு. (சு)

இளவலுஞ்சீ தையுந்தொடர வேகிவர நதிகடந்து
தளரொருவே டனைநட்டுத் தறுகண்விரா தனைவதைத்து
வளமலிசித் திரகூட மரீஇப்பொருமி யழுதேங்கி
யளமருதம் பியைத்தேற்றிப் பாதுகையோ டவற்போக்கி. (எ)

பஞ்சவடி தீரமரீஇப் பரவுசடா யுவைக்கண்டு
வஞ்சமலி சூர்ப்பநகை மாமுலையா திகளறலா
லஞ்சவரு கரனாதி யரக்கருயி ரறமடித்து
நஞ்சமென வருமொருமா னுயிர்கவர்ந்து நண்ணிடுமுன். (அ)

தம்பியுமில் வழியரக்கன் சானகியைக் கவர்ந்தேக
வெம்பியிகல் புரிபறவை வீழ்ந்துகிடந் ததுகண்டு
நம்பியிரா கவன்கவன்று செயக்கடவ நன்கியற்றித்
தும்பிமுதல் வயிற்றிலிடு தொழிற்கவந்த னுயிர்மாட்டி. (கூ)

ஒருசவரி பூசனைகொண் டுயர்மரா மரந்துளைத்து
வெருவருமிந் திரன்மகனார் வெங்கதிர்மைந் தனுக்குதவி
யொருவரிய வரிமகனு லொண்டொடிவை கிடந்தெரிந்து
திருவமிகுஞ் சேனையொடு தென்பாண்டி நாடடைந்தான். (க0)

குறுமுனிவ னிருக்கையினைக் குறுகியவ னடிபணிந்து
மறுவின்மனை வியைப்பிரிந்த மாத்துயர மெடுத்தியம்பித்
தெறுதொழில்வல் லரக்கர்தமைத் தெறுவதற்குத் தருவீரம்
பெறுவகையென் புரிவலெனப் பெருந்தவத்தோ னுணர்ந்துரைப்பான்.

வீரமா வனத்துமையாண் டவளொடெம்வீற் றிருக்கின்ற
வீரசேகரர்மலர்த்தாள் விழைந்துபோற் றிடுவையெனில்
வீரமாற் றலர்ச்செருக்கும் வீரமளப் பறப்பெற்று
வீரரா கவனெனும்பேர் மேவுவையா லெனப்புகன்று. (கஉ)

அத்தலத்தின் மான்மியமு மறைந்தடையா ளமுங்கூறிக்
கைத்தலத்தி னெல்லியினீ கருதியதா குகவென்று
முத்தலத்தின் விளங்குதமிழ் முனியுரைத்து விடைகொடுத்தான்
மைத்தலத்தி னறிதுயில்செய் பண்ணவனுண் மகிழ்பூத்து. (கங)

அடியனே னின்றேசென் றரக்கரைச்செற் றனனென்று
படியவா முனிவனடி பணிந்தெழுந்து விடைகொண்டு
கொடியுலா மணிமாடக் கோவீர நகரடைந்து
கடியவீ செறிந்தசிவ கங்கைநீ ரிடைப்படிந்து. (கச)

வெள்ளியநன் னீறணிந்து விளங்கியகண் மணிபூண்டு
வள்ளியவைந் தெழுத்தெண்ணி மலர்க்கைதலை மேற்குவித்துத்
துள்ளியபே ருவகையொடுந் தொழுதுகோ புரம்புகுந்தா
னள்ளியபே ரருளுடைய நாயகன்பொற் கோயிலகம். (கரு)

நந்தியடி பணிந்தெழுந்து நயந்துதிருத் தளிவலங்கொண்
டந்திமதி புனைந்தவர்நே ரணைந்துபல முறைதொழுது
முந்திநறு நீராட்டி முழுமணமென் பூச்சூட்டிக்
கந்தியலா வுணவூட்டிக் கனிந்துதோத் திரஞ்செய்வான். (கசு)

உருவாகி யருவாகி யுளைத்தவுப யமுமாகி
மருவாகி மலராகி வான்முதற்பூ தமுமாகிக்
கருவாகிக் கண்ணாகிக் கண்ணுண்மணி யாகிநிறை
திருவாகி யொளிர்வீர சேகரநின் பதம்போற்றி. (கஎ)

பண்ணிசைவெங் கதிர்கிரணம் பாணியுவர் மலர்நாற்றம்
விண்ணனில முடலமுயிர் விழியொளியொண் மணிபிரபை
யெண்ணறுநெய் நிலவுகலை யெனக்கலந்த விறையவனே
திண்ணவய விடைவீர சேகரநின் ருள்போற்றி. (கஅ)

வெய்யகரி யதளுரித்து மேனிமறைத் தவபோற்றி
வையமிசை நடாவொருமும் மதிலுமெரித் தவபோற்றி
கையமைதண் டொவெருவெங் காலனைக்காய்ந் தவபோற்றி
செய்யமழுப் படைவீர சேகரநா யகபோற்றி. (கக)

வரையடியிற் கிடந்தரக்கன் வாயலறி யோலமிடப்
புரையிலடி விரனுதிசற் றழுத்தியபுண் ணியபோற்றி
விரைமலர்மங் கையர்முதலோர் மென்களத்துப் பொன்பொலியத்
திரையெழுநஞ் சயில்வீர சேகரநா யகபோற்றி. (உ0)

மாயவலி வாளரக்கன் வஞ்சிக்க மருவலரு
மாயபரா பவமுநனி யடைந்தடியே னல்லாந்து
சாயவுநின் றிருவுளமோ தவாக்கருணை புரியாயோ
தேயமெலாம் புகழ்வீர சேகரநா யகபோற்றி. (உக)

என்றுபல முறைதுதிப்ப வெம்பிரா னெதிர்தோன்றிக்
கன்றுகொடி யவர்ச்செருக்குங் காகுத்தன் முகநோக்கித்
துன்றுபெரு வலியரக்கர் குலமுழுதுஞ் சுவீர
மின்றுநினக் களித்தனமற் றிதனாலே யெஞ்ஞான்றும். (உஉ)

வீரரா கவனெனும்பேர் நினக்காக வீரையடைத்
தாரவார் கலிபிலங்கை புகுந்தரக்க ருயிர்மாட்டிக்
காரவா வியநறிய கருங்குழற்சீ தையைமீட்டுப்
போரவா வறநினதூர் புகுந்துமணி முடிகவித்து. (உ௩)

பாராண்ட பின்னடைநின் பதமென்று பிரான்மறைந்தான்
காராண்ட நிறத்தானுங் கைகுவித்து விடைபெற்று
நாராண்ட வருளுமையை நயந்துபணிந் தெழுந்துபோய்ப்
போராண்ட சூலத்தான் புகன்றபடி யெலாமுடித்தான். (உ௪)

அன்றுமுதல் வீரராகவனெனும்பே ரவனடைந்தா
னன்றுதவ முயன்முனிவீர் நாடிபுகழ்த் தாசரதி
வென்றுமிளிர் தருவீரம் பெற்றதிறம் விளம்பினு
மொன்றுபெரு மான்பொதிசோ றுண்டதிற மெடுத்துரைப்பாம். ()

வீரராகவப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௫௮௩.

# பெருமான் பொதிசோறு நிவேதனஞ் செய்த படலம்.

பொன்னியல் புரிசை சூழ்ந்த புகழ்ப்பெரு வீரை மேய
மின்னியல் சடையா ரெங்கள் வீரசே கரப்பி ரானார்
முன்னிய வன்பு வாய்ந்து மூந்நூறு மறையோர் வாழுங்
கொன்னியல் வளத்தான் மிக்க குருந்தமா வனத்தை யுற்று. (க)

வளர்பெருங் கருணை யாலோர் வைதிக மறையோ ராகி
விளர்தபு மதிசா லையர் வீதியி லணைந்தா ராகக்
கிளரொளி யனையர் யாருங் கெழுமுறக் கண்டு போற்றித்
தளர்வறு மிருக்கை நல்கித் தகவிது வினவு வாரால். (உ)

எந்தவூர் நும்மூர் நாமம் யாவதெக் கலைகள் வல்லீர்
வந்தகா ரியமென் யாவும் வகுத்துரை யாடு மென்றார்
சந்தநான் மறையுந் தேருஞ் சச்சிதா நந்த ரூபத்
தந்தமா மறையோர் மூர லரும்பிட வறைய லுற்றார். (௩)

எங்குநா மிருப்ப தேனும் பிரியமிக் கெழில்வீ ரைக்கட்
டங்குவோ மான்ம நாத னெனப்பெயர் சாற்று நிற்பர்
பொங்குமா மறைகண் முற்றும் புகாறத் தெளிந்தோங் கற்பா
ரிங்குமே வுறிற்கற் பிப்பா னெண்ணமுற் றடைந்தோமென்றார்.()

உமையொரு பாகங் காட்டா வுத்தம மறையோர் வார்த்தை
யமைதரக் கேட்ட வையர் மகிழ்ந்துநுங் கருத்தற் றுயிற்
கமையுற விங்குப் பற்பல் பிரமசா ரிகள்கற் பார்கள்
சமைதர வவர்க்குக் கற்பித் திடுமெனச் சாற்றி னாரே. (௫)

மற்றதற் கிசைந்து செங்கை மான்மழு மறைத்த வைய
ருற்றவர் கிரகந் தோறு முபசரித் திடச்சென் றுண்டு
முற்றவுஞ் சிறுவர்க் கூட்டி முழுமறை யனைத்துந் தேற்றி
யற்றமின் றாகக் கற்பித் தாதரத் தமரு நாளில். (௬)

மன்னுமம் மறையோ ரோடு மாறுபட் டவர்க ளாகித்
துன்னுவன் மையரே யாஞ்சில் சூத்திர ரிம்மண் முற்று
முன்னுமெம் முடைய தென்றார் மொழிந்ததெம் முடையதேயென்
றுன்னுமம் மறையோர் சொற்று ருற்றது கலக மேன்மேல். (எ)

எமதெம திந்த மண்ணென் றிருதிறத் தாருங் கூறிக்
கமமற வெகுண்டு மூண்டு கலாய்த்திடு பொழுது முந்தித்
தமமனக் கொடியர் கூடல் சார்ந்திறை யாய செங்குங்
குமவரை நிகர்தோ ளாற்குக் கூறுவா னெழுந்து போனார். (அ)

அன்னவர் போத லோடு மருமறை யொழுக்கம் வாய்ந்த
முன்னவர் பலருங் கூடி முரணுபு வழக்கு மேற்கொள்
பின்னவர் வார்த்தை வல்லார் பெரும்பொரு ளுடையார் மன்பா
லென்னவ ருரைப்பர் கொல்லோ வென்றினைந் தேங்க லுற்றார். (௯)

புரவலன் முன்னர் யாம்போய்ப் புகல்வதென் னெனவாய் வாருட்
பாவுறு சிற்சி லோர்நாம் பஞ்சாதி யுரைப்பே மென்றார்
தரமிகு சிற்சி லோர்யாஞ் சடையுரைத் திடுவே மென்றார்
கரவறுஞ் சிற்சி லோர்யாங் கனம்புகன் றிடுவே மென்றார். (௧௦)

சிற்சிலர் கிரம மெல்லாந் தெரிக்கயாம் வல்லே மென்றார்
சிற்சிலர் கனமீ மாஞ்சை செப்பயாம் போது மென்றார்
சிற்சிலர் கற்ப முற்றுந் தெருட்டுதும் யாமே யென்றார்
சிற்சிலர் மங்க ளானி பவந்தென்பாஞ் சென்றியா மென்றார். (௧௧)

உற்றவே தியர்க ளிவ்வா றுரைத்துரைத் தொழியக் கண்டு
பெற்றவே தியரென் றோதும் பெருந்தகை யாண்ம நாதக்
கொற்றவே தியர்தஞ் செவ்வாய்க் குளிர்குறு முறுவல் காட்டி
யுற்றவே தியரை நோக்கி யருத்திது கூற லுற்றார். (௧௨)

இன்றுநாம் வழுதி முன்ன ரெய்தினும் வழக்குப் பேசித்
தொன்றுதொட் டௗது நங்கண் மண்ணென்று துணியச் செய்து
வென்றுமீ ளுதுநம் பின்னர் விழைபொதி சோறுங் கொண்டு
நன்றுமே வுதிரா லென்று ரவரெலா நயந்தா ரன்றே. (கரு)

ததிவிர வியவின் சொன்றி புளிவிராய்ச் சமைத்த பொம்மல்
பொதிதர நீறு பூத்துப் பொருமுகாய்க் கறிமேன் மேலு
மதிசுவை யமையா நிற்கு மபூபவர்க் கங்க ளின்னு
மதியமை யூறு காய்க ளிவையெலாம் வயங்கக் கொண்டு. (கச)

மறையவர் பலரும் பின்பு வாமறை முழுதுந் தேரு
நிறைதிரு வடியி லந்த மறையென நிகழ்த்து மாறு
முறைசெறி பாதக் காப்பு முருங்கவா தவத்தை மாய்க்குங்
கறையில்வெண் குடையுங் கையிற் காமரு வேணுத் தண்டும். (கரு)

பொருவரி தாய நீற்றுப் புண்டரக் காப்பு மேன்மை
யொருவரி தாய தங்க ளுறுமணித் தொடையு மாசு
மருவரி தாய வுத்த ரீயமும் வயங்கா நிற்க
வெருவரி தாய வேத்து வேதிய ரடைந்தா ரன்றே. (கசு)

முதிர்சுவைப் பொதியூண் டாங்கு முதிர்மறை யவர்க ளோடு
மதிர்குரன் மிருக மோவா வடவிகள் கடந்து வானிற்
கதிர்நடு வடையுங் காலைக் கருதுதம் பெருவீ ரைப்பால்
வெதிரொரு கரத்துக் கொண்ட வேதிய ருற்று ரன்றே. (கஎ)

உற்றவர் பொதிசோ றிங்ங னுண்டிளைப் பாறிப் போவோ
நற்றவர் பலரும் போற்ற நம்பிரா னமர்தே மென்று
கற்றவர் புகழு மிந்தக் காமரு தலத்தைக் காணப்
பெற்றவ ரெவரோ வின்பம் பெற்றவ ரவரே கண்டீர். (கஅ)

என்றுமித் தலத்தி லோவாப் பிரியமுண் டெமக்கு வாச
மொன்றுபன் மலரும் பூத்திங் கொளிர்சிவ கங்கை மூழ்கித்
துன்றுநல் வீரை மூலச் சோதியைத் தொழுதான் மேற்கொ
ளன்றுநம் வழக்கும் வெற்றி யாமென வறைந்தா ரன்றே. (ககூ)

சொற்றவா றுக வென்றார் தொகுமறை யவரன் றோரோ
டுற்றமர் தீர்த்த மாய சிவகங்கை யுவந்து மூழ்கிக்
கொற்றமார் வீரை மூலக் குறியினைத் தொழுது மீண்டு
பற்றவா மத்தீர்த் தத்துப் படர்கரை மேல்பா லுற்றார். (உ0)

ஒருமறை யவர்தம் வேட மூற்றுற நடிக்குங் கள்வர்
வருமறை யவரோ டாங்கோர் மண்டபத் திருந்தார் நேர்வந்
திருமறை யவர் தூய் தாக விடஞ்செய்து கலந்தி ருத்தி
யுருமறை யவர்முன் மற்றை யோருக்கும் படைக்க லுற்றார். (உக)

பொதிபடு யாப்ப விழ்த்துப் புளிமடை முன்ப டைத்துத்
ததிமிசை பின்ப டைத்துச் சாற்றிய கறியும் வைத்து
மதிசெயு மூறு காயின் வருக்கமற் றுளவும் வைத்து
விதிமுறை யமுது செய்ய வேண்டுமென் றுபச ரித்தார். (உஉ)

விடமெடுத் தயின்ற தெய்வ வேதியர் திருக்கண் சாத்திக்
கடவுளர் பெருமான் வீணைக் கண்ணுதற் பெருமா னன்ப
ருடனுறை பெருமான் றெய்வ வுமையவள் பெருமான் கொன்றைப்
படர்சடைப் பெருமா னுக்கே யாமெனப் பகர்ந்து துய்ப்பார். (உங)

இஃதுநற் சுவைய தாய திஃதுநற் பதத்த மைந்த
திஃதியம் பினும்வா யூறு மிஃதுவான் சுதையை யோட்டு
மிஃதுசார் கையும ணக்கு மிஃதுகா லத்திற் கேற்ற
திஃதினும் படைக்க வேண்டு மென்றுரைத் தடங்கத் துய்த்தார். (உச)

தொக்கவ ரொடுமிவ் வாறு துய்த்துவாய் பூசி நல்கு
மிக்கபா கடையு மென்று விரைந்தெழீஇ நடந்து சென்று
தக்கவர் புகழுங் கூடல் சாந்தர சவையுட் புக்கார்
செக்கரஞ் சடையு மேய திங்களும் பிறவுந் தோற்றார். (உரு)

வழுதியுங் கற்று வல்ல மாண்பின ரிவரென் றோர்ந்து
தொழுதொரு பீட நல்கத் துணைந்ததி லிருந்தா ரப்பாற்
பழுதமை வழக்கு மேற்கொண் மூர்க்கரைப் பார்த்து நுங்கள்
செழுவிய பூமி யென்றற் கறிகுறி தெரிப்பீ ரென்றான். (உசா)

அரசுரை செய்ய மூர்க்க ராமிலாப் பூமி யென்றார்
பரசுநன் மறையோர் வெட்டின் வாய்ப்படு நறுநீ ரென்றார்
விரசுமற் றதுசோ திப்பான் வேந்திரு வகையா ரோடும்
புரசுமுற் செறிகு ருந்த வனத்தகம் வந்து புக்கான். (உஎ)

சொல்லிய வனையர் சொற்கோர் சோதனை யில்லை மேன்மை
புல்லிய மறையீர் நீயிர் புகன்றவா தெரித்தி ரென்ன
வல்லிய மனையா யன்னார் மண்டொடு கருவி வாங்கிக்
கல்லிய மொழியி னன்னீர் காணலாம் படுமா றென்றார். (உஅ)

தொழுகுலத் தவர்க ளெல்லாஞ் சொற்றவா புனலுண் டாமோ
பழுதுறின் யாது செய்வா மென்றுளம் பரிந்து நிற்க
வழுதியு மூர்க்கர் தங்கை மண்டொடு கருவி நல்கி
யொழுகியெவ் விடத்தி லேனு மூன்றுதி னென்று சொன்னான். (௨௧)

அனையவர் மேடு தோறு மங்கையிற் கருவி நாட்ட
வினைதரு குமிழி யோடு மெழுந்தது மாநீ ரம்மா
தனையறப் பெருகி யக்கான் பெருந்துறைப் பெயர்சார்ந் தன்று
முனைவன்முன் னுறினெங் கேனு முடியாத பொருளொான் றுண்டோ. ()

பாண்டிய னிறும்பூ தூற்றான் பனவருண் மகிழ்ச்சி பூத்தார்
வேண்டிய கொள்ளா மூர்க்கர் மெலிந்தறத் தேம்பித் தோற்றா
ரீண்டிய வான நாட ரிணர்மலர் மாரி பெய்தார்
தூண்டிய சுடரன் னானைத் துணியாதை யுற்றார் யாரும். (௩௧)

மறையுணர் பெரியீர் நுந்த முண்மைவாய் மலரு மென்ன
வறைதுமென் றொருகு ருந்தி னடியடைந் தொரித்து வானின்
மிறைத்பு வாக்கா லென்றும் வீணைவீற் றிருப்பா மிங்கு
முறைகுவ முருத்தோற் றம லென்றன ருணர்ந்தார் யாரும். (௩௨)

திருவளர் வீணை மேய செல்வர்தம் மாடல் கொல்லோ
வுருவள ரிவையெ லாமென் றுணர்ந்திறும் பூது கொண்டு
மருவளர் வீணை மூல மன்னிய குருந்தின் மூலங்
கருவளர் கண்ணிற் கண்டுங் கருத்திற்கண் டேந்தாழ் வாரால். (௩௩)

அதுமுதல் வீணை மூலத் தமலர்க்குப் புழுக்க லன்ன
முதுமுழ வொத்து நீறு முகிழ்த்தகாய்க் கறியி னோடு
புதுமையி னிவேதிப் பார்கள் பூமிவே தியர தென்று
சதுமுகன் வணங்குங் கூடல் சார்ந்துவாழ்ந் திருந்தான் மாறன். (௩௪)

உருவழக் குழைத்தார் வேந்த னுறுத்திடப் பட்டொா ழிந்தா
ரருவளப் பொதிசோ றைய ரருந்திய தெடுத்துச் சொற்றா
நறுமலர்க் கூந்தற் செவ்வாய் நல்லுமை யாண்டா ளாய
மறுவருட் செல்வத் தன்னை மான்மியஞ் சிறிது சொல்வாம். (௩௫)

பெருமான் பொதிசோறு
நிவேதனஞ்செய்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௩௧அ.

# உமையாண்டாள் மகிமைப்படலம்.

உலகெலா மீன்ற நற்றா யொப்புயர் விகந்த செல்வி
யலகிலாக் கருணை வாரி யறமெலாம் வளர்த்த நல்லாள்
பலர்தொழும் பண்பு மிக்காள் பராபரை யாதி யாகி
நிலவுமை யாண்டாள் சீர்த்தி யெங்கணு நிரம்பிற் றன்றே. (௧)

இலகுறும் யோனி யோரெண் பத்துநான் கிலக்கத் துள்ள
வலகிலா வுயிரும் போக மாதியின் பனைத்து மெய்தத்
தலமெலா நிறைந்த மேன்மைச் சத்திபீ டங்க ளாய
பலவுளு முமையாண் டாடன் பைம்பொற்பீ டஞ்சி றக்கும். (௨)

சிறந்துயர் பீட மேய திருவுமை யாண்டா டாண்மேன்
மறந்தொரு மலரிட் டாலும் வானமர் கற்ப கத்தி
னுறந்தபன் மலருஞ் சூடி வாரொரு மலர்மேல் வாழ்வா
ரறந்தவா மலரோன் றுந்தி யாகவாழ்ந் திருப்ப ரன்றே. (௩)

ஒருதர முமையாண் மேய வொண்டளி சூழ்ந்து ளாரைப்
பொருவரு மமரர் சூழ்வார் புலோமசை மணாளன் சூழ்வான்
றிருமலர் மிசையோன் சூழ்வான் செங்கண்மா யவனுஞ் சூழ்வா
னிருநிலத் தவருட் சூழா ரிவரெனற் கொருவ ருண்டே. (௪)

குட்டநோய் காச மீளை குன்மநோய் பெருநோய் கண்ணோய்
கட்டநோ யென்னும் பொல்லா முயலகன் கரட்டு வாதம்
விட்டநோ யென்றுப் பக்க வாதமுன் வெய்ய வாகப்
பட்டநோ யனைத்து மம்மை பெயர்சொலப் பறக்கு மன்றே. (௫)

பிரமராக் கதம்பை சாசம் பெருவலிப் பூத பேதங்
கிரமமின் றேவப் போந்து கெழுமிய கொடிய யாவும்
பரமர்தம் மொருபான் மேய பைந்தொடி யுமைபேர் சொல்லச்
சரமம்வந் துற்ற தென்று தளர்ந்தழிந் தொழியு மாதோ. (௬)

மகப்பெற வேண்டி னாலும் வையத்து நுகரும் போக
மிகப்பெற வேண்டி னாலும் விண்ணவர் போக மெல்லாந்
தகப்பெற வேண்டி னாலுந் தவலரும் பேரா னந்த
நகப்பெற வேண்டி னாலு முமையரு ணயக்க நல்கும். (௭)

உமையவ ளிருமு னஞ்சார்ந் தொருவரன் புற்றுத் தாழி
னமைதர வவர்முன் செய்த தீவினை யனைத்துந் தாழுங்
கமையுற வெழும்போ தேநல் வினையெழு ங்கருதிச் சூழிற்
றமைநிகர் போக மெல்லாந் தள்ளினும் போகா சூழும். (அ)

ஒருசிவ கங்கை மூழ்கி யுடையுலர்த் தாது சூழ்ந்து
பிருகுவின் வாரந் தோறும் பிறங்கமா விளக்கு மிட்டுத்
திருகற நாற்பத் தைந்து தினம்வலஞ் செய்து போற்றி
வருவளேல் வந்தியேனு மதிமகப் பெற்று வாழ்வாள். (௯)

திருந்திய தைல மாதி சிறப்புற வுமையாட் காட்டிப்
பொருந்திய வாசம் வீசும் பூந்தொடை பலவுஞ் சூட்டி
யருந்திய சுவைய வன்ன மாதிய மிதப்ப வூட்டி
யிருந்திய மூழக்கு மாறு மீகையி னியற்று வோர்கள். (௧0)

மனைவியு மகவு மல்க வரம்பறு சுற்றஞ் சூழப்
புனைநிலத் துள்ள வாய போகங்க ளனைத்துந் துய்த்து
நனைமலர்க் கற்ப நாடு நண்ணியாங் கின்ப மார்ந்து
வினைதபு சிவலோ கத்து வீற்றினி திருப்ப ரன்றே. (௧௧)

வெள்ளிய வுருவ மாக வித்தையை விழைந்தோர் செல்வங்
கொள்ளிய விழைந்தோர் செய்ய வுருவமாக் கொடிய தெவ்வை
யெள்ளிய வவாவி னோர்கா ருருவமா வெண்ணு நிற்பர்
நள்ளிய விதயத் தாடு நாயகி யுமையாண் டாளை. (௧௨)

பிருகுவின் வாரந் தோறும் பிறங்குசெவ் வரத்தப் பூவுண்
முருகுசெய் யொருநூற் றெட்டான் முகிழ்நலக் கண்ணி கட்டித்
திருகுதீர்த் தென்னை யாளுந் திருவுமை யவடோள் சூட்டி
னருகுபன் மகவு மொய்ப்ப வளப்பருஞ் செல்வத் தாழ்வார். (௧௩)

உமையவ ளிருநா மங்க ளொராயிர மெடுத்துக் கூறி
யமைதரு குங்கு மங்கொண் டருச்சிப்போர் வான நாட்டு
ளிமையவர் பலர்க்கும் வேந்தா யிரும்பகை கடிந்து மாமைச்
சுமையடை யரம்பை மாதர் தோணலந் திளைத்து வாழ்வார். (௧௪)

பரவுறு நறிய மஞ்சட் பலகைநூற் றெட்டுக் கொண்டு
விரவுறு முமையா ளும்மம் விளங்கநூற் றெட்டுங் கூறி
யுரவுற வருச்சிப் போர்க ளுயர்வட திசைக்கோ னாகிக்
கரவுற வெழுதெவ் வெல்லாங் கடிந்துற வாழ்வா ரென்றும். (௧௫)

விரைசெய்சண் பகப்பூக் கொண்டு மேதக வருச்சிப் போர்கள்
புரைபடு சுவாச காச மென்னுநோய் போக்கி வாழ்வா
ருரைகெழு துரோண மாலை யுவப்பொடு கட்டிச் சாத்திற்
கரையறு செல்வந் துய்த்துக் கைலையே யடைவ துண்மை. (௧௬)

தரைபுகழ் பனிநீர் விட்டுச் சந்தனக் குறடு தேய்த்துக்
கரைகருப் பூர மாதி கலந்தபி டேகஞ் செய்வார்
வரையிற கரிந்தோன் வைப்பு மலரவன் முதலோர் வைப்பும்
புரையற வாழ்ந்து பின்னர்ப் பொருந்துவர் சிவலோ கத்தில். (௧௭)

செழுவிரை வெட்டி வேராற் றிருந்திழை யுமையாண் மேனி
முழுவது மறைப்போர் தெய்வ முழுப்பெரும் போகந் துய்ப்பார்
வழுவறு செம்பொன் வில்ல மாலைசெய் தலங்க ரித்தோர்
பழுதற வுலகெ லாந்தம் பதந்தொழும் பண்பு பூண்பார். (௧௮)

பன்மலர் செய்த பந்தாற் பற்பல மணியாற் செம்பொன்
மன்மல ரானூற் றெட்டு மனுப்புகன் றருச்சிப் போர்க
ளென்மல ருலக மெல்லா மியைந்தொரு குடைக்கீழ் வைகத்
தென்மல ரரச ராகி வாழ்ந்துபின் சேர்வர் முத்தி. (௧௯)

மஞ்சூர மிலக்கங் கொண்டு வாஞ்சையி னருச்சிப் போர்க
டஞ்சூழு மனையி லக்க முளவெனச் சமைந்து வாழ்வார்
வெஞ்சூர்கொன் மகப்பெற் றுடாள் விளங்குமக் கதையிட் டோரி
னெஞ்சூரு மன்பு பொங்க நீங்குறு திருக்கு மாக்கம். (௨௦)

அரசுசெ யிடரி னேனு மமைந்தவெப் பிணியி னேனும்
பரசுதன் கரும நீத்தான் பத்தியி னந்திப் போழ்து
வரசுகோ தயவி சேட வுமையடி வழுத்து வானேல்
விரசுபா தகங்க ளெல்லாம் வெயின்முனம் பனியே நேரும். (௨௧)

வாசனைப் பொடிகைக் கொண்டு வயக்கவா யிரத்தெட் டேனும்
பேசுறு நூற்றெட் டேனும் பெட்டருச் சனைசெய் வோர்கண்
மாசிலக் கதைக்குச் சொன்ன வண்பயன் முழுதுங் கொள்வா
ராசறு தீப மாலை யிட்டவ ரவனி யாள்வார். (௨௨)

சூலம்வா ரிசம்வி யாளஞ் சுடர்செய்கோ புரமால் யானை
சீலமார் புருடன் வாவி திகழ்தரு மிராசி பாய்மா
கோலமண் டபங்கும் பாதி தீபங்கள் கோடி கற்ப
ஞாலமேற் கைலை வைக்கு நவின்றளித் தியல்விப் போரை. (௨௩)

மொழிதரு பசுநெய்த் தீப முகுத்தமற் றதிலோர் பாதி
கொழிநலத் தமைப்போர் கோடி குலங்களை யேற்றி னோ
பழிதபு நவநீ தத்தாற் பரிந்தொரு தீபம் வைப்போ
ரொழிவற நரர்க டம்மு ளுயர்ந்தவ ராகி வாழ்வார். (உ௪)

அலகில்பல் புவனத் திற்குங் காரண மாய வம்மை
யிலகுமை யாண்டாட் கன்பி னெதுசிறி தியற்றி னாலும்
பலனொரு கோடி கோடி மேலுமாய்ப் பயவா நிற்கும்
வலனுயர் திருமுன் னின்று துதிசெயு மரபுங் கேண்மோ. (உ௫)

வேறு.

மலையர சுயிர்த்த மடநடைப் பிடியே வழுத்துந ரெய்ப்பினில் வைப்பே
கலைமறை முழுதா யம்மறை தோன்றுங் காரண மாய்ப்பொலி பரையே
நிலைநிலை யாமை யுணர்ந்தமெய்ஞ் ஞான நீதியா ருளத்தளி விளக்கே
தலைமைசால் வீரை வீரசே கரர்பாற் றயங்குமை யேயுனைத் தொழுதேன். ()

நலமலி பரையே யாதியே விருப்பே ஞானமே கிரியையே யென்னப்
புலமலி யோரைஞ் சத்திக ளாகிப் புவனமெங் கணும்படைப் பாதிக்
குலமலி தொழிலோ ரைந்துநன் றமைந்து குலவுற முடித்துநிற் பவளே
யலமலி வீரை வீரசே கரர்பா லமருமை யேயுனைத் தொழுதேன். (உ௭)

தெளிவள ருள்ளத் தூற்றெழு மமுதே சிந்திக்கத் தித்திக்குங் கரும்பே
யொளிவளர் ஞான யோகர்தம் முள்ளத் தொழிதரா தெழுகொழுஞ் சுடரோ
களிவள ரன்பி னெக்குநெக் குருகக் கற்றவர் கவர்தருங் கனியே
யளிவளர் வீரை வீரசே கரர்பா லமருமை யேயுனைத் தொழுதேன். (உ௮)

மறைநெடு முடியென் றுரைசெயுந் தளிர்த்த மாந்தருப் பயில்கருங் குயிலே
நிறையளி யமைய நெக்குநெக் குடைவார் நெஞ்சமாம் புலத்தெழு கரும்பே
குறையறத் துதிப்பார் வாக்கெனுங் கடலிற் கொழிசுவை தழீஇயெழு மமுதே
யறைவளர் வீரை வீரசே கரர்பா லமருமை யேயுனைத் தொழுதேன். (உ௯)

எண்ணரும் புவனப் பரப்பெலாம் வருந்தா தீன்றினி தளித்திடுந் தாயே
கண்ணரு மளவின் மந்திரங் களுக்குங் காரண மாயசிற் பரையே
யெண்ணருஞ் சுகுண ஞானயோ கியர்த மிருதயத் தடத்துலா மனமே
யண்ணரும் வீரை வீரசே கரர்பா லமருமை யேயுனைத் தொழுதேன். (௩0)

ஆன்றவே தாந்தப் பெருவரை யொழியா வானந்த வுருமுகி ழேக்கிச்
சான்றமா நடனம் புரிபசு மயிலே சச்சிதா னந்தமெய் வாழ்வே
யேன்றபல் லுயிர்க்கு மலவலி யகற்றி யிரிதரா வின்பருண் முதலே
தோன்றநற் றலமாம் வீரைவா ழுமையே துணைத்தநின் பொன்னடி போற்றி.

ஆயபல் புவனப் பரப்பெனும் வயலு ளமைதரு முயிர்ப்பயிர் பலவு
மேயபல் சனனக் கோடைவெப் பொழிந்து விழைகதிச் சீதள மடையப்
பாயவான் கருணைப் பெருமழை பொழியும் பச்சைமா மேகமே பரவிக்
காயவா ணர்கள்சூழ் வீரைவா முமையே கருதுநின் பொன்னடி போற்றி. ()

கருங்குழல் போற்றி செய்யவாய் போற்றி கதிர்த்தெழு வெண்ணகை போற்றி, யிருங்குழல் பணிக்கும் பனிமொழி போற்றி யிணைதப வருள்விழி போற்றி, மருங்குழல் பொருட்டுப் பணைத்தெழு ஞான வனமுலை போற்றி யென் மனஞ்சார்ந், தொருங்குழல் பயிலு மிணையிலா வீரை யுமைநின பத மலர் போற்றி. (௬௬)

என்றுபஃ றுதிக ளுள்ளநெக் குருகி யிருவிழி களும்புனல் வார
நின்றுகை குவித்துப் புரிதரல் வேண்டு நிலவவிங் ஙனந்துதி புரிவோர்
கன்றுபஃ றுயர்தீர்ந் தரசராய் வாழ்ந்து கற்பக நாடின் னடைந்து
நன்றுபல் வளமுந் திளைத்தருங் கயிலை நண்ணிவீற் றிருப்பரீ துண்மை. ()

கலிதரு துயர்தீர்த் தருளுமை யாண்டாள் கருதரு மான்மியம் பலவா, லொலிதரு மவற்றுள் யாதெடுத் துரைத்தா மொன்றுநா முரைத்தில மினிமேல், வலிதரு தலத்து மான்மியந் தீர்த்த மான்மிய மூர்த்திமான் மியமும், பொலிதரு திறத்த வேனுமோ ராற்றுற் பொற்புறச் சிலதொகுத் தறைவாம்.

உமையாண்டாள் மகிமைப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௬ ௫ ௬.

# தலமுதலிய விசேடப்படலம்.

கங்கைசூழ் கிடந்த தெய்வக் காசிமா தலமுன் னாக
மங்கையோர் பங்கர் வைகு மாதலம் பலவற் றுள்ளும்
கொங்கையோ வாது வீசுங் குளிர்மலர்ப் பொழில்சூழ் வீரை
செங்கையா மலக மென்னத் தெளிதரு விசேட மாகும். (௧)

வீரையே விசேட மென்று விளம்புதற் கைய மியாது
பாரையேய் தலங்க ளெல்லாம் படர்ந்துறும் பிட்டுந் தீராக்
காரையே பொருவுஞ் செங்கைக் கண்டன்வெண் குட்ட நோய்தன்
பேரையோ திடுங்காற் கேட்கப் பெயர்த்ததை யுணருங் காலே, (௨)

வீரைமான் மியம்வி ழைந்தோர் மேவுவர் சிவசா லோகம்
வீரைமா தலத்தைக் கண்டோர் மேவுவர் சிவசா மீபம்
வீரைமா தலம்வ சித்தோர் மேவுவர் சிவசா ரூபம்
வீரைமா தலத்தி றந்தோர் மேவுவர் சிவக்க லப்பே. (ங)

புண்ணிய மலியும் வீர வனத்தலம் புகுந்து வாழ்க்கை
நண்ணிய வுயிருக் கஞ்சு நமனளற் றனுரு மில்லை
யெண்ணிய பிரமன் மாயோ னிந்திரன் முதலா னோருங்
கண்ணிய வாங்கு வைகக் கருதின்வே றுரைப்ப தென்னே. (ச)

பிறந்தவர்க் காரூர் காணப் பெற்றவர்க் கருள்கூர் தில்லை
யிறந்தவர்க் கினிய காசி யெற்றைக்கும் பத்தி செய்யச்
சிறந்தவர்க் குயர்கா ளத்தி சிந்தித்தார்க் கழ்ந்தார் மேலாற்
பறந்தவர் காணு வண்ணு மலைபல வளஞ்சால் வீரை. (ரு)

கந்தமுற் பலவுந் துய்த்துக் காட்டமர் தலினும் பேறு
முந்தவெப் பழல்சூழ் மொய்ப்ப முழுகிநோற் றலினும் பேறும்
வந்ததே யுணவாக் கொண்டு வருந்திடு தவத்தாம் பேறு
மந்தமா வீரை யுண்டு வசிப்பவ ரடைவ ரன்றே. (சு)

வசித்திட வினிய வீரை மாதலத் தாயுள் காறும்
வசித்திட னன்று முற்று தெனிற்சில வருட மேனும்
வசித்திட லதுவு முற்று தெனிலொரு வருடம் பாதி
வசித்திட லதுவு மொல்லா தேலதிற் பாதி மன்னல். (எ)

மற்றது மரிதேன் மாத மற்றது மரிதேற் பக்க
மற்றது மரிதேல் வார மற்றது மரிதே லோர்நாண்
மற்றது மரிதேல் யாம மற்றது மரிதேன் மூர்த்த
மற்றது மரிதே லந்த மடவருக் குரைப்ப தின்றே. (அ)

கணிகையர் விழைவி னேனும் வாணிகக் கருத்தி னேனு
மணியவேற் றார்க்குச் செல்போ தற்றது பொழுதென் றேனுந்
தணிவின்மற் றெதுகொண் டேனும் வீரைமா நகரிற் றங்கிற்
பிணிகெழு பாவ மெல்லாம் பெயர்தரப் புனித ராவார். (கூ)

மற்றொரு தலத்திற் றெய்வ மறையவ் ரிலக்க ருண்ண
வுற்றொரு மையினெய் பாலோ டறுசுவை யன்ன மூட்டிப்
பற்றொரு வாத பேறு பரவுமத் தலத்து மேவிச்
சற்றொரு வருக்கிட் டாரேற் சார்தர வடைவ துண்மை. (க0)

அணுத்துணை யறஞ்செய் தாலு மேருவே யாகு மந்த
மணத்தவான் றலத்திற் றெய்வ மறையவர்க் கிருக்கை நல்கிக்
கணித்தவின் சுவைய சொன்றி யூட்டிடு கடப்பா டுற்றோர்
புணர்த்தபல் சன்ம பாவம் போக்குபு புனித ராவார். (கக)

நீறுமெய் விரவப் பூசிக் கண்மணி நிரம்பப் பூண்டு
பேறுமெய்ச் சிவன்றா ளென்னப் பேணுமெய் யடிய ருக்கு
மாறுதீ ரிருக்கை நல்கி வான்சுதை யமுது நல்கி
னூறுதீ ரவர்தம் பேற்றை யுரைக்கவல் லுநரும் யாரே. (கஉ)

தென்புலத் தவரு வக்குந் திருத்தகு நாளி லந்த
மன்புலத் தடிய ருக்கு மறையவர் தமக்குந் தூய
கொன்சுவை யமுத மூட்டிற் குலத்தொரு கோடி யோர்க
ளின்புற வளற்றி னின்று மேற்றின ராவரன்றே. (கங)

அருமறை யோது வித்த லளிமக மியற்று வித்தன்
மருவரு மன்ன தான முதற்பல வயக்கு வித்தல்
பொருவரு மத்த லத்துப் புணர்த்துமா ரொருவற் குண்டேற்
கருதுற வுறும்பே றிற்றென் றெம்மனோர் கரையற் பாற்றோ. (கச)

முந்திய யுகத்து நான்கு யோசனை மூன்றே யாகும்
பிந்திய யுகத்தி ரண்டே பிறங்கிய மூன்றி லொன்றே
நந்திய கலியி னந்த நற்றலத் தெல்லை நீங்கு
சிந்திய நினைப்பா ரோர்காற் றிருத்தகச் சூழின் முற்றும். (கரு)

பிணியெனும் வனைகண் முற்றும் பிளக்கும்வச் சிரமாய் நாளுங்
கணிதமில் பொய்யென் றோதுங் காட்டினுக் கொருநெ ருப்பாய்த்
தணிவில்பா தகவ ராக்க டமக்கொரு கருடப் புள்ளா
யணியுற வமையா நிற்கு மருட்சிவ கங்கைமாதோ. (கசு)

கண்ணுதற் பரம யோகி கருணையா லமைத்த ஞான்று
விண்ணுத லதற்கு நாமஞ் சிவகங்கை விளங்கப் பின்னு
ளண்ணுத லுற்ற நாம மவிர்புகழ்ச் சோழ தீர்த்த
மெண்ணுத லெவருஞ் செய்யுஞ் சத்திய தீர்த்த மென்ப. (கஎ)

இந்தமுப் பெயரும் பெற்று விளங்குறு மிசையார் தீர்த்த
நந்தவுண் முழுகி னாலு நயமுறப் பருகி னாலுஞ்
சந்தமிக் குறத்தொட் டாலுந் தவலற நோக்கி னாலும்
பந்தமுற் றிருக்கும் வெய்ய பாதக மிரிக்கு நாளும். (கஅ)

பரசிவ னங்கைச் சூலம் பாரகத் தழுத்தி யன்றே
தரமிக வியற்றிச் செம்பொற் சடையிடைக் கங்கை நீரை

விரவுற விட்ட தாலே மிளிர்சிவ கங்கை யென்றோர்
கரவில்பேர் பூண்டு காசிக் கங்கையிற் பொலியு மன்றே. (கக)

வருபல வாண்டின் றேற்ற மதித்தோற்றம் வாள ராக்க
ளிருகதிர் விழுங்குங் கால மீருவா வயன மின்னும்
பொருவரும் விடுமுன் னுய புண்ணிய காலந் தோயிற்
பருவருங் கொடிய வெய்ய பாதக மனைத்து மாயும். (உ0)

மறையவர்ச் செகுத்த பாவம் பசுக்களை வதைத்த பாவங்
குறைதவிர் மகவை மங்கை மார்களைக் கொன்ற பாவ
நிறையுமெய்ப் பாவ மேனு நினைந்ததிற் றேயு முன்னே
பறைதருந் தூல முற்றும் படுதழற் படுமா றொத்தே. (உக)

பலபல வுரைப்ப தென்னை பரமனைப் பிழைத்த பாவ
நலமிகு மனையாற் பேணு நயவனைப் பிழைத்த பாவம்
வலனுய ரனையான் வாக்கை யிகழ்தலான் வந்த பாவ
முலவுறு மற்ற யாவு மொழித்திடு மனைய தீர்த்தம். (உஉ)

சத்திய தீர்த்த மூழ்கித் தழுவுவெண் ணீறு பூசி
நித்திய முடித்துக் கொண்டு நிகழ்தருப் பணஞ்சி ராத்த
மெத்திய குணத்தத் தீர்த்த வியன்கரை யிருந்து செய்வோ
ரொத்தியல் குலங்க ளெல்லா முயர்சிவ கதியிற் சேர்த்தோர். (உந)

கருதுமத் தீர்த்தந் தோய்ந்த காற்றுமேற் பட்ட போதும்
பொருதுபல் பாவ மெல்லாம் பொடிப்பொடி யாகு மென்னின்
மருவுபத் திமையா னுன விதிப்படி வயங்க மூழ்கின்
வெருவுபல் பாவ மெல்லாம் விளித்திட லரிய தாமோ. (உச)

மணிகிளர் மோலி வானோர் வலனுயிர் செகுத்த தோன்ற
லணிமலர் மிசையோன் மாலோ னருந்தவ முனிவர் யாரும்
பணிவொடு வந்து மூழ்கிப் பயன்பல பெறுவ ரென்னிற்
கணிதமில் புவிவாழ் வோர்க்குக் கரைந்திடல் வேண்டுங் கொல்லோ. ()

எத்திசை மேவு வோரு மியம்பிய விரதம் பூண்டு
பத்தியின் வீறா மேவிப் பயில்சிவ கங்கை நன்னீர்
சுத்திமண் ணாதி கொண்டு தோற்போர்வை தன்னை யாக்கி
யொத்தியல் கலையி ரண்டு முறவரை யளவி னின்று. (உசு)

வீரசே கரனை யந்த விமலர்பா லுமையை யுள்ளத்
தாரவே நினைந்து மூழ்கி யறலொற்றி நீறு பூசிச்
சாரநூ லுணர்ந்தோ ராய தண்ணியர் கையிற் செம்பொன்
வாரமா மணிமுன் னுய யாவையும் வழங்கல் வேண்டும். (உஎ)

இரும்பொரு ளில்லா ராடி யியன்றமட் டேதவல் வேண்டு
மரும்பொரு ளாளர் சொற்ற விதிப்படி யாடல் சாலும்
பெரும்பொருள் பயப்பச் சென்று பெட்டாடன் முற்று தென்னின்
மரும்பொரு ளதனு லந்நீ ரழைத்தாடன் மாண்ப தாகும். (உ௮)

அன்னது முற்று தென்னி லன்னநீ ராடி வந்த
நன்னர்வான் றவத்தி னோரை நாடிக்கண் டிறைஞ்சல் வேண்டும்
பன்னரு மனையார் காணப் படாஒளி லந்நீர் மேய
தொன்னெடுந் திசையை நோக்கித் தொழுதுளத் தெண்ணல் வேண்டும்

இதுசெய லரிய தன்றே யித்தகு புனலி ருக்க
முதுபெரும் பிணிக்கோட் பட்டு முறிதலின் மிடிக்கோட் பட்டுங்
கதுவுறு பேய்க்கோட் பட்டுங் கலங்குவ ருலகின் வாழ்வா
ரதுவிது வென்றுஞ் சூழ்வா ரவரறி யாமை யென்னே. (௯0)

பூவினுட் கமலம் போலும் பொருப்பினுண் மேருப் போலு
மாவினுட் சுரரான் போலு மறத்துளில் லறமே போலுங்
காவினுட் கற்பம் போலுங் காசினி யிலிங்க மாய
தேவினுட் சிறக்கும் வீரைத் திருநக ரிலிங்கத் தேவே. (௯௧)

சோலையிற் குயில்கூம் வீரைத் துடியிடை யுமையாள் கோவைக்
காலையிற் காணிற் றீரு மொருபவக் கடுந்தோ முச்சி
வேலையிற் காணிற் பத்துப் பவப்பிழை விளியு மந்தி
மாலையிற் காணி னூறு பவப்பழி மாயு மன்றே. (௯௨)

அத்தயா மத்திற் காணி லாயிரம் பவத்தோ மாயுஞ்
சுத்தமார் விழாவிற் காலை மாலையுந் தொழுது போற்றி
னித்தரா தலப்போ கங்க ளெண்ணில வடைந்து பின்னர்
நத்தமா தரியா வான நாட்டர சாகி வாழ்வார். (௯௩)

மதிவளர் சடில மோலி வீரசே கரமா தேவன்
றுதிவளர் தாளிற் சாத்துந் தூமலர் பலவு மல்கப்
பதிவளர் நந்த னஞ்செய் பண்பினோர் வான நாட்டுத்
திதிவளர் கற்ப கத்துக் கிறைவரா யெழித்து வாழ்வார். (௯௪)

மாவளத் தமையும் வீரை மாதேவன் பூசைக் காகக்
காவளத் துதவு வோருங் கழனிக டிருந்து மூதா
ராவலிற் கொடுக்கின் றோரு மரும்பொருண் முதல்வைப் போருந்
தேவரிற் சிறந்து வாழ்ந்து சிவபுரத் தின்பந் துய்ப்பார். (௯௫)

நிகரில்கோ புரம்வி மான நெடுமதி லடுக்கு மாடம்
புகரின்மண் டபமுன் னுய யாவையும் புதுக்கு வோருந்

தகரிலா தமைய மற்றைத் திருப்பணி சமைப்போர் தாமும்
புகரிலா வரச ராய்வின் பொருந்திப்பின் கைலை வாழ்வார். (கசு)

மண்டலம் புகழும் வீர வனத்தம ருமையாண் டாட்குங்
கண்டல மாய நெற்றிக் கடவுளு யகர்க்குந் தோடு
குண்டல மதாணி பொன்வா குவலய மாதி யாவும்
விண்டல மருள வீசு மவர்பெறல் விளம்பு வார்யார். (கஎ)

விளைபடு தயிலம் பாறேன் விரைகருப் பூர நான
முளைபடு சந்தம் வாச வொண்புனு லாதி வீளை
வளைபடு சிலையாற் காட்ட வழங்குவார் யாவ ரேனுந்
திளைபடு கடல்சூழ் வைப்போர் செய்யகோல் செலுத்தி வாழ்வார். (கஅ)

சாத்திர மறையுந் தேருத் தம்பிரான் வீளை வாணன்
ரோத்திர மமைகோ யிற்குச் சுடர்விடு கும்ப மாதி
பாத்திரங் கவிகை யாதி விருதுகள் பலவீ வோர்மண்
மாத்திரங் சொல்லோ விண்ணும் வளரர சளிப்ப ரன்றே. (கக)

திருமுடித் தழும்பர் வீர சேகரப் பிரானுர் வேதப்
பெருமுடிக் கதிர்மேய பெருந்திருக் கோயி லுள்ளான்
மருவுற விலிங்க மொன்று மறைவழித் தாபித் தோர்போய்
வெருவுற வுதறி யன்னுர் திருவுரு மேவி வாழ்வார். (உ0)

ஆனநெய் யேனு மெண்ணு ளமைந்தநெய் யேனுங் கொண்டு
மானமர் கரத்தர் வீர சேகரர் மருவுங் கோயி
லீனமி றீப மேற்று மியல்பினர் நுதல கத்து
மூனமில் கைய கத்து முறுதழ லேற்றி வாழ்வார். (உக)

செஞ்சடை முடித்த வீர சேகரப் பெருமா னுர்த
மஞ்சடை முடியின் மேலால் வாசநீ ராட்டல் செய்வோ
ரஞ்சடை முடிவி ராவ வலையெறி பெருநீர் கோப்பத்
தஞ்சடை பவளாத் தாங்கித் தழைப்பர்வண் கைலா யத்தே. (உஉ)

துள்ளிய மறிமா னேந்துஞ் சோதியை யுமையா ளோடு
வெள்ளிய விடைமே லேற்றி விருப்பொடு தரிசித் தோர்கள்
வள்ளிய யானை யேறி வண்சிறை யன்ன மேறி
யொள்ளிய வுவண மேறி யுவப்பொடு வாழ்வர் மெய்யே. (உங)

பொருணனி யீட்டி யீட்டிப் புத்திரர் துய்த்தற் கென்று
மருள்படப் புதைத்து வைத்து வறிதிறந் தியம னுற்றும்
வெருள்படு துயரம் வேட்பார் வேட்பரோ வீளை வாண
னருள்படு சரணம் போற்றி யவன்றளிப் பணிசன் காற்றல். (உச)

தீயமா நிரய மெல்லாந் திளைத்திட நுழைவார் வெவ்வே
றுயபல் கருப்பந் தோறு மலாவுபு நுழைவா ரெங்க
ளையன்மா வீரை வாண னலத்தளி நுழையா ரென்றுன்
மேயவப் பெருமான் சீர்த்தி விளம்பிட முற்றுங் கொல்லோ. (௪௫)

நன்னர்மா தவத்தீர் வீரை நாயகன் புரிந்த வாட
லின்னமும் பலவே கூற லெம்மனோர்க் கெளிது கொல்லோ
தன்னமோ தினமா லென்று சாற்றினன் சூத மேலோ
னன்னமா முனிவ ரெல்லாங் கேட்டக மகிழ்ச்சி பூத்தார். (௪௬)

வேதமா முனிவ ரெல்லாம் வீரைநா யகன்பு ராண
மோதநீ யாங்கள் கேள்வி யுற்றுமிக் கின்ப முற்றே
மேதகாய் நினக்கி யாங்கள் விழைந்தியற் றுவதென் னென்று
சூதமா தவனைப் போற்றித் தொழுதுள மகிழ்ந்தா ரன்றே (௪௭)

மகவினை முடித்துச் சூத மாதவ னொடுபல் லோருந்
தகவியல் வீரை சார்ந்து சந்திய தீர்த்த மூழ்கி
நகவில்லைக் கொண்ட வீர சேகர நாதன் றாளு
முகவிலெவ் வுயிரும் போற்று முமைமலர்த் தாளும் போற்றி. (௪௮)

சிலபக லங்கு வைகிச் சிவபிரான் விடைபெற் றேகி
நலமலி மகிழ்ச்சி பொங்க நைமிச வனத்தைச் சார்ந்து
குலமுனி வரர்வாழ்ந் தாரிக் குணப்பெரும் புராணங் கேட்போர்
பலருமண் ணாதி யெல்லா வுலகமும் பரவ வாழ்வார். (௪௯)

முன்னிய வீரை மேய முதல்வனார் திருப்பு ராண
மன்னிய கிரகந் தோறு மணிபொனா தியபல் செல்வ
பின்னிய சிறப்பு வாய்ப்ப விடாதமர்ந் திருப்பா ளென்று
மன்னிய மாகா தம்பொ னம்புயத் தமரு மாதே. (௫௰)

வேறு.

காமேவு திருவீரை நகர்வாழ்க வுமையாண்டாள் கருணை வாழ்க
பாமேவு வெண்ணீறுங் கண்மணியு மைந்தெழுத்தும் பரவி வாழ்க
தேமேவு வீரசே கரர்வாழ்க வவரடியார் செறிந்து போற்றப்
பூமேவு மணிமன்று ளினிதெடுத்த குஞ்சிதச்செம பொற்றாள் வாழ்க.

தலமுதலியவிசேடப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௭௰௪.

வீரவனப்புராணம் முற்றிற்று.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT

சிவமயம்.

# அரும்பதவுரை.

## கடவுள்வாழ்த்து.

௧. "அழகு" என்னுந்திருநாமத்துள்ள மூன்றெழுத்துக்களுள் அகரம் இருமொழிக்கும்பொது; ழகரம் தமிழ்ச்சிறப்பெழுத்து; மெய்மையமட்டுங்கொள்க; குகரம் உயிர்மெய்யெழுத்து. பொதுவெழுத்தால், சிறப்பெழுத்தால், புணரெழுத்தாலென்க. வீரவனம்-வீரமரக்காடு. இம்மரப்பெயர் தமிழில் வீரையென வழங்கும்.

௨. பூமேவு காதரன்-பிரமன்; காதரம்-அச்சம். ஓது அரன்-உருத்திரமூர்த்தி. பொற்பு அகத்து ஆர். வேந்து-இந்திரன். அருங்குரைத்து-அருமையையுடையது.

௩. கழுக்கடை-ஒருவகைப்படை; திருவாசகம், கீர்த்தித்திருவகவல், ௧0௯, ௧௧0-ம் அடிகளையும், தசாங்கம் ௭-ம் பாடலையும் பார்க்க. அலைசுவற்று கணைப்பகழி-கடலைவற்றச்செய்த அம்பையுடைய திருமாலாகிய அம்பு. அரசு-இந்திரன்.

௪. அம்மை அடையாமல்-மறுபிறப்பையடையாமல். ஆன்ற கமையம்-நிறைந்த பொறுமையையுடையேம். ஐவர்-ஐந்து இந்திரியங்கள். அமைபுயம்-மூங்கில் தோள். அம் மை குழல்-அழகியமேகம் கூந்தல்; நிரணிறை.

௫. பாய-பரவிய. மங்கலப்பொன்-மாங்கலியம். தேசு-ஒளி. பரஞானம்-பரஞானப்பால்.

௬. நாலிரண்டு-அட்டமூர்த்தம். மனுமுன் ஆறு-மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலை என்னும் ஆறு அத்துவாக்கள். அவ்வதிருக்குமமேனிநோக்கி-அந்த உமாதேவியார் நோக்கி.

௭. இங்கே அடையவென்னுமெச்சம் தன்வினைமுதல்வினையைக்கொண்டுமுடிதலில்லை; உயிர்கள் நடனத்தைக்காணும் பருவமில்லாவாதலின்.

௮. விதி-பிரமன். அரி-திருமால்.

௯. பா மாறு-பரவிய பகை. கோபஅதா வாய்-இந்திரகோபம்போன்றகீழுதட்டையுடைய வாய். சொல்லணங்கு-ஸரஸ்வதி. கோபாநலம்-கோபாக்கினி. சாங்கம்=ஸ்வாங்கம்-தன்னுடைய அங்கம்; என்றது நகத்தை. உபாங்கம்-சூலம்.

௧0. அழகில்லாதஉறுப்புக்களைப்பெற்றும் அழகுவிநாயகரென்று பெயர் பெற்றமையால், 'வித்தகன்' என்றார்; வித்தகன்-திறமையையுடையவன்.

௧௧. ஒருவரும் அன்பு-நீங்குதலரிய அன்பு. ஐக்கவி முற்றுருவகம்.

௧௨. ஐந்தொழில்-பஞ்சகிருத்தியம். ஐந்து மாமுகம்-சத்தியோசாதமுதலிய ஐந்துதிருமுகங்கள். ஐந்தெனும் தடை-பஞ்சபாசத்தடை. ஐந்தெனுநிலை-துரியாதீதநிலை. சிலாதமுனிவருக்கு ஐந்துகுமாரர்களாகச்சனித்தமை பற்றித் திருநந்திதேவரை, 'ஐந்துருவுடையான்' என்றார்.

௧௩. நள்ளுபு-நெருங்கி. செய்வான் பருகி. அடக்கி, பெயர்; சன்னுமுனிவர்; சிவபெருமானுமாம். ஆற்றையடக்கியவரினும் கடலையடக்கியவர் சிறந்தவரென்றபடி.

௧௪. அந்தப்பேச்சு உரவு உறவுந்தக்கலியாணமென்னும் சொல்லின் வலியையடைய. நல்லூர் உற.

௧௫. படைகளெல்லாம்-சூலமுதலிய எல்லாவற்றையும். வெல்லரும்

பகை-திரிபுராதிகள். உறுப்பால்-நகை, நெற்றிக்கண், கைநகம், காற்பெருவிரல், நகநுதி, குதிகால்முதலியவற்றால். வித்தகன்-சிவபெருமான். சூலம்-தாங்கானைமாடத்திற்பெற்றசூலவிலச்சினை. தெவ்வை - சைனர்முதலியபகைகளை. தெவ்வை வென்ற.

௧௬. நீர் அவ்வாறு நில்லாது. அரும்பு-அரும்புதல். ஒராறு-காவிரி, நீர்நிற்ச.

௧௮. சிவபூசைசெய்வோர் சண்டேசுவரபூசைசெய்யாவிடிற் பலன்பெறார். மாழாந்து - மயங்கி.

௧௯. கண்ணுக - இடமாக.

௨௧. கரவு-கள்ளம். துறைசை - திருவாவடுதுறை. குரவு-ஆசிரியத் தன்மை.

௨௨. ஐ அகம் - அழகிய உள்ளம்.

## அவையடக்கம்.

௨. ஒரு வனசரன்-வீரனென்னும் வேடன். உட்டுளையிரும்பு - உள்ளே துளையையுடையதான இருப்புப்பாரை; திருமுடித்தழும்பேற்றதை, இப் புராணத்தில் வீரசேகரர் திருமுடித் தழும்புற்றபடலத்திற் காண்க.

௫. கண்டன் - ஒருசோழன்; இவனுக்கு அருள் வழங்கியகதையை இப் புராணத்திற் சோழன் திருப்பணிப்படலத்திற் காண்க. புளிஞன் - வேடன்.

௭. வேறொன்றுசெய்கை - அந்நியதாகர்த்திருத்துவம். பாறு - பருந்து. வீரை - வீரமரம். வீரமரத்தைப் பலாவாகச் செய்தகதையை இந்நூலில் வீரை பலாவாகிய படலத்திற் காண்க.

## திருநாட்டுப்படலம்.

௧. உரவு-வலி. புரவு-காத்தல்.

௨. உகல் - கெடுதல். ஒருத்தி - உமாதேவியார்.

௩. அன்றுதீர் - பகைமைநீங்கிய. தெய்வதப்பிடி - தெய்வயானை.

௪. வெல்லுதற்குத் துணிந்தேறுகின்ற. ஒருவர் - மூர்த்திநாயனார்; திருத்தொண்டத்தொகை, "மும்மையாலுலகாண்ட மூர்த்திக்குமடியேன்"

௫. விராவுதல் - கலத்தல். நதி - வையை.

௬. ஆகரம் - உறைவிடம். விளையுள் - விளைவு.

௭. நளி - பெருமை. நால்வாய் அதள் - யானைத்தோல்.

௮. வீரைநீர் - கடல்நீர். துகிர்க்கொடி - பவளக்கொடி. ககுபம் - திசை. தடித்து - மின்னல்.

௯. பாணி - நீர். வற்றுமா - வற்றுமாறு. எற்று - எத்தன்மையது; இகழ்ச்சி.

௧௦. தமிழ்வரை - பொதியமலை. மாதவமெனவும் ஆதவமெனவும் பிரித்து, பெரியதவம், வெயிலெனப் பொருள்கொள்க.

௧௧. சகத்திரதாரை - அபிடேகஞ்செய்யும் ஒருவகைக் கருவி.

௧௩. கடலுக்குப் பாண்டியனும் மாணிக்கவாசகருக்கு மேகமும் உவமைகள்.

௧௪. இதில் ஒவ்வோரடியிலும் இறுதிச்சீர் முரண்.

௧௫. அயர்த்திடாது - மறவாமல்.

௧௬. சந்தனசலம் - பொதியமலை. காணி - உரிமை. செய்கின்று - செய்யாநின்றது.

௧௮. ஏனல்மா - தினைமா.

௧௯. குருகு - வளையல்.

௨௦. அம் மை மாரி - அழகிய கறுத்த மேகம்.

௨௧. திமில் - வேங்கைமரம்.

௨௨. பைத்தால் - விரித்தால். தோன்றி - செங்காந்தட்பூ.

௨௩. குளவன் - முருகக்கடவுள்; "வளைந்துநின் றுடற்றும்" என்னும் கல்லாடச்செய்யுள் : "குளவன் வீற்றிருந்த வளர்புகழ்க் குன்றமும்" என்பதனாலுணர்க. தேத்தடை - உள.

௨௪. ஏரம்பன் - விநாயகர். கடாம்பொழி குன்றம் - யானைகள்.

உரு. உறுகை ஆகையால்-உறுகை மிகுதலால்.

உஎ. குடம் - பசு.

உஅ. ஒருபிணையை-திருமகளின் கூறுகிய பெண்மானை. ஒருதையல் - வள்ளிநாயகியார். தெவ்வி - கொண்டு. நாட்டினுளென்பதற்குத் திருமாலென்பது தோன்ற எழுவாய். திருமாலின் கூறுகிய சிவமுனிவர் வரலாறு இங்கே அறியற்பாலது. குரங்கம் - மான். மாலை - ஆசை.

உகூ. மினி - மின்னி.

௩௦. வளையாழி - சங்கமும் சக்கரமும், வளையலும் மோதிரமும். மான்மகள் - மாலாகிய மகள்.

௩க. மதலை - கொன்றை. பூவை - காயாமரம்.

௩௩. பிருந்தையின் கூறுகிய திருத்துழாயினுலேயே திருமாலுக்குத் துன்பம் நீங்குகின்றதென்றபடி.

௩௪. மேகம் எப்பொழுதும் நாம் கரியநிறத்தை அடைந்திருக்கும்படி திருமால் செய்வாரென்றுநினைத்து.

௩ரு. எண் - எள்ளு. சொன்னல்- சோளம். கல் - மலை.

௩௬. தருவும் நிதியமும்.

௩எ. பாம்புநதி - சர்ப்பநதி. மதுநதி - தேனறு.

௩அ. செறு-வயல். சிலைத்து-முழங்கி. குலை - கரை. நதிகளாற்புனல் பெறுவனவும், நதிகளால்நிரம்பிய ஏரிகளாற் புனல்பெறுவனவும், மழையால்நிரம்பிய ஏரிகளாற் புனல் பெறுவனவுமென வயல்கள் மூவகைப்படும்.

௩கூ. ஓ-மதகுநீர்தாங்கும்பலகை. உராய்-பெயர்ந்து. பா - பரப்பு. தா - வலி. பியல் - பிடர்.

௪௦. நாஞ்சில் - கலப்பை. புற்பந்தம் - புற்களாகிய தடை.

௪க. அழுகத் தழையிவொரும். வழுஆரும் - குற்றம்நிரம்பிய. அவல் - பள்ளம். சொல்முளை - நெல்முளை.

௪உ. கிழக்குமடை - கீழ்மடை. சிறைத்து - காவல்செய்து. மெத்திய- நிரப்பிய. மேக்கு - மேல். பொத்திய- மிகுத்த.

௪௩. நாறு - நாற்று. குணில் - குறுந்தடி. மண்ணி - கழுவி.

௪௪. பணைக்கும் - பருக்கும். கட்டம் - கஷ்டம்.

௪ரு. களமரெலாம் காட்ட. கேகயம் - மயில். ஆற்றுக்காலாட்டியர் - கடைசியர்.

௪௬. வீ - மலர்.

௪எ. ஐய-வியப்பையுடைய. உமாதேவியார்திருக்கரத்திற் குவளைமலர் உள்ளது.

௪அ. தளை - வயல். இளை - தலைக்காவல்.

௪கூ. குயம் - அரிவாள். முழுத்த- பூரணமாகிய.

ரு௦. பலாலம் - வைக்கோல்.

ருக. இறை - அரசன். தென்புலத்தார் - பிதிரர். திணை - நிலம்.

ருஉ. அரிசனம் - மஞ்சள். துடவை - தோட்டம்.

ரு௩. சதி - தாளவொற்று.

ரு௪. சுறக்கோடு - சுறுமீனின் கொம்பு; இக்கொம்பை நட்டு அதை வருணனுகப்பாவித்துப்பூசித்தல் நெய்தனிலமாக்கள் தொழில். புன்னுகக் கோடு-புன்னைமரக்கிளை. முகைக்கும் - தோன்றும்.

ருரு. தாலமது - பனங்கள். வளைக்கோலமணி - சங்கிற்றோன்றிய அழகிய முத்து. அறிவு மயக்கையடையின்.

ரு௬. கலவர் - மரக்கலத்தை யுடையவர்; பரதவர். மயிலை - மீன். ஆகு ஊழின் - ஆகுமுழியினுல். பல ஆற்றினும் - பலவழியாலும்.

ருஎ. இச்செய்யுள் வேற்றுப்பொருள் வைப்பணி.

ருஅ. அப்பு - நீர். கலர் - மரக்கலத்தையுடையார்; பரதவர். காஞ்சனம் - பொன்.

ருகூ. கருங்கொடி - காக்கை. நெய்தனிலம்போர்செய்தற்குரியஇடமென்பது பொருணூற்றுணிபு.

௬௦. உரவு - வலி.

௬க. குரவு-குராமலர். பாடலம்- பாதிரிமலர். வாகை-வெற்றிமாலை. கன்

ணி - துர்க்கை. பரல்முரம்பு - பருக்கைக் கற்களாலாகிய மேடு.

௬௨. ஆமலகம் - நெல்லி. விழுத்து - விழச்செய்து.

௬௩. அம் சில் மலர் - அழகிய சிலவாகிய பூக்கள். நடவை - வழி. தூதுணம்புறா பருக்கைக்கல்லை உணவாக அருந்தும்.

௬௪. பாண்டியனுக்குரிய மாலை வேம்பு.

௬௫. பொரி, மங்கலப்பொருள்களுளொன்று. செழுவிய - செழுமையுள்ள.

௬௬. கறிக்கொடி - மிளகுகொடி. வனப்பாடி - முல்லைநிலத்தூர். தொறுவியர் - இடைச்சியர். தளவு - முல்லை. குறிச்சி - குறிஞ்சி நிலத்தூர். கெழும - பொருந்த.

௬௭. பண்ணை - மருதநிலம். தொண்டை - கொவ்வை.

௬௮. வயலை - பசலைக்கொடி. காஞ்சி - ஒருவகை மரம். புணரி - கடல். எழூஉ - எழுந்து.

௬௯. கழைச்சாறு - கரும்பின் சாறு. களம் - கழுத்து. மறைச்சிலம்பு - வேதாசலம்; திருக்கழுக்குன்றம்.

## திருநகரப்படலம்.

௧. உள்ளிய - கருத.

௨. தனு - வில், திருமேனி.

௩. அறக்கடை - பாவம். மூவர் - மும்மூர்த்திகள்.

௫. நீர் - ஜலம், குணம். மணி - நவமணி, அழகு. நாவாய் - சப்பல், நாவையுடைய வாய். ஒரைமாதவர் வளைமுழக்கம் - விளையாட்டையுடைய மகளிருடைய வளையலொலி, உணருகின்ற அழகையுடைய முனிவர்கள் வலம்வருமொலி; வளை - சங்குமாம். வீரை - கடல்.

௬. அவன் மருமகள் - ஸரஸ்வதிதேவி. வீரஞ்சால்பெருமகள் - துர்க்கா. தேவி. பிறக்கும் - விளங்கச் செய்யும்.

௮. வீரைக்கு அளகையென்று ஒரு திருநாமமுண்டு. இவரும் - பரக்கும். கவலருமளி - கவலுதலில்லாத வண்டுகள். இக்கவி உருவக அணி.

௯. போற்றப் பொழில் எய்திவாழ்தரும்.

௧௧. பளகு - குற்றம். அத்தலம் - விண்ணுலகம். வேர் - வேர்வை.

௧௨. தாமரையும் அன்னப்பறவையும். போற்றுவார்தலை - போற்றுவாரிடத்து. அணையும் ஊர்தியுமாக. இத்தலத்தை வழிபடுவோர்கள் பிரமவிஷ்ணுக்களாவார்க ளென்றபடி.

௧௩. ஐ அலர் - அழகுவிரியப் பெற்ற. குடவளை - குடம்போலுஞ் சங்கு.

௧௪. இணர் - பூங்கொத்து. அயில் புணர்அளி - வேற்படையைத் தாங்கிய (முருகக்கடவுளாகிய) வண்டு.

௧௫. போது, எழுவாய். பறி - பொன். அசிப்ப - அவமதிச் சிரிப்பைச் செய்வன.

௧௬. மதுக்குடம் - மதுவையுடைய குப்பி; பெரும்பாணாற்றுப்படை, ௩௩௨. வேட்பர் - விரும்புவார்.

௧௭. இலாங்கலி - தென்னை. தடவு - பெரிய. தே - தெய்வம்.

௧௮. சேர்வன, எழுவாய். மின்னிய - விளங்க.

௧௯. கந்திகள் - பாக்குமரங்கள். நந்திய - மிக்க. பாக்குமரம் முத்துத் தோன்றுமிடங்களில் ஒன்று. நாகவல்லி - வெற்றிலைக்கொடி.

௨௦. மிறை - நடுக்கம்.

௨௧. மிக அழகுடைய கைவிலங்கல் - அழகுவிநாயகர். அமர்தர - விரும்ப. புகர்படு முகவரை - யானை.

௨௨. சினவிய - கோபித்த. தண்டம் - யானை செல்லும்வழி. கறையடி - யானை; எழுவாய். அன - அந்த.

௨௩. மறை வாசியான் - வேதக் குதிரையையுடைய சிவபெருமான். வாசி - விசேடம்.

௨௪. நம் தலையுரு - நம்முடைய தலையைப்போன்ற உருவத்தை. நலம் நந்தலை அமைந்து - இன்பம் பெருகுதலைப் பெற்று. முன் நாள் - முதல்

நக்ஷத்திரம்; அச்சுவினி. நந்து அலை புனல்-சங்கம் அலைகின்ற நீரையுடைய கங்கையை. நபம் - ஆகாயம். நந்தலை உறு - கேட்டைஅடையாத. மதர்ப்பு - களிப்பு.

௨௫. வலவன் - திருமால். நிலத்திற்கும் தேர்க்கும் வையமென்று பெயருண்டு. அலகு - அளவு. கால் - உருளை.

௨௬. பகையுடல் - அசுரன்மேதையாலாகிய பூமி. இறை - இந்திரன்.

௨௭. ஏக் கானம் - அம்பின் தொகுதி.

௨௮. பூண் நிறம் - ஆபரணத்தையுடைய மார்பை.

௨௯. வாரி - யானைக்கூடம். நாட்பரி - அச்சுவினி. தேர்க் கிரிய இல் - தேர்க்கொட்டில். மரிய - மருவிய.

௩௦. புரிதல் - விரும்புதல்.

௩௧. மலைகள், எழுவாய். குழீஇயென - கூடினாற்போல.

௩௪. வாள் - ஒளி. வீடல் ஒழிய - அழியாத.

௩௫. அரிப்பர் - அரிப்புக்காரர்.

௩௬. ஓதி - கூந்தல். இதம் சாதியாது - இதங்கொடாது.

௩௮. நாறுதலைக்கொண்ட. சாறு - திருவிழா.

௩௯. கலம் - பாத்திரங்கள்.

௪௦. மேவிய எண்ணில் - அடைய விரும்பினால்.

௪௨. பாழி - பெருமை. வீழி - விழுதிப்பழம். வாழி - அசைநிலை.

௪௩. விழைய - ஒப்ப.

௪௪. சுரையிரும்பு - உட்டுளையையுடைய இருப்புப் பாரைக் கோல். தகையுமோ - ஒக்குமோ.

௪௫. அஞர் - துன்பம்.

௪௬. திவவு - யாழின் வார்க்கட்டு.

௪௭. கமை - பொறுமை. அமை - மூங்கில்.

௪௮. கதுவல் - பற்றுதல். மது - திருக்குறள். விது - சந்திரன்.

௪௯. பொற்ற - பொலிவுபெற்ற. பரத்தையர்புகழ், பசித்துயரைத்தீர்ப்பார்புகழை ஒக்குமென்றபடி.

௫௦. தனமும் முத்தமும் கலைகள்.

௫௧. மூவர்கோல் - அந்தணர் முதலிய மூவர்க்கும் முறையேயுரிய பலாசக்கோலும் செங்கோலும் துலாக்கோலுமாகிய இம்மூன்றும். முட்கோல் - தாற்றுக்கோல்.

௫௩. கதிர் - சூரியனை. போரில் மாண்டோர் சூரியனைத்துளைத்து வீரசுவர்க்கம் புகுவாரென்றல் மரபு. மனு - மனுஸ்மிருதியென்னும் நூல்.

௫௪. அங்கம் - வேதாங்கங்கள். குழகன் - சிவபெருமான். மூவர் - அரசர்முதலியமூவர்.

௫௫. பூதி-திருநீறு. இருதிறம் - ஆன்மார்த்தம், பரார்த்தம்.

௫௬. பன்னிருசூத்திரம்-சிவஞானபோதத்துள்ள பன்னிருசூத்திரங்கள்.

௫௭. கருத்துமுன் ஐந்து-கருத்துரை, பதவுரை, உதாரணம், வினா, விடை. விருத்தம் - விருத்தச்செய்யுள், விரோதம். கழகம் - கல்விச்சாலை.

௫௮. முல்லையரும்பு. ஆடகம் - பொன். குய் - தாளிப்பு. கருனை - பொரிக்கறி. பாகு - குழம்பு. மிதவை - சோறு. கருப்பு - கரும்பு.

௫௯. துறுத்தி-நெருங்கச்செய்து. இலிகுசப்பழம்-எலுமிச்சம்பழம். குளம் அளாம் நீர் - பானகம்.

௬௧. வீரை - கடல். வண்ணம் குலவு அந்திநேர்பவன். கோயில்கதிரை மானும்.

௬௨. நாமகள் முதலிய ஐவரும் சக்தியின் கூறாதலின் இங்ஙனம் கூறினார்; "ஈறிலாதவளொருத்தியே யைந்தொழிலியற்ற" என்பது திருவிளையாடல்.

௬௩. திருமதில், மேருமலையையொக்கும்.

௬௪. அதை - அம்மேருவை. அடைகலோர் நான்கு - மந்தரம், கந்தமாதனம், விபுலம், சுபார்சுவம் என்பன; இவ்வை நான்குகோபுரங்களுக்கு முவமை.

௬௫. சாகை - கிளை. சம்பு-நாவல் மரம், சிவபெருமான். நம்புதல் - விரும்

# அரும்பதவுரை.

[illegible]

௨௦. [illegible]ப்பு - முழக்கம்.

௨௧. நால்வர் - சைவசமயாசாரியார். மற்றையோர் [illegible]றைபா - திருவிசைப்பா முதலியன.

௨[illegible]. இரு முதுகுரவர் - சிவபெருமானும் உமாதேவியாரும். மானவா[illegible]

௨[illegible]. பாதம[illegible]பதைப் பாற்றி.

## [illegible]படலம்.

௧. [illegible]ரும் பிழி [illegible]

௩. [illegible] [illegible]

[illegible]

௬. மெத்[illegible] - [illegible] இந்த்ரிய - ஐந்து [illegible]யுடைய.

௯. ஊறு - இடையூறு. [illegible]யா - முனிவர். வண்டுகளுக்கு அசுரர் உவமம்.

௭. ஒரா - வினையெச்சமுற்று.

௮. அரையன் - இந்திரன்.

௯. சீர்க்கும் - சிறப்புறும்.

௧௧. விபினம் - காடு. தனை - அளவு.

௧௨. காலம் - முடிவுகாலம். நாயனார் - சிவபெருமான்.

௧௪. உம்பல் - யானை. அடியிற்சூட்டும் - அடியிற்சூட்டுமவனே.

௧௮. அடி[illegible]த்தவன் - உபமன்னியுமுனிவர்.

௧௯. திரணதூமாக்கினி, தொல்காப்பிய நூலாசிரியராகலின் அவரை 'எங்களுவலன்' என்றார்.

௨௦. [illegible]. உபரிஜோப்பொழி[illegible]ச்செய்தல்-சருவசங்காரம் செய்தல். [illegible]ட்டம் - மகாதாண்டவம்.

௨௧. முந்தவந்தான்.

௨௩. அம்[illegible] - அழுகு கெடாத.

௨௮. மூன்[illegible] - மூர்த்தி, தலம், தீர்த்தம்.

௩௦. ஆறுறு - முப்பத்தாறு தத்துவம். [illegible]கலவிய - கலந்த.

௩௧. அம்மான் - சிவபெருமான்.

௩௩. ஒருவேந்தன் - காங்கேயன். முழுமுதல்அமர்தேம் - கண்டதேவி. பொன்மாரிபெய்தவரலாற்றைக்கண்டதேவிபுராணத்துள்ள பொன்மாரிபொழிந்த படலத்தாலுணர்க.

௩௪. குருந்துமேயபுலம் - திருப்பெருந்துறை. கொற்றவாளிசாசேருந்தலம் - கோயிலூர்.

௩௫. பொன்னுலாயதேயம் - சுவர்க்கம்.

௩௭. வாதராயணன் - வியாஸமுனிவர்.

## வீரசேகரர் திருமுடித்தழும்புற்றபடலம்.

௧. சிற்றருச்சுனவனம் - கண்டதேவி. சமிவனம் - கோயிலூர்; சமி - வன்னிமரம். சுவணகற்பகவனம் - பொன்மயமாகிய கற்பகச்சோலை. வீரவனமென்பதற்குவீரத்தையுடையவனமென்னும் மற்றொரு பொருள் இங்கே கொள்ளற்பாலது.

௨. சம்பீரம்-எலுமிச்சை. அதவு - அத்தி. கண்டில் - கண்டில்வெண்ணெய். கோவிதாரம்-காட்டத்தி. யா - ஒருமரம். விண்டு - மூங்கில். பச்சிலை- பச்சிலைக்கொடி. பூவத்தி - ஒருவகைமரம். ஞாழல் - புலிநகக்கொன்றை. பிண்டி - அசோகு.

௩. கர்ச்சூரம் - பேரீந்து. அதிங்கம் - அதிமதுரம். ஏழிலைப்பாலை - ஒவ்வொருகாம்பிலும் எவ்வேழிலைகளையுடைய பாலைமரம். வடமொழியில் 'ஸப்தபர்ணம்' என இதன் பெயர்வழங்கும். வழை - சுரபுன்னை. அருச்சுனம் - மருது. திமிசு - வேங்கை. வெள்ளிலோத்தம் - வெள்ளிலோத்திரம். கரவீரம் - அலரி. தமாலம் - பச்சிலைமரம். வெண்ணெய்- ஒருவகை

மரம். சே-சேமம். மாதவி-குருக்கத்தி.

௪. வேடர்பதி - வீரன்.

௫. குரவு - நறுமணம்.

௬. தகரிருமருப்பு - செம்மறியாட்டுக் கடாவின் கொம்பு. சமழ்த்தல் - நாணுதல். முகத்துத் திருகுரோமம் - மீசை. சிகழிகைமுடி - மயிர்முடி. வளைநிகர் எய்தா. நிறம் - மார்பு.

௭. ஞமலி - நாய். சுரையிரும் பறைந்தகழி - அகழ்தற்குரிய கருவி.

௮. வன்மீகம் - புற்று. இலதை - கொடி.

௯. வடி - தேன்.

௧௦. ஊகம் - ஒருவகை அனுமானம். முறி - தளிர்.

௧௧. நெய்த்தோர் - இரத்தம்.

௧௨. பன்முறம் - பலமுறை.

௧௭. முதலைக்கண்டாள்.

௧௮. அரக்குநீர் - செந்நீர்.

௧௯. கடித்த - கோபித்த. ஒரு சேய் - மார்க்கண்டனை. இவர்ந்து - விரும்பி.

௨௧. கொம்மை - வட்டம்.

௨௨. காறல் - காலுதல்.

௨௩. பொன் - திருமகள். களத்துப்பொன் - மாங்கலியம்.

௨௪. என்தவன் - எனதுகணவன்.

௨௯. புண்ணியர் அசித்திடுவார். நோன்றிருந்தார் - பொறுத்திருந்தார்.

௩௦. கனம் - மேகம்.

௩௧. விரை - நறுமணம்.

௩௨. சிலாக்கியம் - புகழத்தக்கது. கரு அனர் - பிறவித்துன்பம். புத்திபோகம்.

௩௩. பூசை - பூனை. அரிமருத்தனபாண்டியரால் பிரம்படித்தழும்பும், அருச்சுனரால் வில்லடித்தழும்பும், சாக்கியநாயனரால் கல்லடித்தழும்பும், கண்ணப்பநாயனரால் செருப்படித்தழும்பும் சிவபெருமானுக்கு உளவாயின. வாட்போக்கியென்னும் ஸ்தலத்தில் ஆரியராசனால் வாள்வெட்டுத் தழும்பும், தென்திருமுல்லைவாயிலில் ஒருசோழராசனுடைய குதிரைக்காலாற் குளம்பின்தழும்பும் சிவபெருமான் திருமுடியில் உளவாயினவென்று அவ்வத்தலபுராணங்கூறும்; அத்தழும்புகள் இன்றும் காணப்படும். சிவபெருமான் திருமேனியில் பூனைவாய்த் தழும்புள்ளதலம் குன்றமருதூரொன்பது; இஃது, இப்பொழுது வெண்ணெயீச்சுரர்கோயிலென வழங்குகின்றது. இவ்வூர் மாயூரத்துக்கு வடகிழக்கில் மூன்றுநாழிகைவழித் தூரத்திலுள்ளது.

௩௪. சிவபெருமான் காமதேனுவின் கன்றினுடைய குளம்படியின் சுவட்டைத் தாங்கிய தலம் - திருப்பேரூர். இவ்வரலாற்றைத் திருப்பேரூர்ப் புராணத்துக் குழகன் குளப்புச் சுவடுற்ற படலத்தாலுணர்க.

௩௬. மனை - வீடு, மனைவி.

## சோழன் திருப்பணிப்படலம்.

௧. இடவிய - விசாலித்த. கீளா - கிழித்து. படர் துமித்து - துன்பத்தைக் கெடுத்து.

௨. நிதி - பொன்.

௪. பித்திகை - சுவர். புகார் - காவிரிப்பூம்பட்டினம்.

௫. துழாவுதல்-தடவுதல். கோண்-மாறுபாடு; ஐ அசை. தொண்டை - யானைத் துதிக்கை.

௬. சோழர்களுக்கு முடிசூட்டுமிடம் காவிரிப்பூம்பட்டின முதலிய ஐந்து நகரங்களென்பது கன்ன பரம்பரை; பெரியபுராணம், சண்டேசுவரநாயனார் புராணத்தில் "சென்னியபயன்" என்னும் அ-ம்செய்யுளைப் பார்க்க.

௮. நல்லார்க்குச் காமனன்னன். கயில் - பூட்டுவாய்.

௯. தடறு - உறை. ஆர் - ஆத்தி.

௧௧. மாமை - பேரழகு.

௧௨. சாம்ப - வாட.

௧௩. மணிமுன்மூன்று - மணி, மந்திரம், ஔடதம்.

௧௪. தரணிகள் - வைத்தியர்கள். அரணிய - காவலாகவுள்ள. கழுவாய் - பிராயச்சித்தம்.

௧௭. மன்னும் ஒவும் அசைநிலை. வேணி - சடை.

௧௯. கன்றலிப் பிணியோ - கன்று தலைச் செய்யும் இந்தநோய்மட்டுமோ.

௨0. ஆத்தன் - சிவபெருமான். வெறுத்த - மிக்க.

௨௧. கொங்கு - நறுமணம். பருப்பதம் - மல்லிகார்ச்சுனம். வேலுடையான் - அரசன்.

௨௨. இண்டை - ஒருவகைமாலை. மேன்மையைக் கொண்டு அழகார்ந்த. கச்சிஅனேகதங்காவதமென்பது ஒருதலம். கண்டு ஐயனேயென்று சிவபெருமானைத் துதிக்க.

௨௩. ஊறல் - தக்கோலம். விற்கோலம் - கூவம்.

௨௪. வலிதாயம் - பாடி. திருமயிலை - மயிலாப்பூர்.

௨௫. தூங்கானைமாடம் - பெண்ணாகடம். முதுகுன்று - விருத்தாசலம்.

௨௬. எருக்கத்தம்புலியூர் - இராசேந்திரபட்டணம்.

௨௮. நணா-பவானிகூடல். கொடிமாடச்செங்குன்றூர்-திருச்செங்கோடு.

௨௯. கோயில் - சிதம்பரம். நெல்வாயில் - சிவபுரி. பெருமணம் - ஆச்சாபுரம். சாய்க்காடு - சாயாவனம். ஞாயில் - மதில்.

௩0. புள்ளிருக்குவேளூர் - வைத்தீசுவரன்கோயில்.

௩௧. அகரமுதல்- சிவபெருமான்.

௩௨. கடம்பூர் - மேலைக்கடம்பூர்.

௩௩. வாட்போக்கி - இரத்தினகிரி. கடம்பந்துறை - கடம்பர்கோயில். மூக்கீச்சரம் - உறையூர்.

௩௬. ஆறை வடதளி - வள்ளலார்கோயில். குடமூக்கு - கும்பகோணம்.

௩௭. நல்லம் - கோனேரிராஜபுரம். துருத்தி - குற்றாலம்.

௪0. திருக்கலயநல்லூர் - சாக்கோட்டை.

௪௧. தரு - கற்பகதரு.

௪௩. இரும்பூளை - ஆலங்குடி. அரதைப்பெரும்பாழி - அரித்துவாரமங்கலம். பரிதிநியமம் - பரிதியப்பர் கோயில்.

௪௪. தேங்கூர் - திருத்தெங்கூர்.

௪௬. மாழாந்து - மயங்கி. கூய் - அழைத்து.

௪௮. கொடுங்குன்றம் - பிரான்மலை. ஏல ஆய்குழல் - மயிர்ச்சாந்தையணிந்த ஆராய்ந்த கூந்தலையுடைய உமாதேவியார். கானப்பேர் - காளையார்கோயில். நாற்சீர்-அறமுதலிய நான்கு.

௪௯. படமாடம் - கூடாரம். வளங்கள் - நால்வகைச் சேனைமுதலிய செல்வங்கள்; இப்படலம், ௬௨.

௫௩. சினகரம் - கோயில்.

௫௪. உயிர் நிலையுறாது.

௫௬. மண்ணில் நல்லாரிறைஞ்சும். கண்ணல் - கருதல்.

௬0. தென்னவனாகி - சுந்தரபாண்டியராகி. பன்னம் - இலை. கோசப்படிவம் - சிவலிங்கத் திருவுருவம்.

௬௧. வாழ்வு அகண்டமும் - அகண்ட வாழ்வும். புல்லகண்டம் - சருக்கரை.

௬௨. நெடி - சிள்வீடு.

௬௫. யானை, ஐ-சாரியை. ஆனை-ஆந்திமாலையை. கானை-கருநிறத்தை.

௬௮. ஆடி - கண்ணாடி.

௭0. முன்னிறவன் - முன்னிறத்தையுடையவன்.

௭௧. சம்பராரி-மன்மதன். இறும்பூது - ஆச்சரியம்.

௭௨. அடை - இலை. நோக்கும் - நோக்குவான். குடந்தம்பட்டு - வழிபட்டு; திருமுருகாற்றுப்படை, ௨௨.

௭௪. மிறை - நடுக்கம்.

௭௫. வியம் - ஏவல். புகழ்கோ - புகழ்வேனோ.

௭௬. சிவப்பும் கறுப்பும் வெகுளிப் பொருளன.

௭௭. இவர்தல் - விரும்புதல். முகரோமம்-மீசை. நத்தம் கவர் சிகழிகை - இருளைத்தன்பாற் கவர்ந்த மயிர்முடி. வீரனைவியந்தபடி.

௭௮. கட்டம்-கஷ்டம். கழுவாய்-பிராயச்சித்தம்.

௭௯. மரை - தாமரை.

௮௧. செல்லல் - துன்பம். பேரின்பம் புல்லலுற்றது.

௮௨. ஆலயமில்லாதிருந்தனன்.

௮௩. 'புத்தி' என்பது தாழ்ந்தோர் உயர்ந்தோர்பாற்கூறும் உடன்பாட்டுக் குறிப்புச்சொல்.

௮௪. நவியம் - கோடாலி.

௮௫. தளிகொடி - பின்னிய கொடி.

௮௭. நிலையியற் பொருள் - அசரம். இயங்கியற்பொருள் - சரம். கடல் குடித்தான் - அகத்தியர்.

௮௮. காணுமின் - செய்மின். தபதியர் - ஸ்தபதியர்.

௮௯. குற்றி - கட்டை. இட்டிகை - செங்கல். நூறு - சுண்ணம்பு. நிறை - பானை.

௯௦. சிற்ப - தூண்முதலியன. கிடப்ப - பாவுகல்முதலியன.

௯௧. கருக்கிரகம்-கருப்பக்கிரகம்.

௯௨. அழகும்பல் - அழகுவிநாயகர். கோட்டம் - கோயில். மதிமுடிப் பெருமான் - சந்திரசேகரர். பாழி - கோயில்.

௯௩. அடுக்குமண்டபம் - ஒன்றன்மேலொன்றாகக் கட்டியமண்டபம்.

௯௬. சோபானமண்டபம் - படியும் மண்டபமும்.

௯௭. ஆர்ங்கண்ணியான் - ஆத்திமாலையையுடைய சோழன்.

௧௦௦. நித்தியமுதல் மூன்று - நித்தியம், நைமித்திகம், விசேடமென்பன. சிவாகமம் - வேதாகமம்.

## சோழன் மகப்பெற்று முத்தியடைந்தபடலம்.

௧. தடி - இறைச்சி.

௨. ஆதிரை நாளுவந்து. மறைக்குதிரை - வேதக்குதிரை. சித்திரை விழா - சைத்திரோத்ஸவம்.

௩. தெண்ணீரை நல்க. ஆடிய - வென்ற.

௪. துகிர் - பவழம்.

௫. அருளை அன்பின் குழவியென்பர்; "அருளென்னு மன்பீன் குழவி" என்பது திருக்குறள்; பெரிய புராணம், அமர்நீதிநாயனார் புராணத்தில், "முட்டிலன்பர் தமன்பிடுந் தட்டுக்குமுதல்வர், மட்டுநின்றதட்டருளால் தாழ்வுறும் வழக்கால்" என்னும் ௩௫-ம் செய்யுளைப்பார்க்க. முன்புரைத்தது, அன்பு. அரசன் அன்பு வேண்டினான்.

௭. ஆறும் வேற்றுமைத் தொகை, ஏழாம்வேற்றுமையுருபும்பயனுமுடன்றொக்க தொகை, பண்புத் தொகையெனக் குறித்தது, 'மெய்ப்பிணி' என்னுந்தொடரை; முறையே மெய்யினது பிணி, மெய்யின்கணுள்ளபிணி, மெய்யாகிய பிணியென விரிக்க.

௮. மூலமலம் - ஆணவமலம். அறிவின் வெண்மை - அறிவின்மை.

௯. வலர் - வல்லமையையுடையோர்.

௧௦. ஏய்த்தி - பொருந்தச் செய்வாய்.

௧௧. எழ்விடையென்றது நக்கினசித்தென்னுமரசனாற் கன்னியாசுற்கமாக நியமித்திருந்த எழேற்றினை. ஆக்கப்பெண் - திருமகள். முகிலை மேனிக்கொப்பாகவுடைய முகிலென்க. மேகவாகன கற்பத்தில் திருமால் சிவபிரானை மேகவடிவங்கொண்டு சுமந்து நின்றாரென்னும் புராணகதை ஈண்டு அறியற்பாலது; "கருமுகிலாய்ச் சுமப்பவனே" என்று இந்நூலாசிரியர் வாட்போக்கிக் கலம்பகத்துக் கூறியிருத்தல் காண்க.

௧௨. திருமகளின் பேரழகை நோக்குங் கண்ணென்றது, திருமாலின் கண்ணை. பமரம் - வண்டு. வேதங்கள் நாறும் பரிகலமென்றது, பிரமகபாலத்தை. சிவபெருமான் திருமாலின் கூறாகிய மச்சத்தின் கண்ணிணையும்பை மோதிரமாக அணிந்தாரென்பதும், அவரைத் தம்முடைய திருமேனியின் ஒருபாகத்திலுடையாரென்பதும், பிரமகபாலத்தைத் திருக்கரத்திற் றரித்தனரென்பதும் புராணகதைகள்.

௧௩. கலை - நூல்கள். மாசு இரித்தாய். வீரை அங்குரித்தாய் - வீரை

மரத்தடியில் சுயம்புவாக முளைத்த ருளியவரோ.

கச. முளிதவிர்-உலர்தல் நீங்கிய.

கரு. குடந்தம் உற்று-வழிபட்டு.

கசு. குருகு - வளையல்.

கஅ. பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியென்னும் பஞ்ச சத்திகளாகி. தொழிலைந்து - படைப்பாதி ஐந்து.

உஉ. தன்னம் - அற்பம்.

உ௩. கோழி - உறையூர். கண்டு - கற்கண்டு. அல் - இருள்; கண்டுநேர் மொழி; அல் நேர் கூந்தல். கண்டல் - தாழை. தாழம்பூ சிவபெருமானால் வெறுக்கப்பட்டது.

உச. முத்து இற - முத்துக் கெடும் வண்ணம். முருக்கிதழ் முருக்கும்- முள்ளு முருங்கைப் பூவின் இதழைக் கெடுக்கும். நத்து இற - சங்கம்கெட.

உரு. மொய் சிவகங்கை - வினைத்தொகை. அருகு அணைதர-அருகேவர. பிருகுவின் வாரம் - வெள்ளிக்கிழமை.

உசு. மாடம் - உழுந்து.

உஎ. இன்னணம் - இங்ஙனம்.

உஅ. திங்கள் - மாதம். மணி - முத்து.

உகூ. தருவினும் - கற்பக தருவைக் காட்டிலும். சாதகாதி - சாதகன் முதலியவற்றை.

௩o. செம்பொன் அன்ன - பிருகஸ்பதியை ஒத்த.

௩க. விதிர்விதிர்ப்பு - நடுநடுக்கம்.

௩௩. மேடத்திங்கள் - சித்திரை மாதத்தில்.

௩ச. ஏணை-வலியை. புறவிடை- பிரியாவிடை.

௩ரு. பேதுறுதல் - துன்புறுதல்.

௩எ. அன்பு நீங்காத.

௩கூ. அன்னப்பறவை பூமேல் நன்கு அமரும்.

சக. தக்காளில். எய்தலுற - அடைந்து.

சஉ. தன்னமர் - தன்னைவிரும்பிய.

ச௩. வருக்கையாய் - பலாமரமாகி.

## வினை பலாவாகியபடலம்.

க. மான்ற - மயங்கிய. மருமான்- வழித்தோன்றல். எய்ப்பான் - ஒப்பவன்.

உ. மகார் - விநாயகரும் முருகக் கடவுளும். வாஞ்சைநகார் - அன்பில்லாதவர்கள். நயஞ்சார்ந்த காரமிடற்றினன். மான்மியஞ் சிலவற்றை யுரைத்தலால்.

ரு. கரவு - கள்ளம். உரவு - வலி.

சு. அழகிய உவா - அழகுவிநாயகர். சிந்து - ஆறு; கங்கை.

எ. நந்திநாயகன் - திருநந்தி தேவர். மிலைச்சிய - சூடிய. கந்தியா - மணம்வீசி.

கூ. உறுத்தி - வற்புறுத்தி. புனைந்துரையோ - உபசாரமொழியோ. ஒன்றும் - சிறிதும்.

கo. எல்லை - காலம்.

கஉ. கருணையையுடைய வீரசேகரப்பிரான்.

க௩. மூன்று - ஒன்றனைச்செய்கை, வேறொன்று செய்கை, செய்யாதொழிகை என்பன.

கச. பூழியன் - பாண்டியன்; பூழி நாட்டையுடையவனென்று பொருள். பொலம் - பொன். எழூஉ - எழுந்து.

கரு. குரு கையா - நிறத்தைவெறுத்த. பெருக்கை - பெருத்தல்.

கசு. முதல்வன் - விராட்புருடன்.

கஅ. பயோதரம் - மேகம்; நீரைத் தரித்ததென்று பொருள். மானம் - விமானம்.

ககூ. உள் ததும்பி. குட்டிமம் - கற்படுத்தபூமி. இசும்பு - வழுக்கு.

உக. தாம்பு - சலதாரை.

உஉ. பந்தம் - சம்பந்தம்.

உ௩. அள்ளிக்கொள்வார்.

உச. உழை - மான்.

உரு. கருவருந்தல் அற்று - பிறவியால்வருந்துதலை ஒழிந்து.

௨௬. உத்தாலகவனமோ - திருக்குற்றாலமோ. உத்தாலகம் - ஒருவகை மரம். திருக்குற்றாலத்துள்ள ஸ்தல விருக்ஷங்களுள் குறும்பலாவும்ஒன்று.

௨௭. பேதைமையையுடைய யாம்.

௨௮. கிறி - பொய், வஞ்சனை. கிடைத்தான் - கிட்டினான்.

௨௯. கச்சம் - அளவு. எச்சன் - திருமால்.

௩௧. உரு - உருவும் தொழிலு முருத. சிரல் - மீன்கொத்து குருவி.

௩௨. கிராதன் - வேடன். சிந்து மேதனென்னும் வேடன் கூறக் காட்டையழித்துக் காஞ்சிநகரத்தைப் புதுப்பித்தவன் கரிகாற்சோழன்; இதனைப் பெரிய புராணம், திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்திலுள்ள 'என்றுமுள்ள' என்னும் அடு-ம் செய்யுளாலும், காஞ்சிப்புராணம் இரண்டாவது காண்டத்துள்ள நகரேற்று படலத்தாலுமுணர்க.

௩௩. பொறியிலேன் - அறிவில்லாதேன்.

௩௫. உலகெல்லாம் இன்னும் பத்திசெய்து பழுது தீர்தரும் என்க.

௩௬. பாகல் - பலா. தெவ்வின் - கொண்டால்.

௩௭. காயவாக்கு - ஆகாய வாக்கு.

௪௨. ஒங்கப்பண்ணி.

௪௫. வடதிசைக் கோமகன் - குபேரன்.

## குபேரன்பூசித்தபடலம்.

௩. மாதவத்தைஆற்று.

௪. அந்தை - அகந்தை.

௭. விறப்பு - நடுக்கம்.

௧௩. அவதி - வருத்தம், எல்லை.

௧௫. ஒன்பது-அருவத்திருமேனி ௪, உருவத்திருமேனி ௪, அருவுருவத் திருமேனி ௧. எட்டு - அட்டமூர்த்தம். ஆறு - ஆறத்துவா. பூட்சி - உடம்பு.

௧௮. ஐ உணர்வு-அழகிய உணர்வு. தொழ மாயும் எய்தும் ஆகும்

௨௦. எண்ணிய - எண்ணியவற்றை. ஆர்தர - நிறைய.

௨௭. எட்டை - இளைப்பு.

௩௦. உணர்பாக்கு - உணரும் பொருட்டு.

௩௧. சோ - மதில்.

௩௨. குருந்தவனம் - திருப்பெருந்துறை. சிறுமருதவனம் - கண்டதேவி. வன்னிவனம் - கோயிலூர்.

௩௬. முன்னவழிபாடு - குறித்தலையுடையவழிபாடு. முளை - பிள்ளை.

௩௮. அஞரற்ற - துன்பமற்ற.

௪௨. அன்பினன் - குபேரன்.

௪௪. மீக்கழிய - மேலோங்க.

௪௬. வெள்ளாறு முதலிய நான்கையும் முறையே வடதிசை முதலிய நான்கிற்கும் எல்லையாகக்கொள்க.

௪௮. வீணை - வீணைநகர்.

௪௯. ஒளியை வீசுகின்ற இல்லையுடைய.

௫௧. ஓர்த்த - உணர்ந்த. ஆர்த்து - நிரப்பச் செய்கின்ற.

௫௪. மணியன்னார் - சிவபெருமான்.

௫௫. சந்தவாரணம் - அழகுவிநாயகர்.

௫௬. நிதிமன் - குபேரன். ஆலயம் புகுந்தனன்.

௫௭. மலரைச்சிந்தி. அந்தில் - அசைநிலை.

௫௮. உறை - துளி. முதுக்குறைத்துறை - பேரறிவின் வழி.

௬௧. ஆறுகால் - வண்டு. நீ அமர் பதிப்பேர் - அளகை யென்பது.

௬௨. நோன்மை-வலிமை. ஓதலின் மாயா - சொல்லுதலின் முடிவுபடாத.

## சத்தியபுட்கரிணிப்படலம்.

௧. விண்டு - மூங்கில். பண்மலர் - இசைபரந்த. கண் மலரென்பது சிலேடை; இதைப் பூமுதலியவற்றோடு முறையே கூட்டி, கள் மலர்ந்த, கணுக்கள் மலர்ந்த, கண்ணைப்போலே மலர்ந்த, இடங்கடோறு மலர்ந்த, கண்ணுக்கு

மலர்ந்த, கணுக்களில் மலர்ந்த, தாக்ஷிணியம் மலர்ந்த, அறிவு மலர்ந்தவென்னப்பொருள்கொள்க.

௨. வண்டலமருமென்பது சிலேடை; பூவில் வண்டு அலமரும், புன்னையில் வண்டு அலமரும், (வண்டு - வளையல்). குழாத்தில் வண்டல் அமரும், (வண்டல் மகளிர்விளையாட்டு), நீராற்றில் வண்டல் அமரும், நீர்த்துறையில் வண்டு அலமரும்; (வண்டு - சங்கு).

௩. நினைவார்க்குத் தழைத்த வளமீயும். பிழைவளம்-குற்றத்தின்மிகுதி.

௫. அக்காலே ஒருவன்மேவ.

௬. கடையர் உள்ளத்தேகுறியாத.

௭. குடஞ்சுட்டு - பசுக்கள். இலச்சினை - அடையாளம்.

௮. என் ஆ இது இது என்க. புலச்சிறுமையர் - சிற்றறிவினோர்.

௯. அண்டன் - இடையன்.

௧0. கழிபொருள்-மிக்கபொருள்.

௧௧. தொறுவன் - இடையன்.

௧௨. எனவே-என்னுடையனவே.

௧௩. என்று துணிந்தான்.

௧௪. என வன் கோடு - பன்றியினது வலியகொம்பு. கோன் அவன் - கோனகிய அவன்; பாண்டியன்.

௧௫. தோடம் - தோஷம். முழுகும் - ஏவற்பன்மை.

௧௯. இளமையைப்பெற்று. சாந்தும் - சந்தனமும்.

௨0. இவரென்றது, அந்தணனை. நீலகண்டரொத்தனர் - திருநீலகண்டநாயனாரையொத்தார்; குளத்தில் மூழ்கி இளமைபெற்றது பொதுத்தன்மை.

௨௧. வெதிர்ங்குழல் - வேய்ங்குழல்; வெதிர்-மூங்கில். மகன் - இடையன். நவில் எல்லாம் - சொல்லப்படும் எல்லாப் பசுக்களும்.

௨௩. தண்டியடிகளுயனுரோடு சபதஞ்செய்து. கமலக்கோடு - திருவாரூரில் கமலாலயமென்னும் தீர்த்தத்தின் கரையில்.

௨௪. இயம்பினன்றனைக்கூடும் வண்ணம் ஆன்பத்தும் கொடுப்பாயோ.

௨௫. பொருவிலி - சிவபெருமான்.

௨௭. பறிவில்லான் - பொன்மயமான வில்லையுடைய சிவபெருமான். கொத்தை - குருடு.

௨௮. இலையெனின் - குருட்டுத்தன்மை நீராதாயின். வீதலின் - இறத்தலைக் காட்டிலும்.

௩௧. முன்னும் - கருதுகின்ற.

௩௨. வாரி விரவலுற்று அமைந்தார்.

௩௩. எண்மையாக அளிக்கும்.

௩௪. கறைஅவன் ஆதரியாதது உணர்ந்து - குற்றத்தை அவன் ஆதரியாமலிருப்பதை அறிந்து. ஏர்நிறைய- அழகுநிறைய.

௩௫. மேனியில் விபூதியையுடையீர்.

## திருமால்பூசித்தபடலம்.

௧. கொள்ளிய - கொள்ள. குரை - ஒலி. உள்ளிய - எண்ண. கிடை - கிடத்தல்.

௩. நாயன் - தலைவன். படர்ந்தான் - எண்ணினன்.

௫. வெண்ணீற்றினல். முன்னுரு- பழையவெள்ளையுரு. நல்லை-நல்லாய்.

௬. காலத்தில் உற்றனன்.

௯. கோ - கண்.

௧௨. கணி - மாலை.

௧௩. நோய் வெய்து. என்று ஒழிவேன்.

௧௪. மாதரம் - மிக்க உயர்ச்சி. ஓது அர.

௧௭. இருந் தவர் - பெரிய தவத்தையுடையோர்.

## வீரராகவப்படலம்.

௨. மார்த்தாண்டன்குலம் - சூரியகுலம். அயன் - அஜ மகாராஜன். தந்தவளா - யானை.

௩. மாடு - திரவியம்.

௪. வயிறுவாய்த்தனள் - பெற்றனள்.

ரு. காதிமகன் - விசுவாமித்திரன். இளவல் - இலக்குமணன். கல் - அகலிகையின் கல்வடிவம்.

சு. தனு - வில், சரீரம். நகர் - அயோத்தி. ஒருவில்லென்றது, பரசுராமன்வில்லை.

எ. ஒருவேடன் - குகன். அளமரு - சுழன்ற.

கூ. பறவை - சடாயு.

க0. வாலியின் ஊனை. அரிமகன்- வாயுவின் புதல்வனான அனுமன்.

கங. பைத்தலத்தின் - படத்தையுடைய ஆதிசேடனது உடம்பிடத்தில்.

கச. கடிய வீ - வாசனையையுடைய மலர்கள்.

கசு. கந்து - குற்றம்.

கஅ. பண்ணும் இசையும்; பின்னுள்ளனவற்றையும் இங்ஙனமே உம்மைத் தொகையாகக்கொள்க.

ககூ. கரி அதள் - யானைத்தோல். வையம் மிசை நடாய் - பூமியாகிய தேரை ஆகாயவழியே நடத்தி.

உ0. வரை - வெள்ளியங்கிரி. பொன் - மாங்கலியம்.

உக. மருவு அலரும் - மருவிய பழிமொழியும். பராபவமும் - அவமானமும். அல்லாந்து - மனஞ்சுழன்று; வேறுபாமாலை, பொதுவியற்படலம், "ஆயா தறிவயர்ந் தல்லாந்து".

உங. வீரை - கடல்.

உச. நார் - அன்பு.

## பெருமான் பொதிசோறு நிவேதனஞ்செய்தபடலம்.

க. மூந்நூறு மறையோர் - மூந்நூற்றுவர்; இவர்கள் திருப்பெருந்துறையில் ஸ்ரீ ஆன்மநாதக்கடவுளைப் பூசிப்பவர்கள்; தில்லை மூவாயிரவர்களைப் போன்றவர்கள். இவர்கள் வரலாற்றைத் திருப்பெருந்துறைப் புராணத்துள்ள பெருந்துறைப்படலத்தாலுணர்க. கொன் - பெருமை.

உ. விளர் - உள்ளீடின்மை.

ங. சிறுவர்க்கூட்டி - சிறுவர்களைச்சேர்த்து. சிவபெருமான் அந்தணச்சிறுவர்களைக் கூட்டி வேதம் ஓதுவித்தஇடம் இப்பொழுதும் பள்ளிக்கூடமென்றபெயரோடு திருப்பெருந்துறையிலுள்ளது.

அ. சமம் - நிறைவு. கலாய்த்திடுதல் - கலகம்புரிதல். தமம் - இருள். செவ்விய குங்குமச்சாந்தை அணிந்த தோள்.

கங. பொதிசோறு - கட்டமுது.

கச. ததி விரவிய சொன்றி - தயிரன்னம். பொம்மல் - சோறு. நீறுபூத்துப்பொருமுகாய் - கூசுமாண்டம். அபூபவர்க்கங்கள் - அப்பவர்க்கங்கள்.

கரு. பாதக்காப்பு - பாதரக்ஷை. ஆதவம் - வெயில். வேணுத்தண்டு - மூங்கிற்றண்டு.

கசு. தம் கண் உறு மணி-உருத்திராக்ஷமணி. வேத்துவேதியர்- தலைமை வாய்ந்த வேதியர்.

கஎ. வெதிர் - மூங்கில்.

உக. இடஞ்செய்து -ஸ்தலசுத்திசெய்து. கலம் திருத்தி - உண்ணும் பாத்திரத்தைச் சுத்திசெய்து.

உஉ. யாப்பு-கட்டு. புளி மடை - புளியன்னம். ததி மிசை - தயிரன்னம்; மிசை - உணவு. மதிசெயும் - மதித்தல்செய்யும்.

உச. இஃது -இவ்வுணவு. பதம்- பக்குவம். சுதை - அமுதம்.

உரு. பாகு அடை - பாக்குவெற்றிலை. எழீஇ - எழுந்து.

உஎ. ஆம் இலாப்பூமி - நீரில்லாத பூமி. வெட்டின் வாய் நறுநீர் பகும் - வெட்டிய இடத்தில் நல்லநீர் உண்டாகும். விரசுதல்-கலத்தல். வேந்து-அரசன்; எழுவாய். புரசு - ஒருவகைமரம்.

உஅ. அனையர்-விரோதிகள். வல்லியம் - புலி. மண் தொடு கருவி - மண்வெட்டி. கல்லிய - கல்லும்படி.

உகூ. ஒழுகி - சென்று.

ங0. அக்கான் பெருந்துறைப் பெயர் சார்ந்தன்று - அந்தக்குருந்தவனம் பெருந்துறை யென்னும் பெய

ரைச் சார்ந்தது; இதுகாரணம் பற்றி வடநூலில் அத்தலம்'பிருகத்தீர்த்தம்' என வழங்கும். இச்செய்யுளின் ௪-ம் அடி, "முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ" என்னும் பெரிய புராணக்கருத்தைத் தழுவியிருத்தல் காண்க; (திருவாரூர்ச் சிறப்பு, ௬௭).

௩௧. அறத் தேம்பி - மிக வாடி. சுடர் - தீபம்.

௩௨. உண்மையை. பிறை - நகைக்கம்.

௩௩. பின்னிரண்டடிகள் முறை நிரனிறை. திருப்பெருந்துறையில் மூலஸ்தானம் அருவமாதலால், கருத்திற்கண்டு என்றார்.

௩௪. முழவு - மத்தளம். பூமி வேதியரது - பூமியானது வேதியருக்கு உரியது.

௩௫. நறு - தேன்.

உமையாண்டாள் மகிமைப்படலம்.

௧. உறந்த-மிகுந்த. ஒருமலரிட்டவர்களுங்கூட இந்திரனுவார், பிரமனுவார், திருமாலாவார்.

௪. இக்கோயிலைச் சூழ்ந்தவர்களை எல்லாரும் சூழ்வார்கள்.

௫. முயலகன் - ஒருநோய்.

௬. இன்று - இல்லாமல். சரமம் - முடிவு.

௭. நக - விளங்க.

௯. பிருகுவின்வாரம் - வெள்ளிக்கிழமை. வந்தி - மலடி.

௧0. இருந்து இயம் முழக்குமாறும். ஈகை - பொன்.

௧௨. கொள்ளிய - கொள்ள. எள்ளிய - இகழ.

௧௪. மாமைச்சுவைம அடை - பேரழகின் சுவையையடைந்த.

௧௫. தெவ்வெல்லாம் - பகையை யெல்லாம்.

௧௬. துரோணமாலை - தும்பை மாலை.

௧௭. குறடு - கட்டை.

௧௮. வில்லம் - வில்வம்.

௧௯. மனு - மந்திரம். எல்-ஒளி.

௨0. மஞ்சுரம்-திலகப்பூ; "இலக்கமஞ் சுரங் கொண்டே யெழில்வர வருச்சிப் போர்க, ளலக்கண்வல் வினையினீங்கி யிலக்கத்துக் கதிபராவர்" என்பது திருக்குடந்தைப்புராணம், மங்களநாயகி மகிமைப்படலம், ௨௬. இட்டோருடைய இல்லில். ஆக்கம் - திருமகள்.

௨௧. தன் கருமம் - தன்னுடைய நித்தியகன்மங்களை.

௨௨. பெட்டு - விரும்பி.

௨௩. வாரிசம்-தாமரைப்பூ. வியாளம் - பாம்பு. இராசி - பன்னிரண்டு ராசிகள். சூல்முதல் கும்பம் ஈறாகவுள்ள பொருள்களின் வடிவாகச் செய்த தீபங்கள்; இங்ஙனம் தீபங்கள் செய்வித்தல் மரபு; "நாகமொண் பதுமஞ் சூல நலஞ்செய்கோ புரமால் யானை, மேகமண் டலத்தும் பாய்மா விளங்குமண் டபமி ராசி, சேகறு புருடன் வாவி திகழ்கும்ப மாதி தீப, மோகமார் கைலை வைக்கு மூன்றனைக் கோடி கற்பம்" என்னும் திருக்குடந்தைப் புராணச் செய்யுளாலு முணர்க; மங்களநாயகி மகிமைப்படலம், ௨௮.

௨௪. முகுத்தம் - முகூர்த்தம்.

௨௬. எய்ப்பினில் - இளைப்புக்காலத்தில்.

௨௭. அலம் - அமைதி.

௨௯. புலம் - வயல். அறை-புகழ்.

௩0. கண்ணுதல் - கருதுதல்.

௩௨. காயவாணர்கள் - ஆகாசவாசிகள்.

௩௩. பணிக்கும் - ஏவல்கொள்ளும். மருங்கு - இடை. நின - நின்னுடைய.

௩௪. பஃறுதிகள் - பலதுதிகள். கன்று - அடிப்பட்ட.

௩௫. கலிதரு - முழங்குகின்ற.

## தலமுதலிய விசேடப்படலம்.

க. கொங்கை - மணத்தை. செங்கையாமலகம் - கரதலாமலகம்.

உ. படர்ந்து - சென்று. காரை - மேகத்தை.

ரு. அகழ்ந்தார் - திருமால். பறந்தவர் - பிரமதேவர்.

சு. கந்தம் - கிழங்கு. வந்ததே-காற்றையே; அது-பகுதிப்பொருள் விகுதி.

எ. சிலவருடமேனும் வசித்திடல், வசித்திடல் - வியங்கோள். மன்னல் - மன்னுக; வியங்கோள்.

கூ. அணிய=அண்ணிய - சமீபித்துள்ள.

க0. பற்று - விருப்பம்.

கரு. சிந்திய - சிந்த.

கஎ. விண் நுதல் - விண்ணுலகம் கருதுகின்ற.

கஅ. சந்தம் - அழகு.

உ0. ஆண்டின் தோற்றம் - வருடப்பிறப்பு. மதித் தோற்றம் - மாதப்பிறப்பு. விடு - சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு புண்ணிய காலங்கள்.

உக. பறைதரும் - கெட்டு ஒடிவிடும். தூலம் - பஞ்சு.

உச. பத்திமையால் - பத்தியால்.

உசு. தோற்போர்வை தன்னை மண்ணுறிகொண்டு சுத்தியாக்கி. கலை-வஸ்திரம்.

உஎ. வாரம் - உரிமை.

உஅ. மருப்பொருள் - மருவிய பொருள்.

ஙக. கா - சோலைகள்.

ஙஉ. ஒருபவம் - ஒருபிறவி. தோம் - குற்றம்.

ஙங. நத்தம் - இருள்.

ஙச. திறி - பாதுகாப்பு.

ஙசு. தகர்=தகர்தல் - கெடுதல்.

ஙஎ. மதாணி - பதக்கம். பொன்னலாகிய வாகுவலயம்.

ஙஅ. நாணம் - புழுகு. வைப்பில்.

ச0. அதீதர் - எட்டாதவர்.

சக. ஆனநெய் - பசுநெய். எண்ணுள். சிவசாரூபம் பெறுவார்.

சஉ. மஞ்சு - மேகம்; அழகுமாம். அழகிய சடைமுடி. பெருநீர்- கங்கை. தஞ்சு அடைபவரை - பற்றுக்கோடாக அடைபவரை.

சச. நன்கு ஆற்றல் வேட்பரோ.

சஎ. மேதகாய் - மேதகையே.

சஅ. நகவில் - மலையாகியவில். உகவு - உகுதல்.

ரு0. மாது - திருமகள். மாது அமர்ந்திருப்பாள்.

ருக. மன்றில் அவர் இனிது எடுத்த குஞ்சிதத் தாள் வாழ்க.

---

அழகு விநாயகர்துணை.

V. B. SUBRAHMANYASARMA

## பிழையும் திருத்தமும்.

| பக்கம். | பாடல். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| கூ | ஙச | ங | லென்றுந் | லென்று |
| சச | எஉ | ங | கொயைடரு | கொடையரு |

# இந்நூலிலுள்ள
# முக்கியமான பாகங்கள்.

இப்புராணத்தின் எல்லாப்பாகங்களும் படிப்போர்க்கு இன்பத்தை விளைவிப்பனவாயினும் அவற்றுள் சிலபகுதிகள் மிகுந்த ஆனந்தத்தை விளைவிப்பன. அவைவருமாறு:—


| | பக்கம். |
|---|---|
| வீரசேகரர் தழும்புற்றதுதெரிந்து வேடன்மனைவி இரங்குதல். | ௩௨ |
| வேடன் இரங்குதல். ... ... ... ... | ௩௩ |
| அவனுக்குச் சிவபெருமான் அருளிச்செய்தல். ... | ௩௪ |
| சோழராஜனுக்கு வெண்குட்டநோய் தீர்தல்க்கூறுதல்முகமாக வீரசேகரருடைய மகிமையைக்கூறுதல். ... | ௪௩ |
| வீரசேகரரைத் தரிசித்த சோழராஜனுடைய ஆனந்தங்கூறல். | ௪௪ |
| சோழன் துதித்தல். ... ... ... ... | ௪௯ |
| விச்சிரவமுனிவர் குபேரனுக்குச் சிவபெருமானுடைய மகிமையை உபதேசித்தல். ... ... ... | ௬௦ |
| திருமால் துதித்தல். ... ... ... ... | ௭௨ |
| வீரராகவர் துதித்தல். ... ... ... | ௭௬ |
| திருப்பெருந்துறை முந்நூற்றுவர் தம்முட் கூறுதல். ... | ௭௮ |
| வீரசேகரர் பொதிசோறுண்டல். ... ... | ௮௦ |
| உமாம்பிகையின் மகிமை. ... ... ... | ௮௨ |
| உமாம்பிகை துதி. ... ... ... ... | ௮௫ |